

WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

# அகரம்

14. தை - 13. மாசி 2012

சுவடி: 09 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | கர வருடம்




## நன்றித்திருநாள்!

உலகத் தமிழர்களின் உவகைத் திருநாள்

FREE CIRCULATION:
Germany, Switzerland, France, England, Denmark, Norway, Holland, Sweden, Italy, Canada

# Lycamobile
## ஐக்கிய ராஜ்ஜியம்

இங்கிலாந்தில் இருந்து உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்களை மேற்கொள்ள மிக மலிவான கட்டணத்தில் உலகத் தரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே தொலைபேசி லைக்காமொபைல்

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 1p /min | 19p /min |
| இலங்கை | 7p /min | 10p /min |
| இந்தியா | 1p /min | 1p /min |
| மலேசியா | 1p /min | 5p /min |



| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| நெதர்லாந்து | 5p /min | 19p /min |
| அமெரிக்கா | 5p /min | 5p /min |
| கனடா | 5p /min | 5p /min |
| சுவிட்சர்லாந்து | 5p /min | 20p /min |

தற்பொழுது உங்கள் Lycamobile லை மீள்நிரப்பும்பொழுது லைக்காமொபைலில் இருந்து Lycamobile லுக்கு இலவசமான குறுந்தகவல் சேவையும் இலவச அழைப்புக்களும் வழங்கப்படுகிறது.

£5 ⇒ இலவச அழைப்பு 100 நிமிடம் அல்லது 100 குறுந்தகவல் (SMS)
£10 ⇒ இலவச அழைப்பு 250 நிமிடம் அல்லது 250 குறுந்தகவல் (SMS)
£20 ⇒ இலவச அழைப்பு 500 நிமிடம் அல்லது 500 குறுந்தகவல் (SMS)
£30 ⇒ இலவச அழைப்பு 2000 நிமிடம் அல்லது 2000 குறுந்தகவல் (SMS)

## லைக்காவின் தரம் நம்மையெல்லாம் லைக்க வைக்கும் தரம்.

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.co.uk 0207 132 0322**

அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் விசேட விலைக்கழிவு நேரங்களிலும் மற்றும் மாதத்தில் இரண்டு மீள்நிரப்புதலுக்கும் மட்டுமே பொருந்தும் மீள்நிரப்பிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால்லைக்காமொபைல் ப்ளானின் வழமையான கட்டணமான ஒவ்வொரு அழைப்புக்கும் 7p கும் குறுந்தகவலுக்கு 9p கும் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

top-up Sainsbury's TESCO POST OFFICE PayPoint payzone epay Wilkinson Currys phones 4u MORRISONS Aleef Budgens Costcutter

# SHELVAZUG
## செல்வாசுக்

★★★★★

KREDIT+IMMOBILIEN+VERSICHERUNGEN

**SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ**

TEL : 041 790 64 63 FAX : 041 790 64 68 NAT : 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch

ZG ZH AG LU BS BL BE SO FR CH TI GE OW
AR JU VD AL GL NE UR VS SH NW SG SZ TG

- ★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)
- ★ வீட்டுக்கடன் (1.5% இலிருந்து)
- ★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)
- ★ வாகனங்கள் (வாங்க அல்லது விற்க்க)
- ★ ஆயுட் காப்புறுதி
- ★ மருத்துவக் காப்புறுதி
- ★ வீட்டுக்காப்புறுதி
- ★ நிறுவனங்களிற்கான காப்புறுதி
- ★ கட்டிய வீட்டை வாங்க அல்லது வாடகைக்குப்பெற
- ★ புதிதாக வீடு கட்ட
- ★ வீடுகளைத் திருத்திக்கொள்ள









**tMedia Network**

நிறுவனத்தின்



# அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

14. தை - 13. மாசி 2012 | 14. Jan. 13. Feb 2012

சுவடி 09 | Issue 09

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. ஆதவன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)
திரு. அனலை நிதிஸ் ச. குமாரன் (கனடா)

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)

தொடர்புகளுக்கு:
tMedia Network
PO. BOX 4153, 59037 Hamm
Germany

Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556

Email: editor@akaram.eu

**www.akaram.eu**

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.

# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

தை மாதம் தமிழருக்கு நம்பிக்கையின் உச்ச எதிர்பார்ப்பைக் கொடுக்கும் மாதம். முழு உலகமும் புதவருடப் புத்துணர்வில் திளைக்கும் காலமும் இதுவே. புத்தாண்டு வாழ்த்துக்கள் பிரகடனங்கள் பரிசுகள் கூடவே புதுப் பிரச்சனைகளும் வரும். ஆனால் எல்லாவற்றுக்கும் தை பிறந்தால் வழி பிறந்துவிடும் என்ற கனவில் மிதந்து விடுவோம்.

ஆனால் வாழ்வு தூக்கத்தில் வரும் கனவுகள் போல் இல்லாது வலியைத் தரும் நனவுகளாக இருப்பதை நாம் மறந்து விடுகிறோம். சிலர் இன்னும் ஒரு படி மேலே போய் எமக்குத் தீர்வு தருவதாக மந்திரம் மாயம் எமது மதியை மயக்கி மேலும் சிக்கலும் செலவும் ஏற்படுத்தி தமது வருவாயைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

இவற்றில் இருந்து தப்பித்துக் கொள்ள ஒவ்வொருவரும் தமது புத்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு அடிப்படையாக நாம் உலக நடை முறை பற்றிய எமது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். எமது அறிவு உண்மைத் தரவுகளின் அடிப்படையில் தர்க்க ரீதியான முறையில் செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது ஆளுமையும் ஆற்றலும் எந்த எதிர்ப்பையும் சவாலையும் வெற்றி கொள்ள முடியும்.

இன்று வெற்றி என்பது பொய்களின் அறுவடைகளாக மாறி விட்டது. சென்ற நூற்றாண்டில் மிகப் பெரிய இந்திய தேசத்துக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த உண்மையும் அகிம்சை சத்தியாக்கிரகமும் இலங்கையில் திலீபன் முதல் இந்தியாவில் இன்று அன்னா ஹஸாரே வரை சிறு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை. காரணம் அன்பும் அறமும் கோலோச்சிய காலம் அன்று. கறுப்புப் பணம் இலஞ்சம் ஊழல் ஆட்சி உலாவரும் காலம் இது. இவற்றை மூடி மறைக்க ஒவ்வொருவரும் மலையளவு பொய்களைப் பேசித் தள்ளுகிறார்கள்.

பொய்கள் அரசியல் கட்சிகளின் கொள்கைப் பிரகடனங்களாக, இணையத்தள விமர்சனங்களாக, வானொலி தொலைக் காட்சிச் செய்திகளாக, தேசியம் தேசத் துரோகம் என்ற கொட்டொலிகளாக வந்து எம்மை நிலை குலைய வைக்கின்றன. நாமும் உடனடியாக அவற்றால் ஈர்க்கப்பட்டு முடிவுகளை எடுக்கிறோம். அதைத்தான் பொய்களை விதைப்போரும் எதிர்பார்க்கின்றனர், வெற்றியும் பெற்று விடுகிறார்கள்.

அகரம்



FREE MAGAZINE:

GERMANY, SWISS, FRANCE, ENGLAND
NORWAY, DENMARK, SWEDEN,
HOLLAND, ITALY, CANADA

பொய்கள் வெல்லும் போது தர்மமே வெல்லும் என நம்புவோரின் கதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ள நாம் நமது நிலையைத் தெரிந்து கொண்டாலே போதும். ஆனால் நாமே நமது நிலையைத் தெரிந்து கொண்டிருக்கிறோமா? விடை உள்ளே கிரீஷ் ,சங்கீதா பற்றிய செய்தியைப் படியுங்கள்.

அகரத்துக்கு யார் யாரோ எல்லாம் நிதி கொடுக்கிறார்கள் என்ற பிரச்சாரம் நாம் எதிர்பார்த்த ஒன்றுதான். நாம் யாருக்கும் எடுபிடியாக, அவர்களின் கைத்தடியாக இல்லாத வரை இவையும் இருக்கவே செய்யும். இலட்சியப் பற்று மிக்க உறவுகளின் உழைப்பிலும் விளம்பர ஆதரவாளர் தயவிலும் தளர் நடை போடும் அகரத்துக்கு வாசகரான உங்களை விட்டால் வேறு யாரும் இல்லை என்பதே சத்தியமான உண்மை.

எம்மீது எந்த வகையான விமர்சனமும் யாரும் செய்யலாம் அவற்றை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ தபால் மூலமோ எமக்கு அனுப்பி வையுங்கள். தேவையும் தரமும் கவனத்தில் எடுத்து இடம் இருந்தால் பிரசுரிப்போம்.

அகரம் குறிப்பிட்ட அளவே அச்சாகிறது. அதனால் சிலர் தமக்குக் கிடைப்பதில்லை என ஆதங்கப்படுவது தெரிகிறது. எமது "அகரம்" இணையத்தில் அகரம் பெறக் கூடிய வணிகத் தளங்களின் விபரங்கள் உள்ளன. அவற்றில் ஒவ்வொரு மாதமும் 2 வது வாரத்தில் அகரத்தைப் பெறக் கூடியதாக இருக்கும்.


இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
அகரம் குழுமம்!...


**உங்கள் விளம்பரங்களை பதிவுசெய்ய:**
**Mobile: 00 49 1 51 11 55 78 90**

இலவச தமிழ் மாத இதழ்


# தனி மனித சரித்திரம்



**சுட்டும் அனல் விழி வெட்டும் குரல் தொனி**
**எட்டுத் திசை யினும் முட்டும் பகல் ஒளி**
**முற்றம் பகை வர சற்றும் சளைத்திரா**
**வெற்றி நடையிடும் போர் வீரன்.**

**சொல்லில் வன்மையன் உள்ளில் தண்மதி**
**வில்லில் அர்ச்சுனன் அல்லும் ஒய்விலி**
**கல்லில் நார்பெறும் கடமைத் தீப்பொறி**
**தெள்ளத் தெளிந்த நன் நீரோட்டம் .**

**புலத்தில் தமிழ்ப் பல மாகி நிமிர்ந்து நம்**
**களத்தின் அவசியம் உரைத்துத் தமிழ் மன**
**நினைப்பில் வீரியம் ஊட்டி நல் வழியிடை**
**போரை நடத்திய தேரோட்டி .**

**ஈழத் தமிழ் மற வீரப் பரம்பரை**
**ஆளத் தனித்தொரு ஆசை உளம் கொள**
**நீலக் கடல் மடி ஏகி வரும் வழி**
**வீழ்ந்த புலி விதை கிட்டண்ணா....!**

கேணல் கிட்டுவின் 19வது
நினைவெழுச்சிநாள்:

Germany:

16.01.2012 - Bundesallee 160, Berlin
21.01.2012 - Hünefeld Str. 63B, Wuppertal
29.01.2012 - Bremen

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - யேர்மனி

# ஐ.தே.க.யின் கதி த.தே.கூட்டமைப்புக்கும் ஏற்படுமா?

த. எதிர்மன்னசிங்கம்




**1970**ல் ஐ.தே.க. சந்தித்த தேர்தலில் வெறும் 8 ஆசனங்களையே பெற்று அதன் வரலாற்றில் பெரும் சரிவைச் சந்தித்தது. அதனை மீளக் கட்டி எழுப்பி நிறுத்திய பெருமை சஜீத் பிரேமதாசாவின் தந்தை திரு.ஆர்.பிரேமதாசாவையே சாரும்.


ஆர்.பிரேமதாசா

அக்கட்சியின் சாதி வெறி பெரிதும் வெளியே தெரியாது விட்டாலும் பிரேமதாசா சந்தித்த சவால்கள் ஏராளம். ஒரு சிங்களவரைத் தனது நிரந்தரச் செயலாளராக வைத்திருக்க முடியாத அளவுக்கு அவர் நிலைமை இருந்தது.

ஐ.தே.க. தலைவர்களில் வெற்றி பெறத் தவறிய மூவரைக் குறிப்பிட முடியும். அவர்கள் முறையே டட்லி, கொத்தலாவலை, ரணில் எனக் கொள்ள முடியும். இவர்கள் மூவருக்கும் பொதுவான ஒரு குறைபாடாக இவர்கள் சிங்கள வாக்காளப் பொது மக்களோடு தம்மை இணைக்கத் தவறிவிட்டனர் எனலாம். இந்த வகையில் தமிழர் தரப்பில் த.தே.கூ. வைத்துப் பார்க்கப்பட வேண்டிய கட்டாயம் தமிழ் மக்களுக்கு இருக்கிறது. அதற்கான தேவையை தமிழ் சிவில் சமூகத்தின் பகிரங்க வேண்டுகோள் ஏற்படுத்தி உள்ளது.

இலங்கையின் அரசியல் கட்சிகளின் தோற்றமும் வரலாறும் இன்றைய அரசியல் நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறு பட்டவை. இந்தக் கட்சிகள் எவையும் மக்களால் மக்களுக்காக உருவாக்கப் பட்டவை அல்ல. இலங்கை காங்கிரஸ் கட்சி 1920களில் உருவான போது சட்ட நிரூபண சபையில் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் நியமன உறுப்பினர்களாகச் செயற்பட்ட சிங்கள தமிழ் முஸ்லீம் பிரமுகர்களே தமக்கும் அரசுக்கும் தேவையான மூலோபாயமாக இலங்கை காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கினர்.

சர்வஜன வாக்குரிமை அறிமுகப் படுத்தப் பட்டதால் கட்சிகள் பொதுமக்கள் ஆதரவில் உயிர் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குப் பிரபுத்துவ வர்க்கம் மேடை போட்டு மேளம் கொட்டி மக்களைப் பரவசப் படுத்தி வாக்குகளைப் பெற்றனர். கால ஓட்டத்தால் வெறும் பச்சைப் பெட்டி சிவப்புப் பெட்டியில் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் நிலை மாறியது.

உணர்ச்சிப் பேச்சுகளும் வாக்குறுதிகளும் அள்ளி வீசினால் வெற்றி உறுதி என்ற நிலை வந்தது. தமிழ் மக்களிடையே ஜீ.ஜீ., அமிர்தலிங்கம் கண்ட வெற்றிகள் இந்த வகையில் அமைந்தன எனலாம். சிங்கள மக்களிடையே இந்தப் போட்டியில் பிரபுத்துவம் பின் தங்கியதால் மக்கள் அலையோடு ரணில் போன்றோரால் நிலைத்து நிற்க முடியவில்லை.

சிங்கள மக்கள் மத்தியில் முன்னர் ஜே:ஆர். பிரேமதாசாவிடம் எதிர்நோக்கிய சவாலை இன்று ரணில் பிரேமதாசாவின் மகன் சஜீத் பிரேமதாசாவிடம் இருந்து சந்திக்கிறார். அதே நேரத்தில் கிடைத்த போதெல்லாம் ஆதரவு வழங்கிய தமிழர் தரப்பு ஐ.தே.க.வை கைகழுவி விட்டதும் அதற்கு ஒரு பின்னடைவே.

ரணில் தமது தோல்விக்கு மகிந்தவைக் கூறித் தப்பிப்பதை விட தமது இயலாமையை, தமது தவறுகளை ஏற்கும் மனப் பக்குவம் கொள்ள வேண்டும். இக்குறைகள் காரணமாக அவரது தலைமைக் காலம் அதிகம் நீடிக்கும் சாத்தியம் இல்லாத நிலையே அதிகரிக்கிறது. அவரது தோல்விக்கு அவர் இந்தியா அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் முகவராகவே மக்களால் பார்கப்படுவதும் தமிழரின் நண்பர் என்ற கருத்தும் உண்மைக் காரணிகளாகும்.

அத்தகைய நிலைமையை மகிந்த மிக வெற்றிகரமாகச் சாதித்து விட்டார். சிங்களத்துக்குத் தமிழ் இனத்தை வெற்றி கொண்டு அடிமைப் படுத்திய பின்னர் இந்தியாவின் தேவை இல்லாது போய்விட்டது. இந்தியாவை விடப் பலம் வாய்ந்த நாடான சீனாவின் நட்பும் பாதுகாப்பும் ரஷியாவின் கடைக்கண் பார்வையும் மகிந்தரை ஐ.நாவில் கூடப் புகுந்து விளையாடும் அளவுக்கு துணிச்சலைக் கொடுத்துள்ளது.

இன்று இந்தியா அமெரிக்கா பற்றிய பயம் மகிந்தவுக்கும் சிங்களத்துக்கும் இல்லாது போய்விட்டது. எனவே இவர்களின் பொம்மைகளாக விளங்கும் சரத் பொன்சேகா உள்ளே கம்பி எண்ணுகிறார். ரணிலோ தனது பதவி பறி போகும் நாளை எண்ணுகிறார். இந்த இடத்தில் வைத்தே த.தே.கூ. மதிப்பிடப் பட வேண்டும். இவர்கள் தலையால் கிணறு கிண்டினாலும் சிங்களத்திடம் இருந்து ஒரு துரும்பு கூடக் கிடைக்கப் போவதில்லை.

புலிகள் கேட்டதையே இவர்களும் கேட்கிறார்கள் என்ற குற்றச் சாட்டுக்கு இவர்களால் எதிர்வாதம் செய்ய முடியாது. ஏனென்றால் இவர்கள் புலிகளால் புலிகளுக்காக முன்னிறுத்தப் பட்டவர்கள். பஞ்சம் போனாலும்பஞ்சத்தால் பட்ட வசை போகாது என்பார்கள்.

அடிப்படையில் இவர்கள் எல்லாரும் ஒரு காலத்தில் புலிகளின் எதிரிகளே. எனவே தானாகக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவர்கள் புலிகளின் துணை கொண்டே புலிகளின் அழிப்புக்குத் துணை போனார்கள்.

இன்று இந்திய அமெரிக்க பொறியில் விழுந்த எலிகளாக த.தே.கூ. உள்ளனர். எனவே மகிந்த வைத்திருக்கும் ஊசிப்போன அரசியல் தீர்வு என்ற வடையைக் கவ்வுவதா அல்லது எதுவுமே இல்லாது ரணிலைப் போல் அணிலை ஏறவிட்ட நாய் போல் மேலே பார்த்துக் குரைப்பதா? இதுவே த.தே.கூ. இன்றைய நிலை.

த.தே.கூ. தன்னை ஒரு கட்சியாக அடையாளப் படுத்தவே தவியாய்த் தவிக்கிறது. அதே நேரம் புலிகளின் பினாமி தாம் இல்லை என்று நிரூபிக்க ஒரு அக்கினிப் பரீட்சையில் மூழ்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது. அப்போதுதான் அது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வலுவாக முன்னெடுக்க முடியும்.

த.தே.கூ தனது முகத்தைத் திரும்பவும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்றோ அல்லது தமிழ் அரசுக் கட்சி என்றோ மாற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு மாறும் போது அக்கட்சிகளின் உறுதிப் படுத்தப்பட்ட கொள்கைகளாக வடக்குக் கிழக்குத் தாயகம் காணி பற்றிய விடயங்கள் இருப்பதால் அவை புலிகளின் கோரிக்கை எனக் கூறிப் புறந் தள்ளிவிட முடியாது. ஆனாலும் அப்படியான அதிசயம் எதுவும் நடக்கும் வாய்ப்பும் இல்லை.

மக்கள் மயப் படுத்தப்பட்ட கட்சியாக மீளமைப்புச் செய்யும் மன நிலையில் த.தே.கூ. உறுப்பினரில் பலர் இல்லை என்பதே உண்மை. திரு.சம்பந்தன் என்ற பசை உள்ளவரை ஒட்டும் உறவும் இருக்கும். அவர் இல்லாத நிலையில் கட்டவிழ்ந்த நெல்லிக்காய் மூடையாய் த.தே.கூ. சிதறிவிடும்.

இலங்கை அரசியலில் தமிழரின் வகிபாகம் முற்றுப் பெற்று அடிவருடிப் பெறும் அரசியல் முழுமையடையும். அதற்கான தளத்தில் இன்று த.தே.கூ. தமிழ் மக்களைக் கொண்டு வந்துவிட்டது. அடுத்து சிவில் சமூகம் என்ன செய்யப் போகிது?



இல்லத்தரசிகளின் உள்ளங்கள் நாடும்
மளிகை ஸ்தாபனம்

# VS CO CASH & CARRY



197, rue du Fbg St· Denis
75010 Paris
France

Tel: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04



we deliver a wide range of fruit, vegetable and grocery items, food items, non food items, dairy & frozen, soft drinks, see food items, fresh meat, sweet items, kitchen appliances, non kitchen items.




தினமும் தள்ளுபடி விலையில் தரமான
பொருட்களைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

VS CO CASH & CARRY



5%*

50ஈரோவிற்கு மேல் பொருட்களை வாங்கும் அகரம் வாசகர்களுக்கு 5%* சிறப்புத் தள்ளுபடியும் உண்டு! இந்தக் கூப்பனை வெட்டிக் கொடுக்கவும்.

*அரிசி / மது வகைகளுக்கு இக் கூப்பன் செல்லுபடியாகாது.



# ஹிஸ்புல்லாவிற்கு ஏன் இந்தக் "கொலைவெறி"?


—சண் தவராஜா—

"வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பிலான பேச்சுவார்த்தையில் (மகிந்த ராஜபக்ஷ) அரசாங்கம் ஒருபோதும் பங்குபற்றக் கூடாது. அவ்வாறு வடக்கு கிழக்கு இணைப்புக்கு அரசாங்கம் இணங்குமானால் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம்" எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது சொந்த இடமான காத்தான்குடியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர், "இரண்டு மாகாணங்களும் இணைந்திருந்த போது மூவின மக்களும் முட்டிமோதி இரத்த ஆறே ஓடியது. கிழக்கு பிரிக்கப் பட்டதை அடுத்து இன்று அந்த மக்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்" என மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இன முரண்பாட்டுக்கு அடிப்படையாக இதுவரை வேறு எவருமே கூறியிராத ஒரு புதிய காரணத்தைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார் ஹிஸ்புல்லா. அதாவது "வடக்கு கிழக்கு இணைந்திருந்தமையே இரத்த ஆறு ஓடியமைக்குக் காரணம். அது பிரிக்கப்பட்டு இருந்திருந்தால் இரத்த ஆறு ஓடியே இருந்திருக்காது" என்ற அவரின் கண்டுபிடிப்பு நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கக் கூடிய ஒன்று.

வரலாற்று ரீதியாக இணைந்தே இருந்த தமிழர் தாயகமான வடக்கு கிழக்கை குடியேற்றவாதிகளான ஆங்கிலேயர் கூடப் பிரிக்க நினைக்கவில்லை. தமது நிர்வாக வசதிகளுக்காக சிங்களவர்களே அதனைப் பிரித்தனர். இவ்வாறு பிரிக்கப் பட்டிருந்த வடக்கும் கிழக்கும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக சட்டபூர்வமாக இணைக்கப்பட்ட 1987 காலப்பகுதியில் அரசியலுக்கு வந்தவர் ஹிஸ்புல்லா. இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாட் இலங்கையில் காலூன்றிய வேளையில் 1984 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் காத்தான்குடியில் இடம்பெற்ற வீதிமறியல் போராட்டங்களில் பங்கெடுத்தவர் அவர். அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டு பட்டப்படிப்பை முடித்த அவருக்கு வடக்கு கிழக்கு சட்டபூர்வமாக இணைக்கப்பட்டமைக்கு முன்னதாகவே, 1983 இல் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட இனப்படுகொலையின் வரலாறு பற்றியும், அதற்கு முன்னர் காலங்காலமாகத் தமிழ் மக்கள் திட்டமிடப்பட்ட வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் "இனக் கலவரம்" என்ற பெயரில் துன்புறுத்தப்பட்டு வந்தமை பற்றியும் நிச்சயம் தெரிந்திருக்கும்.



அவை மட்டுமன்றி, 1957 இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம், 1965 இல் கைச்சாத்திடப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றவை ஏன் செய்து கொள்ளப்பட்டன, அவை ஏன் அமுல்படுத்தப் படவில்லை என்பதற்கான காரணங்களையும் அவர் கண்டிப்பாக அறிந்திருப்பார்.

இத்தனையையும் அறிந்து வைத்துக் கொண்டு தமிழர்கள் அமைக்கப் போகும் தனிநாட்டில் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளைத் தக்க வைக்கும் நோக்குடன் மர்ஹூம் அஷ்ரப் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசின் ஊடாக அரசியலுக்குள் பிரவேசித்தவர் ஹிஸ்புல்லா. முஸ்லிம் காங்கிரசின் தலைவராக அஷ்ரப் இருந்த போதிலும் பின்னாளில் அதன் தலைமைப் பொறுப்பை ரவூப் ஹக்கீம் ஏற்றுக் கொண்ட காலப் பகுதியிலும், வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் பேசியதில்லை. மாறாக, இணைந்த தமிழர் தாயகத்தில் முஸ்லிம்களுக்குத் தனியலகு அமைத்தல், அல்லது கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரித்துத் தமிழ்ப் பகுதியை வடக்குடன் இணைத்தல், முஸ்லிம்களுக்குத் தனியான நிர்வாகத்தை ஏற்படுத்துதல் என்ற அடிப்படையிலான கருத்தாடல்களே இடம்பெற்று வந்தன.

அரசியல் நோக்கங்களுக்காக தீவிர முஸ்லிம் அடிப்படைவாதியாகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும் தமிழ் மக்களோடு உண்மையான அன்புடன் பழகும் ஹிஸ்புல்லா தன்னுடைய இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அரசியல் வாழ்வில் முன்னர் எப்போதும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராகப் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை.

தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சராக இவர் பதவி வகித்த காலத்தில் தமிழ் மக்களுக்கும், குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் இவர் செய்த உதவிகள் அளப்பரியவை.

அவ்வாறானால், வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக ஹிஸ்புல்லா இன்று இத்தனை ஆக்கிரோஷமாகக் குரல் எழுப்பக் காரணம் எதுவாக இருக்க முடியும்?

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி பற்றிய தனது கனவை கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது அவர் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருந்தார். இவ்வாறு வடக்கு கிழக்கு இணைப்பைப் பகிரங்கமாக அவர் எதிர்க்க இந்தப் பதவி ஆசையொன்றே காரணமாக இருக்க முடியும்.

தற்போதைய நிலையில் கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடாத்தப்படுமானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்து தற்போது ஆளும் அணியில் உள்ள முஸ்லிம் கட்சிகள் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுமானால் தமிழர் அல்லாத ஒருவர் முதலமைச்சராக வரக்கூடிய வாய்ப்பு உள்ளது. இத்தகைய ஒரு நிலையில் அந்த ஒருவராகத் தான் வரவேண்டும் என்பதே ஹிஸ்புல்லாவின் கனவு.

எத்தகைய அரசியல் பின்னணியும் இல்லாத சாதாரண குடும்பமொன்றில் இருந்து அரசியலுக்கு வந்த ஹிஸ்புல்லா, ஒரு கட்டத்தில் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அஷ்ரப்புக்கே சவால்விடக் கூடிய ஒரு அரசியல்வாதி என்ற நிலையை மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவாக்கியிருந்தார். குறிப்பாக காத்தான்குடியில் அவரது

அனுமதியின்றி எதுவுமே நடக்க முடியாது என்ற நிலை இருந்து வந்தது.

அவரை அரசியலில் இருந்து ஒழித்துக்கட்ட முடியாவிட்டால் அவரையே ஒழித்துக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம், மிக இலவசமாக அவற்றிலிருந்து தப்பி, தேவைக்கேற்ப அணிகளை மாற்றிக் கொண்டு தனது இருப்பைத் தக்கவைத்துக் கொண்டு வலம் வருபவர் ஹிஸ்புல்லா.

தனது இளமைக் காலத்தில் தமிழ்ச் சகோதரர்களுடன் அவர் அந்நியோன்னியமாக வாழ்ந்த தருணங்களை மறந்துவிட்டு இன்று வெறும் அரசியல்வாதியாக மட்டும் பேசுவது அவரது தற்போதைய எசமானர்களைத் திருப்திப்படுத்த உதவுமே ஒழிய, அவரது ஆன்மாவை நிச்சயம் திருப்திப் படுத்தாது என நம்பலாம்.

மூன்று தசாப்த காலங்களில் தமிழ் மக்கள் சிந்திய இரத்தம் இன்னமும் தமிழர் தாயகத்தில் காய்ந்து விடவில்லை. சுயநிர்ணய உரிமைக்கான தமது போராட்டத்தில் தமிழ் மக்கள் சிந்திய இரத்தம் தேவையைவிட அதிகம். அதேவேளை, இந்த மண்ணைத் தமிழர்களின் குருதி மாத்திரமன்றி முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களின் குருதியும் நனைத்திருப்பதையும் மறைத்து விடுவதற்கில்லை.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வந்துள்ள இன்றைய காலச் சூழலில் இலங்கையின் இன முரண்பாட்டுக்குத் தீர்வு கிட்டக் கூடிய நம்பிக்கைக் கீற்றுக்கள் தென்பட்டு வருகின்றன. இவ்வாறு வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்து விடுவதற்கு ஒப்ப, விவகாரத்தை மற்றுமொரு கருத்துப் போருக்குத் திசைதிருப்பி விடுவதைப் போன்று ஹிஸ்புல்லாவின் கருத்துக்கள் அமைந்துள்ளமை வேதனை தருகின்றது.

ஒரே மொழியைப் பேசும் தமிழர்களும் முஸ்லிம்களும் அந்நியோன்னியமாக வாழ வேண்டியவர்கள், காலச் சூழல் காரணமாகத் தமிழர்களும் முஸ்லிம்களும் எதிர் எதிர் நிலையில் கடந்த காலத்தில் வைக்கப் பட்டிருந்தாலும் அவர்களது உறவு சகோதரத்துவ அடிப்படையிலானது. அவ்வாறே அது கட்டியெழுப்பப்படவும் வேண்டும்.

கடந்தகால அரசியலில் பல தரப்பினராலும் கையாளப்பட்ட பிரித்தாளும் தந்திரோபாயத்துக்கு இரண்டு இனங்களும் பலியாகியது போதும். இனிமேலும் அவை தொடர இடமளிக்கக் கூடாது.

இன்றைய நிலையில் அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்குடன் நடாத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் தமிழர் சார்பு அணியில் முஸ்லிம்களின் குரலாக சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசையும் இணைத்துக் கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்துள்ளமை வரவேற்கத் தக்க விடயம். இது தமிழ்-முஸ்லிம் மக்கள் பரஸ்பரம் ஒரு-வரை ஒருவர் புரிந்து கொண்டு இரு மக்கள் கூட்டத்தினதும் தனித்தன்மையை மதித்து, என்றென்றும் சகோதரத்துவத்துடன் கைகோர்த்து வாழ நினைப்பதன் அடையாளமாகக் கொள்ளப்பட வேண்டும்.

அதேவேளை, முஸ்லிம்களைத் தமது அரசின் பங்காளிகள் எனக் கூறிக் கொள்ளும் மகிந்த அரசு இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம்களை ஒரு தனித் தரப்பாக இணைத்துக் கொள்ள நினைக்கவில்லை. இது விடயத்தில் அவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதை ஹிஸ்புல்லா போன்றோர் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைத் தீவில் இதுவரை நிகழ்ந்த இரத்தக் களரிகள் போதும். இனிமேலும் அதுபோன்றதொரு நிகழ்வு தேவையற்றது. வடக்கு கிழக்கு இணைப்பு என்பது தமிழ் மக்களின் ஜீவாதாரக் கோரிக்கை. இந்தக் கோரிக்கை சடுதியாகத் தோன்றிய ஒன்றல்ல. தமது அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் நீண்டகாலப் போராட்டத்தின் தொடர்ச்சியாக முகிழ்த்த கோரிக்கை அது. அது சமரசங்களுக்கு அப்பாற்பட்டது. இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் உயிர்களின், கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்களின் இழப்பு, உள்நாட்டிலும், வெளிநாடுகளுக்கும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட இலட்சக் கணக்கான தமிழ் உறவுகளின் துயரம் என்பவை அக் கோரிக்கையின் அடிநாதமாக உள்ளது.

இந்நிலையில், புதிய பிரச்சனைகளைத் தோற்றுவித்து, எதிரியின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இடம் தந்து மற்றுமொரு இரத்தக் களரிக்கு வித்திட்டவர் என்ற அவப்பெயர் ஹிஸ்புல்லாவிற்குத் தேவையற்றது. எனவே, "எப்பாடுபட்டாவது வடக்கு கிழக்கு இணைப்பைத் தடுத்துவிடுவது" எனும் விடயத்தில் அவர் தனது கொலைவெறியைக் கைவிட வேண்டும் என்பதே தமிழ் முஸ்லிம் சகோதரத்துவத்தை விரும்பும் அனைவரதும் வேண்டுகோள் ஆகும்.




உலகப் படைப்பின் ஆதிமூலத்தை அறிவியல் உலகம் அறிந்த வண்ணமே உள்ளது. இதில் மெய்ஞான, விஞ்ஞான ஆய்வுகள் "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதி" யின் மூலத்தை அறியமுயல்கிறது. இந்த அண்டவெளித் தளத்தில் பூமியும் ஒன்று. அதில் ஆதி இனமான தமிழினம், கலை பண்பாட்டு விழுமியங்களால் பல ஆண்டுகள் கடந்து, தடம்பதித்து இன்னும் உயிர்ப்புடன் மிளிர்கிறது.

ஓர் இனம் எங்கு உருவானதோ, அந்தத் தோற்ற நிலைப்பாட்டின் கால, சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதன் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் எனபது அறிவுடன் கூடிய உண்மையாகும்.அந்த வகையில் பகுதுளியாற்றம் கரையில் வளர்ந்து பரவிய தமிழினம். பல துறைகளில் தம்மைப் பண்படுத்தி வளர்ச்சி பெற்ற இனமாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ள மனிதன்,இயற்கைக்குப் பயந்து, "இறைவனை" உண்டாக்கினான் என்கிறது பகுத்தறிவு உலகம். ஆனால் தமிழினம் இயற்கையை உணர்ந்து, அதன் தன்மைகளைப் புரிந்து, வாழ்வை வளப்படுத்திய இனமாகத் தவழுகின்றது. மானுடப்பண்பின் வெளிப்பாடாக, இயற்கை தமக்கு ஆற்றும் நன்மைகளுக்குத் தலைவணங்கினான் தமிழன்.அந்த வணக்கத்தின் முதல் எழுச்சியே, கதிரவனைப் போற்றிப் பொங்கிப்புகழ்ந்த தைத்திருநாளாகும்.

ஆதியில் தமிழன் தைமுதல் நாளையே ஆண்டின் முதல் நாளாகக்கொண்டாடினான். அதன் மூல காரணமாக் கால, பருவ மாற்றங்களைத் தமது வாழ்வியல் தோற்றப்பாட்டிற்கு ஏற்ப வகுத்துக்கொண்டான். பருவ காலங்கள் மழை, வெய்யில், குளிர், பனி தென்றல், வாடை, என மாறிய பருவங்களால், இயற்கை மனிதனை ஆண்டதால், தமிழர்கள் ஒரு வருடத்தை "ஆண்டு" எனப் பெயரிட்டார்கள். ஒரு ஆண்டை, தமிழர்கள் ஆறு பருவ காலமாகப் பிரித்தனர். இளவேனில், முதுவேனில், கார், உதிர்,முன்பனி, பின்பனி, என்பனவே அப்பிரிவுகளாகும். இவற்றில் ஆண்டின் தொடக்கமான முன்பனிக் காலத்தின் தை முதல் நாளையே ஆண்டின் முதல் தொடக்க நாளாக வகுத்துக் கொண்ட வாழ்வியல் காரணமாக அமைந்தது. அத்தோடு தமிழர்கள் "காலக்கணக்கீட்டு" முறைகளாலும் தை முதல் நாளையே ஆண்டின் முதல் நாளாக ஏற்றுப்போற்றினர்.

காலக்கணக்கீட்டிற்கு மூலமாய் ஒளிர்வது சூரியனாகும். பகல், இரவு, கிழமை,மாதம், பருவம், ஆண்டு, எல்லாமே சூரிய இயக்கத்தின் அடிப்படையைக் கொண்டே கணிக்கப்படுகின்றது. சூரியனைச்சுற்றி

பூமியும், மற்றைய கோள்களும் சுற்றினாலும், பூமியில் உள்ளவர்கள் பார்வையில் சூரியன் காலையில் எழுவதும், மாலையில் மறைவதும். சந்திரன் தேய்வதும் வளர்வதும், நட்சத்திரங்கள், கோள்களின் நிலைமாற்றங்கள், மனிதர்கள் பார்வையில் மாறுகின்றன. இந்தப் பார்வையில் தெற்கே சென்ற சூரியன், வடக்கு நோக்கித் திரும்பும் தைமுதல் நாளையே புத்தாண்டின் முதல்நாளாகத் தமிழன் வகுத்துக்கொண்டான். இந்த வடக்குநோக்கிச் சூரியன் திரும்பும் செயல், தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் நிகழ்ந்ததாலும் , வானியல் கணிதப்படி தை மாதத்தில் நிகழ்ந்ததாலும், தை முதல் நாளே தமிழர்களின் புத்தாண்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழரின் புத்தாண்டான தைத்திருநாள் சித்திரைப் புத்தாண்டாய் மாறியது எப்படி? குப்தர் மரபில் வந்த இரண்டாம் சந்திரகுப்தன், தன்பெயரை "விக்கிரமாதித்தன்" எனப் பெயர் மாற்றம் செய்து, தன்பெயரால் "விக்கிரமசகம்" என்ற ஆண்டு முறையை உருவாக்கினான்.வானறிவியல் கண்ணோட்டத்தின் படி ஆராய்ந்த ஆரியப்பட்டருக்கு எதிராக, வானவியல் சாதகம் போன்றவற்றை மாற்றியமைத்தான் அதன் பிரகாரம், தன்குலத்தைச் சேர்ந்த "மிகிரர்" என்பவரை முதன்மைப்படுத்தி விக்கிரமசகம் எனும் ஆண்டுமுரையில் சித்திரை முதல் நாளே, வருடத்தின் முதல் நாள் எனப்பிரகடனம் செய்தான்.இவன் காலத்தில் தமிழரின் தைமுதல் நாள் மறுக்கப்பட்டது. "விக்கிரமசகம்" அறுபது ஆண்டுகளை வரையறுத்து "பிரபவ" ஆண்டில் தொடங்கி "அட்சய" ஆண்டில் முடியும். இவற்றில் ஒருபெயர் கூடத் தமிழில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வடமொழி முறையில் தமிழர் புத்தாண்டைத் தமிழர் கொண்டாடுவது, தமிழர் வாழ்வியலை மறுப்பதற்கு ஒப்பாகும்.

ஓர் இனம் அழியாமல் காக்கப்பட வேண்டுமென்றால், அந்த இனத்தின் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்படவேண்டும். எனவே அந்த வகையில் தைமுதல் நாளே தமிழர் வாழ்வியலோடு ஒன்றிய, தமிழர் வருடத்தின் முதல்நாளாகும்.

## தமிழர் வழிபடும் எந்தச் சாமியுமே தமிழனைக் காப்பதும் இல்லை கண்டு கொள்வதும் இல்லை !



கருணையின் வடிவமான ஏசுவின் பிறந்த நாளான நத்தார் தினத்தை இலங்கை ஜனாதிபதி மகிந்தருடன் கொண்டாடிய கொழும்பு கத்தோலிக்க மேற்றிராணியார் கர்தினால் மல்கொம் றஞ்ஜித் வழமைபோலவே தமது இனவெறியை நத்தார் தின ஆசியாக வெளிப்படுத்தி உள்ளார். கர்தினால் என்ற நிலை அவருக்கு வத்திக்கானில் அதிஉயர் செல்வாக்கு வழங்குகிறது. பாப்பரசர்கள் தெரிவில் இவர் போன்ற கர்தினால்களே வாக்களிப்பின் மூலம் முடிவு எடுப்பர்.

இவரது செல்வாக்கின் மூலம் பாப்பரசர் பல வழிகளிலும் எமது தமிழ் இன அழிப்புப் போருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சர்வதேச அளவிலும் இலங்கை அரசுக்கு ஆதரவு பெற்றுக் கொடுக்க முடிந்தது. இப்போதும் இவர் ஐ.நா. அறிக்கையைக் கண்டித்தும் இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையைப் பாராட்டியும் பேசியதில் ஆச்சரியம் எதுவும் இருக்க முடியாது. ஆயினும் இவரது கருத்து ஐ.நா வரை எதிரொலிக்கும்.

இலங்கை அரசியலில் இந்து மதத் தலைவர்களே சிங்கள அரசுக்கு ஆசி வழங்குவதையே காணும் எமக்கு சிங்களப் பேரினவாதிகள் எம்மாத்திரம்? மொத்தத்தில் தமிழர் வழிபடும் எந்தச் சாமியுமே தமிழனைக் காப்பதும் இல்லை கண்டு கொள்வதும் இல்லை.



## உலகத்தை உலுக்கும் உயிராயுதம். பாகம் - 05

# ஆக்கிரமிப்புப் படைகளும் தற்கொலைத் தாக்குதலும்

பண்டிதர்

ஆரம்பகாலத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாகவும், அதன் பின்னர் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் காலத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் பற்றியும் கடந்த மாதங்களில் பார்த்திருந்தோம். இரண்டாம் உலகப் போரின் பின்னர் இந்தத் தற்கொலைத் தாக்குதல்களின் வடிவங்கள் அல்லது அவை தொடர்பான பொதுவான அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக இந்த வாரத்தில் பார்ப்போம். தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாக மேல்நாட்டு ஆய்வாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பில் எமது கவனத்தைச் செலுத்திய பின்னர் விடயத்துக்குச் செல்வது பொருத்தமானதாக இருக்கும்.

தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாகக் குறிப்பிடும் மேல்நாட்டு ஆய்வாளர்கள் அதனை 'தற்கொலைப் பயங்கரவாதம்'என்ற சொல்லைப் பயன்படுத்தியே அழைக்கின்றார்கள். தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பலவற்றிலும் கூட, இந்தச் சொற்றொடரே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இருந்த போதிலும் இந்தச் சொற்பிரயோகம் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒன்றாக இருக்கவில்லை. பயங்கரவாதம் என்ற சொல்கூட நடுநிலை ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றாக இருக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த நிலையில், பயங்கரவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது தொடர்பில் 2005 ஆம் ஆண்டில் கருத்துவெளியிட்ட ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், "அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன், பொதுமக்கள் அல்லது போரில் சம்பந்தப்படாத தரப்புக்களுக்கு மரணத்தை அல்லது காயத்தை ஏற்படுத்துதல் பயங்கரவாதம் எனப்படும்" எனக் குறிப்பிட்டார். இதன்படி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என்பது தற்கொலைப் பயங்கரவாதம் என்பதிலிருந்தும் வேறுபட்ட ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் போரில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பின் மீது தாக்குதலை நடத்துவதற்குத் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் பயன்படுத்தப்பட்டிருப்பின் அது பயங்கரவாதமாகாது. உண்மையில் அது போரின் ஒரு அம்சமாகவே கருதப்பட வேண்டும்.

தற்கொலைத் தாக்குதல் என்பது வெறுமனே போரில் சம்பந்தப்பட்டவர்களை மட்டும் இலக்கு வைத்ததாக இருப்பதில்லை. சம்பந்தப்படாதவர்களை இலக்குவைக்கும் போது அதனைப் பயங்கரவாதம் என ஏற்றுக்கொள்ளலாம். இருந்தபோதிலும் கூட இந்த வரைவிலக்கணம் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இல்லை. தற்கொலைத் தாக்குதல் என்பதை ஒரு பயங்கரவாத நடவடிக்கையாகக் காட்டிக்கொள்வதன் மூலம், அவ்வாறான தாக்குதலின் பின்னணியில் இருக்கக்கூடிய நியாயத் தன்மையை மழுங்கடித்துவிடுவது இவ்வாறான விமர்சனங்களை முன்வைப்பவர்களின் உபாயமாக இருந்திருக்கலாம்.

போரொன்றின் போது, களமுனையில் சமபலம் காணப்படாத நிலையில், பலம் குன்றிக்காணப்படும் பிரிவினர் எதிர்த் தரப்பை நிலைகுலையச் செய்வதற்குத் தற்கொலைத் தாக்குதல் உபாயத்தைக் கையாள்கின்றார்கள். சக்திவாய்ந்த குழு ஒன்றின் நடவடிக்கை அல்லது கொள்கைக்கு எதிராகவும் கூடத் தற்கொலைத் தாக்குதல்கள் பயன்படுத்தப்படலாம்.

இவ்விடத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால், சக்திவாய்ந்த குழு ஒன்று அல்லது தரப்பு தமது இலக்கை அடைவதற்கான ஒரு உபாயமாகத் தற்கொலைத் தாக்குதல்களைக் கையாள வேண்டிய அவசியம் ஒருபோதும் ஏற்படுவதில்லை. ஏனெனில் அந்த இலக்கைத் தமது பலத்தைப் பயன்படுத்தியே அவர்களால் அடையக்கூடியதாக இருக்கும். அதனால், தற்கொலைத் தாக்குதல் உபாயத்தைக் கெரில்லாக் குழுக்களும், அரசைச் சாராத ஆயுதக் குழுவினருமே பயன்படுத்தி வருவதைக் கடந்த காலங்களில் எம்மால் காணக்கூடியதாக இருந்தது.

அதாவது பலம்வாய்ந்த அரசை, அல்லது அரச படைகளை, அவற்றின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதற்கான இராணுவ வல்லமையைக் கொண்டிருக்காத நிலையில் கெரில்லாக் குழுக்கள் தற்கொலைத் தாக்குதல்களைத் தமக்கான ஒரு போரியல் உபாயமாகக் கையாளத் தொடங்கியிருந்தன. இரண்டாம் உலகப்போரின் பின்னர் போர் முனைகளில் காணப்படும் ஒரு பண்பாக இது இருக்கின்றது.

தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்ட சிக்காகோவைச் சேர்ந்த றொபேர்ட் பாப் என்பவர், அண்மைக்காலத்தில் - அதாவது கடந்த சுமார் மூன்று தசாப்த காலத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் பெரும்பாலானவை ஒரே நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகின்றார். அதாவது சர்ச்சைக்குரிய நிலப் பகுதி ஒன்றிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதை நோக்கமாகக் கொண்டே பெரும்பாலான தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்கொலைத் தாக்குதல்களில் 95 வீதமானவை இவ்வாறு ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரானவையாகவே இருந்திருக்கின்றன என்பதுதான் அவரது ஆய்வின் முடிவு.

தற்கொலைத்தாக்குதல்களைப்பொறுத்தவரையில் 1980 க்கும் பின்னரான காலத்தில் அதில் தீவிரமான அதிகரிப்பு ஒன்றைக் காணக்கூடியதாக இருந்தது. இரண்டாம் உலகப்போரின் பின்னரான காலப்பகுதியைப் பார்த்தால் 1980 க்கு முன்னரான காலப்பகுதியில் தற்கொலைத் தாக்குதல்கள் அதிகளவுக்கு இடம்பெற்றிருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். 1980 க்குப் பின்னர் கொதி நிலையில் காணப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளிலும், இலங்கை போன்ற உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த நாடுகளிலுமே அதிகளவுக்குத் தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

1980 களில் வருடத்துக்கு 5 க்கும் குறைவான தற்கொலைத் தாக்குதல்களே இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் வருடமொன்றுக்கு சுமார் 180 எனக் கூறுமளவுக்குத் தற்கொலைத் தாக்குதல்கள் அதிகரித்திருந்தன. 2001 ஆம் ஆண்டு 81 தற்கொலைத் தாக்குதல்கள் உலகம் முழுவதும் இடம்பெற்றிருக்கின்றது. 2005 இல் இத்தொகை 460 ஆக அதிகரித்திருக்கின்றது.

இவ்வாறு அதிகரித்திருக்கும் தற்கொலைத் தாக்குதல்கள் இராணுவ, பொருளாதார மற்றும் பொதுமக்களின் இலக்குகளைத் தாக்கியழிப்பதையே நோக்கமாகக்கொண்டிருந்தன. இந்தக் காலப்பகுதியில் இலங்கையிலும் இஸ்ரேலிலுமே இவ்வாறான தாக்குதல்கள் அதிகளவுக்கு இடம்பெற்றிருக்கின்றன. ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்துக்கொண்ட பின்னர் அந்நாட்டிலும் இவ்வாறான தாக்குதல்கள் பெருமளவுக்கு இடம்பெற்றிருக்கின்றன. 2001 க்குப் பின்னர் பாகிஸ்தானிலும் தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றது. அதேபோல 2005 க்குப் பின்னரான காலப்பகுதியில் ஆப்கானிஸ்தானிலும், சோமாலியாவிலும் தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் பல இடம்பெற்றிருப்பதை தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

1980 க்கும் 2000 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினராலேயே அதிகளவுக்குத் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உலகிலுள்ள ஒன்பது பிரதான தீவிரவாத அமைப்புக்களால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களைவிட இரண்டு மடங்கு தற்கொலைத் தாக்குதல்கள் இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டுள்ளதாக விக்கி பீடியாவில் வெளியாகியிருக்கும் தகவல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், 2003 மாச் மாதத்துக்கும் 2010 டிசெம்பர் 31 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஈராக்கில் சுமார் 1,000 தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

செச்சென்யாவிலும் பெருமளவு தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் ரஷ்யப் படையி-னரை இலக்கு வைத்து நடத்தப்பட்டுள்ளன. ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதிலும், ரஷ்யப் படைகளை இவை நிலைகுலையச் செய்வதாக அமைந்திருக்கவில்லை. 2010 இல் இடம்பெற்ற மொஸ்கோ மெட்ரோ குண்டுத் தாக்குதல் உட்பட மொஸ்கோவில் இடம்பெற்ற பயணக் கைதிகள் பிரச்சினை இரண்டுக்கும் செச்னிய கிளர்ச்சியாளர்களே காரணமாக இருந்துள்ளார்கள்.

இதனைவிட உலகின் சக்திவாய்ந்த நாடுகளாகக் கருதப்படும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் கடந்த பத்துவருட காலப்பகுதியில் தற்கொலைத் தாக்குதல்களுக்கு இலக்கான நாடுக-ளாகவே உள்ளன. 2001 செப்டம்பர் 11 ஆம் திகதி அரிக்காவின் நியூயோர்கிலுள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகியது. உலகில் இடம்பெற்ற மிகப்பெரிய தற்கொலைத் தாக்குதலாகக் கருதப்படும் இச்சம்பவத்தில் சுமார் 3,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 2005 ஜூலை 7 ஆம் திகதி லண்டனில் இடம்பெற்ற தொடர்குண்டுத் தாக்குதல்களில் 52 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த வகையில் தற்கொலைத் தாக்குதல்கள் என்பது மேற்கு நாடுகளையும் அச்சுறுத்தும் ஒன்றாக வளர்ந்துவந்திருக்கும் நிலையைக் கடந்த ஒரு தசாப்த காலத்தில் காணக்கூடியதாக இருந்தது. தற்கொலைத் தாக்குதல்கள், மற்றும் தீவிரவாதம் என்பன தமக்கு எதிராகத் திரும்பலாம் என்பதால்தான் இவற்றுக்கு எதிராக மேற்குநாடுகள் தமது போரைப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் முன்னெடுத்தன. இதன்மூலம் உண்மையான பயங்கரவாதம் மட்டுமன்றி, உண்மையான விடுதலைப் போராட்டங்களும் அழிவை நோக்கிச் சென்றுகொண்டுள்ளன.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் தற்கொலைத் தாக்குதல்கள் எவ்வாறான நோக்கங்களைக் கொண்டவையாக இருந்துள்ளன என்பதை மிகவும் சுருக்கமான முறையில் இம்மாதக் கட்டுரையில் பார்த்தோம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் சற்று விரிவான முறையில் அடுத்த மாதத்திலிருந்து பார்க்கவுள்ளோம்.



# PAGEVISION IT AG

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

www.pagevision.ch
info@pagevision.ch

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02



CHF 109.- inkl. MwSt.

எம் ஊடாக VOIP TELEFON இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Tellstr. 31/ Ecke Militärstr. 106
8004 Zürich

உலக ஓட்டத்திற்கு ஏற்ப உங்கள் வீடுகளிலும் நவீன கணனி முக்கியம் என்பதை நாம் அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550
  PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

**CHF 1'190.- inkl. MwSt.**

# return'IT

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

www.pckaufen.ch



CHF 110.- inkl. MwSt.

**DELL Precision 380**
Intel Pentium IV - 2.80GHz
160GB Festplatte, 7200RpM, S-ATA
RAM 1GB DDR2 RAM
DVD/CD-RW, Floppy
Grafikkarte: Nvidia Quadro FX1400 - 128MB
Windows XP Professional Lizenzkleber

**HP DC7700**
CHF 120.- inkl. MwSt.

Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz



**HP Compaq NC8430**
CHF 270.- inkl. MwSt.

15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler



**!! REPARATUREN ALLER MARKEN !!**

für Neuware besuchen Sie

**WWW.PAGEVISION.CH**

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

**HP Compaq 8510W**
CHF 360.- inkl. MwSt.

Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur,
Fingerprint Reader,
Bluetooth
*Windows VISTA Business Lizenz*





# சனி மாற்றம் என்பது இதுதானோ?

தமிழகத்திலிருந்து -சீத்தாராமன்-

தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் அவரது உடன் பிறவாச் சகோதரியென விளங்கியவருமான சசிகலாவும் தமிழகத்தின் அபூர்வ சகோதரிகளாக அறியப்பட்டவர்கள். ஜெயலலிதாவின் பல அரசியல் பின்னடைவுகளுக்கு இந்த நட்பே காரணமாகக் கூறப்படுகிறது. முதலமைச்சராக 3 வது முறையாக மிகப் பெரும் மக்கள் ஆதரவோடு தெரிவான நிலையில் அண்மைக்காலச் செயற்பாடுகள் மக்கள் மனதை நோகடிக்கும் வகையில் அமைந்துள்ளன. இவைக்கு முக்கிய காரணமாக நந்தி போல் செயற்பட்டு எதிலும் மூக்கை நுழைக்கும் உரிமை சசிகலாவுக்கு வழங்கப்பட்டமை என்பது பரவலான குற்றச்சாட்டு. கட்சியிலும் அரசின் நிர்வாகத்திலும் சரி தலையிடுவது சசியின் குணம் எனப்படுகிறது.

இந்நிலையில் பெங்களூரில் நடைபெற்று வரும் சொத்துக் குவிப்பு வழக்கில் எப்படியும் ஜெயா சிறை செல்ல நேரிடும் என்ற எதிர்பார்ப்பில் தற்காலிக முதல்வராகத் தனது கணவன் நடராஜனை இருத்திவிட வேண்டும் என்ற எண்ணம் சசிக்கு ஏற்பட்டு விட்டதாகவும் அந்த இலக்கில் செயற்படுவதாகவும் செய்திகள் வெளியாயின.

இந்நிலையில் உடனிருந்தே கொல்லும் வியாதி போல் இவர் மத்திய அரசின் தேவைக்கு ஏற்பச் செயற்படுகிறாரோ எனும் அளவுக்குக் கள நிலைமைகள் உள்ளன. இன்று காங்கிரஸ் ஆட்சிக்கும் அதன் இலங்கை தொடர்பான செயற் பாடுகளுக்கும் பெரும் சவாலாக இருப்பவர் ஜெயலலிதா. எனவே மத்திய அரசு அவரைத் தன் வசம் இழுக்க வேண்டும் என்ற தேவையை ஏற்கனவே மன் மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத் தமிழர் விவகாரம், ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ள அப்பாவிகள் மூவர் விவகாரம், கூடங்குளம் அணுமின் நிலையம், முல்லைப் பெரியாறு அணை என மத்திய அரசுடனான மோதல் நாளும் அதிகரித்து வருகிறது. தேவையான நிதியை தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்காத காரணத்தால் பொது மக்கள் மீது சுமத்தப்படும் விலைவாசி அதிகரிப்பு என்பன இதற்கு முன் எந்த ஒரு மாநில முதல்வரும் சந்திக்காத பாரிய அழுத்தங்களை ஜெயலலிதாமீது சுமத்தி உள்ளது. இதன் மூலம் காங்கிரஸ் கட்சி அவரை மத்திய அரசுடன் ஒரு சமரச நிலைக்குத் தள்ளும் மூலோபாயத்தில் செயற்படுவதாக உணர முடிகிறது.

அண்மைக் காலமாக ஜெயலலிதாவின் உடல் நிலையிலும் பாரிய மாற்றங்கள் புலப்பட ஆரம்பித்துள்ளன. எனவே அவருக்கு உடல்நல ஆலோசகராகக் குஜராத் முதல்வர் நரேந்திர மோடியினால் அனுப்பி வைக்கப்பட்ட பெண்மணியின் மூலம் புதிய செய்திகள் வெளியாகி உள்ளன. ஜெயலலிதா இப்போது எடுத்துவரும் மருந்துகளுக்கும் அவருக்குக் கொடுக்கப்படும் உணவு முறைக்கும் முரண்பாடுகள் உள்ளன எனவும் அதற்காக உணவு முறையில் மாற்றங்கள் செய்ய

அவர் முற்பட்ட போது அதனை சசிதரப்பு வன்மையாகக் கண்டித்துத் தடுத்ததால் ஜெயாவின் இந்த அதிரடி நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

இவற்றைப் பார்க்கும் போது ஜெயா மிகப் பெரும் சதிவலையில் சிக்கி இருப்பதும் அதன் மத்தியில் சசிதரப்பு செயற்படுவதும் தெளிவாகிறது. அடுத்த தேர்தலில் மத்தியில் ஆட்சி காங்கிரஸின் கைகளை விட்டு நழுவப்போவது ஏறக் குறைய உறுதியாகி விட்டது. அதற்குக் காந்தீயவாதி அன்னா ஹஸாரேயின் அகில இந்தியா தழுவி-ய ஊழல் மற்றும் கறுப்புப் பணத்துக்கு எதிரான அறப்போர் மிக சாதகமாய் அமைந்து வருகிறது.

எனவே இன்று அகில இந்திய அள-வில் காங்கிரஸ் ஆட்சிக்கு மிகப் பலமான நிலையில் நரேந்திர மோ-டியும் ஜெயலலிதாவும் உள்ளனர். இருவரும் நல்ல உறவு வைத்துள்ளனர் என்பதுற்கு மோடி அண்மையில் நடத்திய உண்ணாவிரதத்துக்கு ஜெயா தன் சார்பாக ஒரு அமைச்சரை அனுப்பி வைத்துத் தனது ஆதரவை வெளிப்படுத்தினார். அடுத்த பொதுத் தேர்தலில் இந்த இருவரில் ஒருவ-ரே பிரதமராக அல்லது இருவரும் பிரதமரும் பதில் பிரதமராகவும் அமரும் வாய்ப்புக் காணப்படுகிறது. இதன் வெளிப்பாடாகவும் மோடி குறித்த பெண் உடல் நல ஆலோச-கர் என்ற போர்வையில் ஜெயாவுக்குப் பாதுகாப்பு வழங்க முன்வந்தும் இருக்கலாம்.

இதே வேளை துக்ளக் ஆசிரியர் சோ இராமசாமி அரசியல் சாணக்கியத்தில் எவருக்கும் சளைத்தவர் அல்ல என்பதை அவரது விமர்சனங்களும் துக்ளக் இதழ் 40வது ஆண்டுக் கருத்தரங்கு உரைகளும் புலப்படுத்துகின்றன. சசியின் வெளியேற்றத்தில் இவரது பங்களிப்பும் இருந்துள்ளது என்பதை செய்திகள் தெரிவிக்கின்றன. சசி வெளியேற்றப்படும் நேரத்தில் சோவும் ஜெயா வீட்டில் இருந்தார் என்பதும் பின்னர் சோவின் வீட்டுக்குக் குண்டுத் தாக்குதல் மிரட்டல் காரணமாக சோவின் வீட்டிற்கு மேலதிகக் காவல் வழங்கப்படுவதாகவும் தெரிய வருகிறது. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது ஜெயா மத்திய அரசின் சதிக்குள் இருப்பது தெளிவாகிறது. சனி மாற்றம் என்றால் இவை எல்லாம் நடக்குமோ?



# K.B. INTERCOM

Kiosque, Tabac, Internet, Télécommunication,
Alimentation Africain, Aisatique & Amerique du Sud

மிகக் குறைந்த விலையில் அனைத்து
நாடுகளுக்குமான தொலைபேசி அட்டைகள்!





மரக்கறி வகைகள், அதிகுளிரூட்டப்பட்ட
மீன் மற்றும் இறைச்சி வகைகளை
மிகக் குறைந்த விலையில் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:**

உரிமையாளர்: U. KARTHIGESU

Av des Alpes 40, 1820 Montreux, Switzerland

Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44





WESTERN UNION

MONEY TRANSFER

தற்பொழுது உலகெங்குமான துரித
பணமாற்றுச் சேவையும் உண்டு.





அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என நம் முன்னோர்கள் நமக்கு எடுத்தியம்பியிருக்கிறார்கள். வாழ்வியலில் பல இன்ப துன்பங்களை ஏற்றுக்கொண்டு அதன் அனுபவரீதியாகவே இந்தப் பொன்மொழி தோன்றியிருக்கலாம். வாழ்வில் நாம் எக்காரியத்தையும் அளவோடு செய்வோமானால் அக்காரியம் நிறையவே பலன்தரும். ஆனால் நம்மில் பலர் அறியாமை, அதிகஆசை, பணம், பொருள், புகழ் எனத்தேடிக் குவிக்க வேண்டுமென்ற அபரீத விருப்பங்களால் இறுதியில் பல நட்டங்களையும், இழப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ்வில் பல துன்பங்களைத் தாமாகவே தேடிக்கொள்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அண்மையில் எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தேன். இரண்டு நாட்களாக அங்கு அவரோடு தங்கினேன். அவர் மனைவி, மகன், மருமகள், 4 வயது 6வயது என இரண்டு பேரப்பிள்ளைகள். அந்தப்பிள்ளைகளின் பெற்றோர் அப்பிள்ளைகளுக்கு ஒரு அறை நிறைய விளையாட்டுப் பொருட்கள் வேண்டிக் கொடுத்திருப்பதுடன் iPhone, iPad என்னும் புதிய கணனிச் சாதனங்களையும் வேண்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இரு சிறார்களும் அந்தப் பொருட்களுடன் மாறி...மாறி விளையாடிக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் இருவரையும் நான் நோட்டம் விட்டேன். அன்று விடுமுறை தினம். இருவரும் காலை 8 மணிக்கே நித்திரை விட்டெழுந்து காலை, மதியம், இரவுச் சாப்பாட்டு வேளைகளெல்லாம் வாயில் உணவு, கையில் விளையாட்டு அப்படியே காலை, மாலை, இரவு எல்லாம் விளையாடிப் படுக்கைக்குப் போன கட்டிலிலும் இரவு 11, 12 மணிவரை விளையாடிக்கொண்டே தூங்கிவிட்டார்கள்.

இந்தப் பிள்ளைகளின் தாய் தந்தை ஏன் என்றும் கேட்காமல் பிள்ளைகளின் விருப்பப்படியே விட்டிருக்கிறார்கள். தங்களுக்கு இடஞ்சல், தொல்லையோ என்னவோ ஒன்றுமே பேசாமல் பிள்ளைகளுக்குச் செல்லம் கொடுத்து வளர்த்ததுடன் அவர்கள் கேட்பதெல்லாம் வேண்டிக் கொடுத்துப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர் என யோசித்துக் கொண்டேன். இது பற்றி எனது நண்பரிடம் குறையாகக் கூறவே அவர் கூறினார் தான் என்ன செய்வது தானும் பலமுறை சொல்லியும் மகனோ, மருமகளோ, பேரப்பிள்ளைகளோ சொல்வழி கேட்பதாகவே இல்லை. நாங்கள் ஊரில் எங்கட பிள்ளைகளை எப்படி வளர்த்து ஆளாக்கினோம்.. ஆனால் இங்கு அளவுக்குமிஞ்சிய செல்லம், நாகரீகம், பணம், வசதிவாய்ப்பு என இவர் அடுக்கிக்கொண்டு போகவே நான் இடைமறித்து iphone, iPad இவை எல்லாம் என்ன விலை என்று கேட்டேன். அவர் 600, 700 யூரோ எனக்கூறவே எனக்குத் தலை சுற்றியது. அவர் சொன்னார் இலங்கைக்காசுக்குக் கிட்டத்தட்ட 90 ஆயிரம், 1 லட்சம் ரூபாவுக்கு மேல் என்றார் மீண்டும் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

90 ஆயிரம், 1 லட்சம் ரூபாவிற்கு குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களா!...மீண்டும் எனது இதயம் கனத்தது. தாய் நாட்டிலுள்ள இவர்களின் உறவுகளின் சிறார்கள் மண், சிரட்டை, தடி, இலை, குளைகளோடுதான் அகதி முகாம்களில் விளையாட்டு. கிளிந்த உடைகளோடு கல்வியும் இல்லாமல் எதிர்காலம் தெரியாமல் சீரழிகிறார்கள். ஆனால் புலம் பெயர் தேசங்களில் அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரமும் செலவுகளும் யாருக்குச் சொல்லி என்ன பயன். யாரை நோவது. சந்தர்ப்பம் பலருக்கு வசதியாக அமைந்துவிட்டது. பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வேண்டிக் கொடுப்பது எந்தத்தவறுமே கிடையாது...ஆனால் அவர்களின் வயது, கல்வி, உடல்பாதிப்பு, எதிர்காலம் கருதி அவர்களின் வயதிற்கேற்ற விளையாட்டுப் பொருட்களை வேண்டிக் கொடுப்பதே சிறந்ததாகும். அப்படி வேண்டிக் கொடுத்தாலும் நேரக்கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அவர்களைக் கட்டுப்படுத்தி தட்டிக்கொடுத்து நல்ல உடலாரோக்கியமான அறிவாளிகளான பிள்ளைகளாக வளர நாம் வழிசமைக்கவேண்டும். இல்லையேல் வருங்காலச் சந்ததிகளின் எதிர்காலம் நம்மாலேயே பாழடிக்கப்படும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் சிந்திப்போமாக!.....

# கிழக்கில் மீண்டும் சுறுசுறுப்படையும் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள்!



*மத்திய கிழக்கு, பாகிஸ்தான் பின்னணியில்: மோப்பம் பிடிக்கும் புலனாய்வுப் பிரிவினர்....*

*- கொழும்பிலிருந்து பவித்திரன் -*

இலங்கையின் கிழக்கு நகரான காத்தான்குடிப் பகுதியில் முஸ்லிம் ஆயுதக் குழுக்களுக்கான பயிற்சிகளைப் பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கைத் தளமாகக் கொண்ட ஆயுதக்குழுக்கள் வழங்கிவருகின்றனவா என்பதை அறிவதற்கான விசாரணைகளை இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்திருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் அடிப்படைவாதப் பிரிவினரிடையே அடிக்கடி இடம்பெற்றுவரும் மோதல்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தியபோதே வெளிநாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கள் சில கிழக்கு மாகாணத்தில் இரகசியமான செயற்பாடுகளை மேற்கொண்டுவருவது தொடர்பான தகவல்கள் கசிந்துள்ளன.

இவற்றின் நோக்கங்கள் என்ன? கிழக்கில் இவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதை அறிவதில் புலனாய்வுப் பிரிவினரின் கவனம் இப்போது திரும்பியுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவரும் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிர்ச்சியளிக்கக்கூடிய பல தகவல்கள் கிடைத்துள்ளன. இருந்தபோதிலும் இந்த ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் கடும் போக்கைக் கையாள்வதற்குத் தயங்கும் ஒரு நிலையையும் காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கில் செயற்பட்டுவரும் இரண்டு அடிப்படைவாத முஸ்லிம் பிரிவினரிடையே அண்மைக்காலமாக முரண்பாடுகள் மேலோங்கி மோதல் சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதாகக் காவல்துறையில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. வஹாபி மற்றும் சூ.்.பி மதப் பிரிவினரிடையேயான மோதல்களின் போது நவீனரக ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததையடுத்தே புலனாய்வுப் பிரிவினரின் கவனம் இந்தப் பிரச்சினையின்பால் திருப்பப்பட்டுள்ளது. இந்தவிவகாரம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு புலனாய்வுத் துறையினருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டதையடுத்து கிழக்கிலுள்ள முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்களின் நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையான கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் பெறுமதிவாய்ந்த தகவல்கள் பெருமளவுக்குக் கிடைத்துள்ளதாகக் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. குறிப்பாக கிழக்கிலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் கல்விமான்கள் பலரும் வெளிநாட்டு ஜிஹாத் அமைப்புக்கள் பலவற்றுடன் தொடர்புகளைப் பேணிவருவது தெரியவந்திருக்கின்றது. இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த போது ஆசிய பிராந்தியத்தில் செயற்பட்டுவரும் பிரதான ஜிஹாத் அமைப்புக்கள் பல கிழக்கிலங்கையிலுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் பலவற்றுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதை புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளார்கள். இது தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டபோது புலனாய்வாளர்களுக்கு அதிர்ச்சியளிக்கக்கூடிய தகவல்கள் பல வெளிவந்திருக்கின்றது.

ஆசியப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கருதப்படும் பின்வரும் அமைப்புக்கள் கிழக்கிலங்கையிலுள்ள இஸ்லாமிய அமைப்புக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பது விசாரணைகளின் போது தெரியவந்திருக்கின்றது.

1. பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டியங்கும் லக்ஷல் ஈ- தொய்பா அமைப்பு இதில் முக்கியமானதாகும். இந்தியாவின் மும்பாய் நகரில் 2009 நவம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துக்கு இவ்வமைப்பே பொறுப்பாகும். இத்தாக்குதலின் மூலமாகவே இவ்வமைப்பு பிரபலமடைந்தது.

2. இரண்டாவது அல்- ஷஹாப் அமைப்பு. அல்ஹைதா அமைப்பின் நிதி உதவி-யுடன் சோமாலியாவைத் தளமாகக்கொண்டு செயற்படும் இவ்வமைப்பு ஆசியப் பிராந்தியத்தில் தன்னுடைய செயற்பாடுகளைத் தற்போது விஸ்த்தரித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உகண்டாவில் இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் 74 பேர் கொல்லப்பட்டமைக்கு இந்த அமைப்பே பொறுப்பேற்றிருந்தது.

இந்த இரண்டு அமைப்புக்களும் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் மத்தியில் பெருமளவு செல்வாக்கைப் பெற்றுவருவதாகக் கூறப்படுகின்றது. முஸ்லிம்கள் அதிகளவுக்கு வசிக்கும் ஏறாவூர், அக்கறைப்பற்று, மற்றும் காத்தான்குடி பகுதிகளில் இவ்வமைப்புக்கள் தமது பிரதிநிதிகளை அனுப்பி வஹாபி தொடர்பான பிரச்சாரங்களை முன்னெடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காத்தான்குடியிலிருந்து புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி இக்குழுக்களின் நிதி உதவியுடன் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதனைவிட வஹாபி பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்காகச் சட்டவிரோதமான வானொலி நிலையங்கள் சில-வும் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட பிரச்சார நோக்கத்துடன் மதரசாக்களை அமைப்பதற்கான நிதி உதவிகளும் உள்ளூர் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் சூ.்.பி இன முஸ்லிம்களை கிழக்கிலிருந்து வெளியேற்றுவதற்கான இரகசியத் திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இதனைவிட வறுமை நிலையிலுள்ள முஸ்லிம் இளைஞர்கள் சிலர் தெரிவு செய்யப்பட்டு ஆயுதப் பயிற்சிகளுக்காகப் பாகிஸ்தானுக்கும், ஆபிரிக்காவிலுள்ள மற்றொரு நாட்டுக்கும் அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டு நோக்கங்களுடன் இவர்கள் இவ்வாறு அனுப்பப்படுவதாகப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்திருக்கின்றார்கள். ஒன்று - இவ்வாறு பயிற்சிகளை முடித்துக்கொள்பவர்களை மீண்டும் கிழக்கு மாகாணத்தில் களமிறக்குவது. இரண்டு - குறிப்பிட்ட சில வெளிநாடுகளில் இடம்பெறக்கூடிய புனிதப் போர்களில் இவர்களை ஈடுபடுத்துவது.

இலங்கையிலிருந்தும், மாலைதீவிலிருந்தும் இவ்வாறு பயிற்சிகளுக்காக அழைத்துச் செல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் சிலர் ஆப்பானிஸ்தானில் இடம்பெறும் போரில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் சட்டவிரோதமான முறையில் செயற்படும் வானொலி நிலையங்களுக்கு வெளிநாட்டு ஜிஹாத் அமைப்புக்கள் நிதி உதவி-களை வழங்கிவருவது தொடர்பாக முன்னரே பார்த்திருந்தோம். இவற்றின் மூலமாக முஸ்லிம் இளைஞர்களுக்கு உணர்வை ஊட்டி ஆயுதப் போராட்டத்துக்கு அவர்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் நன்கு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வானொலி நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து, அவற்றை முடக்கும் நோக்கத்துடன் விஷேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் உதவியுடன் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையையடுத்துத் தென்னிலங்கையில் பேருவளை பகுதியில் இவ்வாறான வானொலி நிலையம் ஒன்று செயற்படுவது தொடர்பாகக் கண்டறியப்பட்டு அது முடக்கப்பட்டது. இருந்த போதிலும், இவ்வாறான வேறும் சில சட்டவிரோத வானொலி நிலையங்கள் செயற்பட்டு வருவதா-கவும், அவற்றையும் முடக்குவதற்கான செயற்பாடுகளைப் புலனாய்வுப் பிரிவினரும், பொ-லிஸாரும் முடுக்கிவிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேருவளையில் வானொலி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அது தொடர்பான விசாரணைகளைத் தீவிரப்படுத்திய புலனாய்வுப் பிரிவினர் மேலும் பல பெறுமதிவாய்ந்த

புலனாய்வுத் தகவல்களைப் பெற்றிருக்கின்றார்கள். அல்-ஷஹாப் அமைப்பினர்தான் இவ்வாறான வானொலி நிலையங்களை அமைப்பதற்கான நிதி உதவிகளையும் ஏனைய வசதிகளை-யும் வழங்கியிருப்பது இந்த விசாரணைகளின் போது தெரியவந்திருக்கின்றது. அதனைவிட, காத்தான்குடி, புத்தளம், மாத்தளை, நீர்கொழும்பு மற்றும் கல்குடா ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான எம்.எம். வானொலி நிலையங்கள் சட்டவிரோதமாகச் செயற்பட்டுவருவதும், அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் இவை பெரும் செல்வாக்கைப் பெற்றிருப்பதும் விசாரணைக-ளின் போது தெரியவந்திருக்கின்றது. இது தொடர்பான தகவல்கள் புலனாய்வுப் பிரிவினரை அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றது.

புத்தளம் எம்.எம். வானொலி என்ற பெயரில் செயற்பட்டுவரும் வானொலி நிலையம்தான் இந்தக் குழுக்களால் அமைக்கப்பட்ட முதலா-வது வானொலி நிலையமாகும். புத்தளம் பகுதி-யில் வசிக்கும் முஸ்லிம்களை மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி புத்தளம் பகுதியில் வந்து குடியேறிய பெருந்தொகையான முஸ்லிம்களையும் இலக்குவைத்தே இந்த வானொலி நிலையம் செயற்பட்டுவருவதாகத் தெரியவந்திருக்கின்றது. இது தொடர்பான விசாரணைகளின்போது புலனாய்வுப் பிரிவினருக்கு அதிர்ச்சியளிக்கும் மற்றொரு தகவலும் கிடைத்திருக்கின்றது. அதாவது, கடந்த தேர்தலின் போது பிரதி அமைச்சர் ஒருவர் தன்னுடைய பிரச்சாரங்களுக்கு இந்த வானொலி நிலையத்தைத் தாராளமாகப் பயன்படுத்தியிருந்தாராம்.

கிழக்கு மாகாணத்திலும் இதேபோல முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் தமது தேர்தல் பிரச்சாரத்துக்குக் கிழக்கிலிருந்து செயற்படும் சட்டவிரோத வானொலி நிலையங்கள் இரண்டைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அப்போதே தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்திருந்த போதிலும், அவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. மத்திய கிழக்கிலிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் இந்த வானொலி நிலையங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட புலனாய்வுத்துறை அதி-காரி ஒருவர், இலங்கையில் செயற்படும் முஸ்லிம் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை தாம் அவதானித்துவருவதாகத் தெரிவித்தார். அத்துடன், இந்தக் குழுக்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பெருமளவு நிதி உதவி-கள் கிடைத்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த ஜிஹாத் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிழக்கு மாகாணத்துக்கு வந்து செல்வதைத் தாம் முழுமையாக அவதானித்துவருவதாகவும் குறிப்பிடும் அவர், இவ்வாறானவர்களின் வருகை இப்போது பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளையில் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் செயற்பட்டுவரும் இந்தக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்காகப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் பெருமளவுக்கு வெற்றியளிக்கவில்லை. வழமை-போல ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான தி-கதியையும் இடங்களையும் பொலிஸார் அறிவிக்கின்ற போதிலும் அவை பெருமளவுக்கு வெற்றிபெறவில்லை என்றே உள்ளூர்வாசிகள் கூறுகின்றார்கள். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இவ்வாறான மன்னிப்புக் காலம் ஒன்று அறிவிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இக்காலப் பகுதியில் ஆயுதங்கள் எதுவும் ஒப்படைக்கப்படாமையால், தேடுதல் நடவடிக்கை ஒன்றை பொலிஸார் முடுக்கிவிட்டனர். இருந்தபோதிலும் அதுவும் வெற்றிபெறவில்லை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தீவிரமான முறையில் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவில்லை. அவ்வாறு முன்னெடுப்பது அரசியல் ரீதியாகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம் என அரசாங்கம் அஞ்சுவதுதான் இதற்குக் காரணம். அரசாங்கத்துக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஆதரவு அவசியமானதாக உள்ளது. இந்தநிலையில் கிழக்கில் தீவிரமான நடவடிக்கை ஒன்றை அரச படைகள் முடுக்கிவிடுவது முஸ்லிம்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதால் மென்போக்கில் நிலைமைகளைக் கையாள்வதற்கே அரசாங்கம் முற்பட்டுள்ளது தெரிகின்றது.

இவ்விடயத்தில் அரசாங்கத்தின் மென்போக்கு எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக அமையலாம்!


என். எஸ். ஜுவலரி
NS Jewellery & Textiles
BEST Collections!
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நவீன உயர்தர டிசைன்களில்
நகைகளும், திருமண ஆபரணங்கள்,
ஓடர்நகைகள், திருத்த வேலைகள்
யாவும் செய்து கொடுக்கப்படும்.
தாலிக்குப் பொன்னுருக்குதல், காது,
மூக்குக்குத்துதல் போன்ற நல்ல
காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.
தாலி மற்றும் பொன்னுருக்குதல் இவையாவும் இங்கு செய்து தரப்படும்.
ஒவ்வொரு வருடமும் தை
மாதம் எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100CHF என 12 மாதம்
1200CHF. இணைய விரும்புவோர்
உங்களது பெயர்களை முன்கூட்டியே
பதிவுசெய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com



# சிவில் சமூகம் பிழையல்ல...

ஆர். தயாபரன்

வடகிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகப்பிரதிநிதிகளது கோரிக்கைகள் நல்நோக்கத்துடனேயே முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் பேச வேண்டும். கூட்டமைப்பை நல்வழிப்படுத்தும் நோக்கம் கொண்ட அவர்களது செயற்பாட்டை வரவேற்றுள்ளார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சி.சிறிதரன், சிவில் சமூக அமைப்புகளின் கோரிக்கைகளில் பிழை பிடித்துக் கொண்டிருந்த கூட்டமைப்பினரிடையே ஒரேயொருவரின் குரல் மட்டும் இப்போது ஆதரவாக வெளிப்பட்டிருக்கின்றது.

தன்னிடம் கையளிக்கப்பட்டிருந்த சிவில் சமூகப்பிரதிநிதிகளின் மகஜரில் எவரும் கையொப்பமிட்டிருக்கவில்லை என்றார் மாவை, அதையே பின்னர் சம்மந்தரும் குறிப்பிட்டிருந்தார். சிவில் சமூகப்பிரதிநிதிகளின் பின்னணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருப்பதாக இன்னும் சிலர் ஆருடம் கூறினர். சிலரோ ஈ.பி.டி.பி ஆதரவாளர்கள் இருப்பதாகச் சந்தேகம் வெளியிட்டனர். சிவில் சமூகப்பிரதிநிதிகளது 15 அம்சக்கோரிக்கையில் கடைசி விடயமாக இருந்த வடக்கு மாகாண சபைத்தேர்தலை பகிஸ்கரிப்பதை மட்டுமே தூக்கிப் பிடித்தனர் சிலர். கட்சி பத்திரிகைகள் கூட மாகாணசபை பக்கத்து வீட்டுக்காரனுக்குப் போய்விட்டால் என்ன செய்வதென்ற பாணியில் கத்தித் தீர்த்தன. சிவில் சமூகத்தின் நேர்மை பற்றியெல்லாம் ஆராய முடிந்த இவர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தெளிவான பதிலைப் பகிரங்கமாகக் கூற இன்று வரை முடியாமல் போய்விட்டது.

ஆட்கடத்தல்கள் கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் உறைந்துபோயுள்ள தமிழர் தாயகப் பிரதேசத்தினில் இவ்வாறான சிவில் சமூகக் கூட்டமைப்பொன்று உருவானமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. யுத்தகாலங்களிலும் நின்று நிலைத்து நாட்டைவிட்டுத் தப்பியோடாத பலரையும் உள்ளடக்கியே அது உருவாகியுள்ளது. அரசியல் சுயலாபங்கள் ஏதுமற்ற வைத்தியர்கள், மதப்பெரியார்கள், சமூகத்தில் மதிக்கப்படுபவர்கள் எனப் பலரும் தாமாக முன்வந்திருந்தமை இங்கு முக்கியமான விடயமாகப் பார்க்கப்படவேண்டியவை. விரும்பியோ விரும்பாமாலோ கூட்டமைப்பு கடந்த தேர்தல்களில் வெற்றி பெறத் திரைமறைவினில் செயற்பட்டவர்களாகவும் இவர்களே இருந்தனர்.

கூட்டமைப்புத் தலைமை தடம் மாறுவதாக மக்களிடையே பரவலாகக் கருத்துக்கள் தாக்கம் செலுத்தத் தொடங்கிய நிலையிலேயே சிவில் சமூக அமைப்பு கருக்கொள்ளத்தொடங்கியது. அதற்கான தேவைகளும் வலுப்பெற்றிருந்தன. விடுதலைப்புலிகள் இறுதிவரை வலியுறுத்தி வந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்னும் விடயத்தைக் கூட்டமைப்பு அரசுடனான பேச்சுக்களை ஆரம்பித்த முதலே கைவிட்டிருந்தது. தமிழ் மக்களால் ஒரேயடியாகக் கைவிடப்பட்டிருந்த மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை வழங்கும் 13வது திருத்தச்சட்டத்தைப் பற்றிக் கூட்டமைப்பு தலைமை பேசத்தொடங்கியது. 13ற்கு இங்காலா, அங்காலா என வாதங்கள் பறந்தன. எங்கள் பிரச்சனைகளை எங்களுக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்வோம் என்றார் ஜனாதிபதி அவர் கரங்களைப் போட்டிபோட்டு பலரும் பற்றிக் கொண்டனர்.

இப்போது தேனிலவு முடிந்த கதை போலாகிவிட்டது. கூட்டமைப்பை முன்னர் புலிகள் இயக்கினார்கள். இப்போது புலம்பெயர் தமிழர்கள் இயக்குகின்றனர் என்கிறார் ஜனாதிபதி. வடகிழக்கு இணைப்பு, காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதென்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் மேலும் அவர். இவற்றை வழங்குவதன் மூலம் அவர்கள் என்னைப் பிடித்து சிறையில் போடவா எனவும் கேள்வி எழுப்புகிறார்.

மறுபுறத்தில் கூட்டமைப்புத் தலைமையிடமும் நம்பிக்கெட்ட மனோநிலை அப்பட்டமாகவே தெரிகின்றது. தெரிவுக்குழுவிற்குக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளைத் தரவில்லை எனப் பசில் குற்றம்சாட்ட அவருக்குப் பின்னால் பைல் கட்டுக்களைத் தூக்கித்திரியக்கேட்கிறாரா என சம்மந்தர் சீற்றத்துடன் கேள்வியெழுப்பியிருந்தார். அரசுடன் பேசியதால் எந்தப் பலனும் இல்லை என்பதைக் கூட்டமைப்புத் தலைமை தற்போது தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றது.

பேச்சுக்கள் என்பது அரசிற்கு சர்வதேச ரீதியில் எழுந்த அழுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்கான யுக்தி என்பதைக் கூட்டமைப்புத் தலைமை காலதாமதமாக இப்போது புரிந்து கொண்டிருக்கின்றது. முன்னதாக ஏனைய தரப்புக்களும் ஊடகங்களும் இதைச் சுட்டிக்காட்டியிருந்தபோது கவனத்தில் கொள்ளக் கூட்டமைப்புத் தலைமை மறுத்தே வந்திருந்தது. ஆனால் தற்போது எதுவுமே இல்லை என்றான பின்னர் சுடலை ஞானத்துடன் பேச அதே கூட்டமைப்புத் தலைமை முற்படுகின்றது.

அரசிற்கும் கூட்டமைப்புத் தலைமைக்கும் 18சுற்றுப் பேச்சுக்கள் நடந்து முடிந்துள்ளது. தமிழ் மக்களுக்கு அதன் பலாபலன் வெறும் பூச்சியம் மட்டுமே. ஆகக்குறைந்தது தடுப்புக்காவலிலுள்ள கைதிகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் பெயர் விபரங்களைக் கூடக் கூற அரசு தயாராக இருக்கவில்லை. அரசின் பெயர் விபரங்களையெல்லாம் வெளியிடும் உறுதி மொழியை நம்பி கூட்டமைப்பு அறிவிப்புக்களை வெளியிட்டு மரியாதை கெட்டுக்கொண்டது மட்டுமே மிச்சமாக இருந்தது.

பேச்சுக்களில் இரகசியத் தன்மை பேண கூட்டமைப்புத் தலைமை இதுவரை முற்றபட்டதே பலரிடையேயும் சீற்றத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது. ஏற்கனவே விடுதலைப்புலிகள் பல சுற்றுக்களாக நடத்திய இரகசியப்பேச்சுக்களிற்கு என்ன நடந்ததோ அதுவே கூட்டமைப்பின் பேச்சுக்கும் கூட நடக்கும் எனப் பலரும் அறிந்திருந்தார்கள். ஆனால் கூட்டமைப்புத் தலைமையினர் அதனை அறியாமற் போனதே பலரையும் வியப்பில் ஆழ்த்தியும் இருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளே கூட்டமைப்பை வழிப்படுத்த சிவில் சமூக அமைப்புகள் ஒன்று திரளக்காரணமாகியிருக்கலாம். குறிப்பாக இந்தியாவின் கைப்பொம்மையாகக் கூட்டமைப்பு இனியும் இருக்கக்கூடாது என்பதே பெரும்பாலும் சிவில் சமூக அமைப்புகளது நிலைப்பாடாக இருக்கின்றது. இந்தியாவின் அழுத்தங்களுக்குட்பட்டு இனியும் கதைப்பதென்பது மோசமானதொரு பொறியினுள் தமிழ் மக்களைத் தள்ளிவிடும் என்பதை அனைவரும் புரிந்தேயுள்ளனர். அவ்வகையிலேயே அரைகுறை அரசியல் தீர்வினைக் கட்டியடித்து விடக் கூட முயலக்கூடும். மக்களது விருப்பத்திற்கு மாறாக இந்தியாவின் பின்னால் போவதென்பது கூட்டமைப்பையும் மக்களிடமிருந்து அந்நியப்படுத்துமென்பதை நிராகரிப்பதற்கில்லை.

30 ஆண்டுகால ஆயுதப்போராட்டம் அது தந்த வலிகள் பெறுமதியானவை, 40ஆயிரத்திற்கும் அதிகமான மாவீரர்களது தியாகம் இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமான மக்களது அர்ப்பணிப்புக்கள் சாதாரணமானவையல்ல. தற்போது சர்வதேச ரீதியில் தமிழ் மக்கள் தொடர்பினில் எழுந்துள்ள அக்கறை இனிவரும் எக்காலப்பகுதியிலும் கிட்டப்போவதில்லை. இத்தகைய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு நின்று நிலைக்கக் கூடிய அரசியல் தீர்வுக்குக் கூட்டமைப்பு பாடுபடவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

அவ்வகையிலேயே சிவில் சமூக அமைப்புகள் தமது வலியுறுத்தல்களை முன்வைத்துள்ளன. அவை தெளிவாகவே சிலவற்றை வலியுறுத்துகின்றன. தமிழ் மக்களுக்கான பேரம்பேசும் சக்தி கூட்டமைப்புக்கு மட்டுமேயுள்ளது. கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தும் என்பதை அனைவரும் புரிந்தேயுள்ளனர்.சிவில் சமூகத்தின் கருத்துக்கள் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படவில்லையென்ற உண்மையை, யதார்த்தத்தைப் புரிந்து கூட்டமைப்பு தலைமை வழி நகர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

MEDIA ASIA
Another Home of Southasian Channels

For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.

www.mediaworldasia.dk



# விடியும் ஒரு நாள்!

இரா. அருணாச்சலம்


அன்று பாடசாலை விடுமுறை எல்லோரும் ஒவ்வொருவரையும் சந்தித்து என்ன செய்யலாம் - எங்கு செல்லலாம் என்று கலந்துரையாடினார்கள். நான் பக்கத்தில் உள்ள தேனீர்க் கடைக்குச் சென்றேன் - ஏதாவது சாப்பிடலாமா என்று. அந்தக் கடைக்கு முன்பாக - முன் அறிமுகம் இல்லாத ஒருவர் என்னைப் பார்த்து அழைத்தார். என்னை விட ஐந்து அல்லது ஆறு வயது கூடியவராகத் தான் இருக்கும். அவரோடு இன்னொரு நபரும் ஒரு பழைய சைக்கிலோடு நின்றுகொண்டு- தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். என்னை அழைத்தவர் - "தம்பி என்ன இன்று பாட-சாலை விடுமுறையா எல்லோரும் சந்தோசமாக வருகுரீங்க ? பாடசாலை விடுமுறையென்றாலே குதூகலம்தானே"- என்றார் மற்றொருவர். "என்ன உங்கள் நண்பர்கள் யாரும் வரவில்லையா" என்று வினாவினார். "இல்லை!" என்று கூறிக்கொண்டே அவர்கள் அருகில் சென்றேன். அவர்கள் என்னைப் பற்றி விசாரித்தார்கள். "எந்த வகுப்புப் படிக்கிறீர்கள் -எங்கு இருக்கிறீர்கள்" என்று கேட்டனர். அப்போழுதே அவர் யார் என்பதை விளங்கி விட்டேன். எனது ஆங்கில ஆசிரி-யர் எங்களுக்கு விளக்கமாகக் கூறியிருந்தார். அவர்கள் ஆபத்தானவர்கள் -அவர்கள் கூறுவதை நம்பக்கூடாதென்றும். இருந்தும்- நான் ஒன்றும் அறியாததுபோல் -அவர்களுடன் சில நிமி-டம் கலந்துரையாடினேன். என்னுடன் அவர்கள் அன்பாகவும் பணிவாகவும் பலதரப்பட்ட விடையங்களை வலு சுருக்கமாகக் கூறினார்கள். அவர்களின் விளக்கமும் அணுகுமுறைகளும் எனக்கு - அவர்கள் மீது ஒரு நம்பிக்கையும் மரியாதையும் ஏற்படுத்தியுள்ளது. ஆங்கில ஆசிரியர் கூறியது போல் ஆபத்தானவர்கள் மாதிரித் தெரியவில்லை- மாறாக நம்பிக்கைக்குரியவர்களாகவும் உண்மைக்கு போராடுகிறவர்களாகவும் எனக்குத் தோன்றியது. நான் அறியாத எம் இனத்தின் அடக்கு முறை பற்றிய பலதரப்பட்ட தகவல்களைப் பற்றி எல்லோருக்கும் விளங்கக் கூடியதாக எடுத்துரைத்தார்கள். அவர்கள் கூறுவதைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. அவர்கள் கூறிய அனைத்து விடையங்களையும் எனக்குள் ஆழமாக பதித்துக்கொண்டேன். ஒரு சில கருத்துக்கள் எம்மைப் போன்றவர்கள் சிந்திக்க வேண்டியதாக இருந்தது. இருந்தும் நாம் அறிய வேண்டிய உண்மைகளை நிறையவே எடுத்துரைத்தார்கள். இறுதியாக அவர்கள் என்னிடம் விடைகூறிச் சென்ற முறையும் அவர்களது கவர்ச்சிகரமான முகத் தோற்றமும் ஒரு வாரமாகியும் என்னை விட்டு அகலவில்லை.

அவர்கள் கூறியதை எனது நண்பர்களுக்கு எடுத்துக் கூற முயற்சித்தேன். யாரும் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. நான் கூறிய முறை அவர்களிற்குப் புரியவில்லையோ என்று எண்ணினேன். இருந்தும் யாரை-யும் நான் கட்டாயப் படுத்தவில்லை. மா-றாக அவர்கள்தான் மாற்றுக்கருத்துக்களைக் கூறினார்கள். அப்போதுதான் அந்த இரண்டு அண்ணாக்களையும் நினைத்துப் பார்க்கக் கவ-லையாக இருந்தது. இருவருமே என் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தார்கள் அவர்களை மீண்டும் சந்திப்பேனா என்று எனக்குள்ளே நான் கேட்டுக்கொண்டேன். அப்படியே சில மாதங்கள் கழிந்து விட்டன. எனக்குப் பாடத்திலையோ விளையாட்டிலோ நாட்டம் வரவில்லை. மாறாக அவர்களைச் சந்தித்து அவர்களின் அமைப்பில் இணைய வேண்டும் என்று தோன்றியது. அவர்களின் அந்தப் பணிவான வார்த்தைகள் எனக்குள் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவர்களைப் பற்றி யாரிடமாவது விசாரிக்கலாமா என்று எண்ணினேன். ஆனால் அதற்கு மாறாக ஒரு செய்தி என் காதிற்கு எட்டியது. ஒரு சிலர் இயக்கத்துக்குப் பாடசாலை மாணவர்களைச் சேர்க்கிறார்களாம், கடத்திக்கொண்டும் செல்கிறார்களாம் அனைவரையும் கவனமாக இருக்கும் படியாகவும் அவர்களைக் கண்டால் உடனடியாக அந்த ஊர்க் காவல் நிலையத்தில் அறியத்தரவும் என்று இருந்தது. ஏன் இப்படிப் பொய்யான செய்திகளைப்

பரப்புரை செய்கிறார்கள்? அவர்கள் யாரையும் கட்டாயப்படுத்தவோ கடத்திச்செல்லவோ இல்லையே. மாறாக அறிய வேண்டிய உண்மைகளைத் தானே கூறியிருந்தார்கள்! ஏன் அந்த அண்ணாக்கள் மீது தேவையற்ற பழி சுமத்துகிறார்கள் என்று நினைக்க ஆத்திரமாக இருந்தது.

இல்லை அவர்களை யாரும் காட்டிக்கொடுக்கக் கூடாது. எப்படியாவது என்னால் முடிந்த உதவியை அவர்களிற்கு செய்ய வேண்டும் என்று எண்ணினேன். அன்று தான் என் வாழ்க்கையில் ஒரு பெரும் புயல் வீசியது! எப்படி என்று கேட்குறீர்களா… ஒரு தவறுமே புரியாத என்னை நானே காட்டிக்கொடுத்துவிட்டேன். நான் கூறிய எனது பாடசாலை நண்பர்கள் என்னைப் பற்றி ஆங்கில ஆசிரியரிடம் நான் அவர்களை அமைப்பில் இணையக் கேட்டதாகவும் விரும்பினால் கூட்டிச் செல்கிறேன் என்றும் ஆசிரியரிடம் கூறியுள்ளார்கள். ஆசிரியரும் அவர்கள் கூறியதை நம்பிக் காவல் அதிகாரியிடம் என்னைப் பிடித்துக் கொடுத்து விட்டார். ஒரு ஆசிரியர் செய்கிற காரியம் அல்ல அது மாறாக எனக்கு நல்ல அறிவுரைகளைக் கூறியிருக்கலாம் அல்லது என்னை எச்சரித்து விட்டிருக்கலாம் எனது பெற்றோர்களிடமாவது என்னைப் பற்றிக் கூறியிருக்கலாம் அல்லவா? அதற்கு மாறாக அவர் இன்னும் கூடுதலான குற்றங்களை என்மீது பூசி என்னைக் குற்றவாளி ஆக்கி விட்டார். நல்ல எதிர்காலத்தைக் காட்ட வேண்டியவர் காலம் பூராக சிறையில் வாழும் படி மாற்றி விட்டார்! மிகுதியையும் கூறுகிறேன் கேளுங்கள். நான் தான் பாடசாலை மாணவர்களின் மனதை மாத்தி அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை அவர்களிடம் விதைத்ததாகவும் நானும் அந்த அமைப்பில் ஒரு முக்கியமான பொறுப்பில் இருப்பதாக வர்ணித்து என் மீது குற்றத் தாக்குதல் செய்யப்பட்டது. எந்த ஒரு மாற்று விசாரணைக்கும் இடமளிக்கவில்லை. அது மட்டுமன்றி அந்த சிறையில் நான் தனியாக அல்ல…! என்னைப்போல் எத்தனையோ இளைஞர்கள் எந்த ஒரு குற்றமுமே புரியாமல் தண்டனையை அனுபவித்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களையோ அல்லது என்னையோ வந்து பார்ப்பதற்கு யாரையும் அனுமதிக்கப்படவில்லை. அது மட்டுமா? எங்களைச் சித்திரைவதை செய்வதற்கே நாட் குறிப்பொன்றைப் பட்டியல் இடப்பட்டு ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் படும் வேதனைகளையும் துன்பங்களையும் வார்த்தைகளில் கூறிப் புரியாதவை! இருந்தும் கேட்டுக்கொள்கிறேன்...! எப்படியாவது இந்தச் செஞ்சிலுவை ஊழியரிடமிருந்து எங்களது செய்திகள் உங்களது காதில் எட்டினால் எங்களை யாரும் மீட்பீர்களா என்று கேட்கவில்லை. ஒரு முறையாவது வந்து எங்களை யாராவது பார்ப்பீர்களா?

மூபத்து ஆண்டுகளாகியும் எமக்கு ஒரு நம்பிக்கை இருக்கின்றது. எங்கள் பொழுதும் ஒரு நாள் விடியும் என்று...!





# உலகின் மூலையில் ஒரு கொடூரச்சிறை!

- அறிவழகன் -





உலகின் ஒவ்வொரு மூலையிலும் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு நிகராக, சிறைகளில் அடைக்கப்படுவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. தனிநபர் சுதந்திரத்தின் மீது வகுக்கப்படும் எல்லையே சிறை எனப்படுகிறது. ஆனால் அதனையும் மீறி, உடல் உள ரீதியான உபாதைகள் தரும் சித்திரவதைக் கூடங்களாகவும் பல சிறைகள் மாற்றம் பெற்று வருவது யாவரும் அறிந்ததொன்று. உதாரணமாக, இலங்கையில் இருக்கும், வெலிக்கடை, பூசா, மகசீன், போகம்பர, நீர்கொழும்புச்சிறை, ஆகிய சிறைகளில் தரப்படும் உடல் உபாதைகள் மிகவும் கொடூரமானவை. குறிப்பாக தமிழின இளைஞர்கள் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைகளில், சித்திரவதை புரிவதற்கென்று தனி "ஊழியர்கள்" சிங்கள அரசால் நியமிக்கப்பட்டிருப்பதை வைத்தே, இச்சிறைகள் எவ்வளவு கொடூரமானவை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளமுடியும்.

மேற்குறிப்பிட்ட சிறைகளில் இரண்டு சிறைகள் எனக்குப் பரீச்சயமானவை. 1998 இல் ஒரு சிறையிலும், 2000 ம் ஆண்டில் ஒரு சிறையிலும் அடைக்கப்பட்டிருக்கிறேன். மூன்றுவேளை வழங்கப்படும் ஆகாரம் தொடங்கி, அன்றாடம் தரப்படும் கடமைகள் வரை, அனைத்துச் செயற்பாடுகளிலும் கொடூரம் நிறைந்திருக்கும். அதுவும் சிறைக்குள் நுழைந்த முதல் வாரம், அமோகமான வரவேற்புக்காத்திருக்கும். பல்கலைக்கழகத்தின் பகிடிவதைக்கு அஞ்சும் மாணவனைப்போல, எப்போ என்ன நடக்கும் எனத் தெரியாது, பயந்தபடியே அவ்வாரம் கழியும். இது உள ரீதியான பாதிப்பை வலுவாக ஏற்படுத்தும். எம்மைப் பார்வையிட வரும் உறவுகளிடம் சிகரெட், மதுபானம், போதைப்பொருள் ஆகியன தமக்கு வாங்கி வரும்படி அங்குள்ள பெரும்பான்மை இனத்தவர் படுத்தும் பாடு சொல்லில் அடங்காது. அதைவிடவும் வெளியேயுள்ள தமது மனைவி மக்களுக்கு, பணஉதவி செய்யும்படி, எம்மை எமது உறவுகளிடம் கோருமாறு தரப்படும் இம்சை வேறு. இவை எல்லாவற்றையும் விட உடல்ரீதியான சித்திரவதையை எழுதுவதென்றால் இப்பக்கம் போதாது.

மேற்குறிப்பிட்ட சிறைகளும், சித்திரைவதைகளும், அநேகமான தமிழர்களுக்குப் பரீச்சயமானவை. ஆனால் உலகின் ஒரு மூலையில், வெளி உலகின் பார்வைக்குப் படாத வகையில், மிகவும் கொடூரமான சித்திரவதைக்கூடம் கொண்ட ஒரு சிறை இயங்கிவருவது நம்மில் பலருக்குத் தெரியாது. அதுதான் அமெரிக்க வல்லாதிக்க அரசின் மேற்பார்வையில், கியூபா நாட்டின் "குவாண்டனாமோ" என்னுமிடத்தில் இயங்கிவரும் சிறையாகும்.

குவாண்டானமோ விரிகுடா என்பது கியூபாவின் தென்கிழக்கில் குவாண்டனாமோ மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு விரிகுடாவாகும். இது கியூபாவின் தெற்கில் உள்ள மிகப் பெரிய துறைமுகம் ஆகும்.1903 இல் கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கையின் படி குவாண்டானமோ விரிகுடாவை அமெரிக்கநாடு முடிவற்ற குத்தகைக்குப் பெற்றிருந்தது. இவ்விரிகுடாவில் அமெரிக்காவின் இருப்பை தற்போதைய கியூபா அரசு எதிர்த்து வருகிறது. 1969 ஐ. நா வின் வியென்னா உடன்பாட்டின்படி

அமெரிக்க ஆக்கிரமிப்பு சட்டபூர்வமல்லாதது என கியூபா வாதிட்டு வருகிறது.இவ்விரிகுடாவின் தெற்குப் பகுதியில் 1898 இல் கட்டப்பட்ட அமெரிக்காவின் கடற்படைத்தளம் அமைந்திருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக இத்தளம் போர்க்கைதிகளின் தடுப்புக்கூடமாக இருந்து வருவதுடன், ஆப்கானிஸ்தான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கைது செய்யப்பட்டவர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இங்கு தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலையாவது மிகவும் அபூர்வமான தொன்றாகவே கருதப்படுகிறது. ஆனால், தவறாகக் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்ட ஒரு பத்திரிகையாளர் மூலம் இச்சிறையின் கொடூரங்கள் வெளிக்கொணரப்பட்டன. இங்கு பணியாற்றும் அமெரிக்க இராணுவத்தைச்சேர்ந்தவர்களால், கைதிகள் மிகவும் கொடூரமாக சித்திரவதை செய்யப்படுவதாக, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் கண்டிக்கப்பட்டும், இதுவரையில் அமெரிக்க அரசு அதனைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அமெரிக்க சனாதிபதியாக ஒபாமா பதவியேற்கும்பொழுது, இச்சிறைச்சாலையை விரைவில் இல்லாதொழிக்கப்போவதாகத் தெரிவித்த நிலையிலும், இதுவரையும் எதுவிதமான மாற்றங்களும் தென்படவில்லை.

அமெரிக்க அதிகாரிகளின் விளக்கங்கள் குவாண்டனாமோ ஒரு சிறையல்ல என்பதாகவே இருக்கிறது. அது ஓர் நன்னடத்தைக்கான முகாம் என்பதாகவே அவர்கள் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் அங்கிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு சிலர், அது ஒரு சித்திரவதைக்கூடம் என்பதை ஆதாரங்களுடன் வெளியிடுகிறார்கள்.

பல்வேறு உலக நாடுகளில், அமெரிக்க அர-சால் சந்தேகிக்கப்படுபவர்கள் கைதுசெய்யப்பட்டு இங்குகொண்டுவரப்பட்டு அடைக்கப்படுகிறார்கள். மூகமூடி அணிந்து கைகால்கள் பிணைக்கப்பட்ட நிலையிலேயே எப்போதும் கைதிகள் இருத்தப்படுகிறார்கள். அவர்களை உடல் ரீ-தியான சித்திரவதைக்கு உள்ளாக்கும் தேவை உண்டாகும்போது மட்டும், அவர்களது கட்டுக்கள் அவிழ்க்கப்படுகின்றன. எத்தனையோ பேர் இதுவரை சித்திரவதை தாங்கமுடியாது உயிரிழந்திருக்கிறார்கள்.

ஏமன் நாட்டினைச் சேர்ந்த கைதியான Muhamed Saliah என்பவரின் மரணம் பரிதாபத்திற்குரியது. இவர் சிறைக்குள் புகுந்த நாளிலிருந்தே, தன்னை விடுதலைசெய்யக்கோரி உண்ணாநோன்பு மேற்கொண்டிருக்கிறார். 124 பவுண்டுகளாக இருந்த இவரது உடல்நிறை, 86 பவுண்டுகளாகக் குறைந்தபின்பும், இவர்மீது எவ்வித கரிசனையும் காட்டப்படாது அவர் உயிரிழக்கவேண்டியதாயிற்று.

ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த நான்கு கைதிகள் 2006-2007 வரையான காலப்பகுதியில் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்கள் தற்கொலை செய்துகொண்டதாகவே அறிவிக்கப்பட்டது. ஆனால் சிறையின் அறையிலோ, அல்லது வெளிப்பகுதியிலோ தற்கொலை செய்துகொள்வதற்கான எவ்வித உபகரணங்களும் கிடையாது. அதைவிட மேலா-க, எப்போதுமே கைகள் பிணைக்கப்பட்டிருக்கும் நிலையில் தற்கொலை செய்துகொள்வதென்பது இலகுவான காரியமல்ல. இங்கு செல்லும் பத்திரிகையாளர்களுக்கு, ஒரு எழுதுகோல் மற்றும் ஒரு வெள்ளைக்கடதாசி மட்டுமே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுகிறது. அதுவும் பெண்பத்திரிகையாளர்கள் என்றால், கடுமையான உடல்பரிசோதனைக்குப் பின்பே அனுமதிக்கப்படுகிறார்கள். ஒரு சில பத்திரிகையாளர்கள் மட்டும் புகைப்படக் கருவி-களுடன் அனுமதிக்கப்படுகிறார்கள்.

மொத்தமாக 774 கைதிகள் இங்கு சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இவர்களில் அதிகமா-னோர் இஸ்லாமியர்கள். பொதுமக்களின் உயிரிழப்புக்களுக்குப் பாத்திரமானவர்கள் சிறையில் அடைக்கப்படலாம். ஆனால், சந்தேகத்தின் பெயரில், கைதுசெய்யப்பட்டு, நெடுங்காலமாக சிறையில் அடைக்கப்படுபவர்கள் பலர் உளவியல் ரீதியில் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பது பலரது கருத்து. அவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும், நடைப்பிணமாகவே தங்கள் காலத்தைக் கழிக்கவேண்டியவர்களாகிறார்கள். ஏனெ-னில் அவர்களால் சிறையில் அனுபவித்த கொடூரங்களை மறக்கமுடிவதில்லை.

சிறை என்பது மனிதர்களை, மனிதர்களாகவே பேணவேண்டும். குற்றம் செய்யத்தூ ண்டிய அவர்களின் எண்ணவோட்டம் மாற்றியமைக்கப்படவேண்டிய ஒரு நன்நடத்தைக்-கூடமாகவே சிறை அமையவேண்டும். அவர்களை உடல்ரீதியிலான உபாதைகளுக்கு உள்ளாக்குவதால், அவர்களின் பகைமையுணர்வு அதிகரிக்குமே ஒழிய ஒருபோதும் குறையவாய்ப்பில்லை. அது அமெரிக்காவாக இருந்தாலும் சரி, சிறிலங்காவாக இருந்தாலும் சரி...!

## மங்கலவிளக்கு

தீக்குச்சியின் சாவில்
திரி ஒளிர்கிறது....!
மங்கலவிளக்கு.....?!!!

## நத்தார் நினைவுகள்!

கடவுளின் குழந்தையே ஆனாலும்
காட்டிக் கொடுத்து கசையடி
வாங்கிக் கொடுத்து சிலுவையில்
ஆணி அறைந்து கொல்லவும்
என்றும் கூடவே சிலரும் இருப்பர்
ஈழத் தமிழனுக்கோ உலகெங்கும் பலர்!

-கருமி-

## ஊருக்கு மட்டும்...!

வெளியிலே பேச்சு
பெண்ணடிமை எதிர்ப்பு
வீட்டிலே மனைவி
கொத்தடிமை இருப்பு

## ஏன்...?

வரப்போகும் வருடத்திற்கு
வாழ்த்துக்கள் ஆயிரம்...!
கடக்கும் வருடத்தைக்
காண்பதில்லை எவரும்..!!!

## காரணம்

அப்பாவிற்குத் தொப்பையாம்!
காரணம்
அம்மா கையில் இருக்கும்
அகப்பையாம்....!!!

# விழியோரம் வலி!...

தொகுப்பு: தமிழ்விழி

# அகரக் கவிக்களம்...

## *மிதிவெடி கவனம்*

ஈழத்தைப் பார்க்க
எனக்கும் ஆசைதான்..!
எங்கே வைப்பது
என் கால்களை...?

## பெண்ணே...!

பெண்ணே நீயே மற்றொரு
பெண்ணைக் காலால் மிதிக்க
மனம் என்ன கல்லோ? - உன்
கல்யாண மேடையில் அம்மியாய்
அகலிகை பாவம் இல்லையா?

-பாக்கியம்-

## உண்மை

எண்ணங்கள் சிதறாமல்
உள்ளங்கள் பதறாமல்
உருவாகுவதே உண்மை..!

-சி.வதனி-

## அசைவம்

ஐயர் செய்வதால்
அசைவமில்லையோ
பசுவின் குருதியில்
பாலாபிஷேகம் கடவுளுக்கு..!!!

அன்பிற்கினிய அகரம் வாசகர்களே...!
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை, 3 - 6 வரிகளுக்கு
மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்..!
சிறந்தவையாகத் தெரிவுசெய்யப்படும்
கவிதைகள் அகரத்தின்
கவிதைத்தொடரில் பிரசுரிக்கப்படும்.

tMedia Network
PO BOX 4153, 59037 Hamm
Germany

eMail: poems@akaram.com

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ, முதலில எல்லாருக்கும் என்ர புதுவருச வாழ்த்துக்கள்....!!!

எப்பிடிப் போகுது உங்கட வாழ்க்கை எல்லாம்?? புதுசா ஒரு வருசத்தில இப்ப காலடி எடுத்து வைக்கிறம். இந்த வருடத்திலையும், பழைய குருடி, கதவைத் திறவடி, எண்டு இல்லாமல் கொஞ்சம் விவரமாய், நல்ல முறையில எங்கட வாழ்க்கையைத் திட்டமிடவேணும் பாருங்கோ...! இளம்பிள்ளையளை நல்ல முறையில வழிநடத்தி பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி எண்டதுகள் இல்லாமல், தேசப்பற்றுள்ள ஒரு நல்ல பரம்பரையாய் அதுகள் உருவாகுறத்துக்கு நாங்கள் தான் வழிகாட்டவேணும். இதை ஏன் சொல்லுறன் எண்டால் கடந்த வருசத்தில நான் நேரில கண்ட சில கசப்பான விசயங்கள் தான் காரணம் பாருங்கோ..!

சரி விசயத்துக்கு வாறன். எங்கட மண்ணின்ர கலை கலாச்சார விழுமியங்களைக் கவனமாய்க் கட்டிவளர்க்குறதில புலம்பெயர்ந்திருக்கிற தமிழுறவுகளுக்கு பெரியபங்கு இருக்குக் கண்டியளோ..! எங்கட கலை, கலாச்சாரத்தை அழிக்குறதில சிங்களவன் மிகவேகமாய் நிக்குறான் பாருங்கோ. இதில நாங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்து நில்லாமல், பிரிஞ்சு நிண்டமெண்டால் அது அவனுக்குத்தான் இலாபம் பாருங்கோ. புலம்பெயர்ந்த நாடுகளில, எங்கட தமிழ்ப் பிள்ளையள் எல்லாரும் ஒவ்வொரு கலையில புலியாய் இருக்கிறது மனசுக்குச் சந்தோசமான விசயம்தான் பாருங்கோ. ஆனால், அவையள் அதைவைச்சே ஒருத்தருக்கொருத்தர் ஒற்றுமையில்லாமல் நிக்குறதுதான் மனசுக்குச் சங்கடமாய் இருக்குதுங்கோ...!

இஞ்ச ஒரு பிள்ளை, ஒரு கலையில கெட்டிக்காரன். ஆள் சின்ன வயசிலேயே, அதே கலையில பெரிய வித்துவானுகளாய் இருக்கிற ஆக்களுக்குப் போட்டியாய் நிக்குறதைக் காண மனசுக்குச் சந்தோசமாய் இருந்திச்சுது. பிறகு கொஞ்ச நாளாய் ஆளைக் காணேல்லை. என்னடா சங்கதி எண்டு யோசிச்சிட்டு அதை அப்படியே விட்டுட்டன். பிறகு ஒருநாள், அந்தப் பெடியன்ர தாயைக் கண்டாப்போல என்ன ஏதெண்டு விசாரிச்சால், அவ போட்ட குண்டில நான் அதிர்ந்துபோனன். என்ன தெரியுமே சங்கதி? "என்ர பெடியன் நிக்குற மேடையளில, அதே கலையைத் தெரிஞ்ச வேற பிள்ளையள் நிக்கிறது மகனுக்கு சரியான மனக்கஷ்டமாய் இருக்குதாமுங்கோ. அதனால மகனை மறிச்சுப்போட்டன்.என்ர பிள்ளைக்குப் போட்டியாய் வேற ஒருத்தரைக் கொண்டுவந்து போட்டால், மகனின்ர மரியாதை என்னவாகிறது? என்ர பிள்ளைக்கு உதுகளை விட்டால் வேற மேடையள் கிடையாது எண்டு உங்க கொஞ்சப்பேர் நினைக்கினம். உவைக்கெல்லாம் ஒரு பாடம் படிப்பிக்கவேணும் எண்டுதான் இப்ப ஒண்டுக்கும் நான் விடுறேல்லை" எண்டு அவ நீட்டி முழங்கினதில, எனக்கு உடம்பெல்லாம் வேருத்துக்கொட்டிச்சுது. எட அறுந்துபோனதுகள் ஒருத்தன் ஒரு கலையில கெட்டிக்காரன் எண்டால், அவனுக்குப் பக்கத்தில ஒரு வளர்ந்து வாற கலைஞன் நிக்கப்படாதே...?, சரி, பிள்ளைக்குத் தான் பிடிக்கேல்லைஎண்டாலும், பிள்ளையின்ர மனநிலையை மாத்தி, எல்லாரோடையும் அனுசரிச்சுப் போறதன்மையை பெற்றாரல்லே உருவாக்கவேணும். இல்லைத் தெரியாமத்தான் கேக்குறன், ஒரே ஆள் தான் கடைசிவரைக்கும் எல்லாஇடத்தையும் பிடிச்சுக்கொண்டு நிக்கவேணுமெண்டால், மிச்சம் நிக்குறவன் எல்லாம் வாய்பாக்குறதே..?? ஒரு சாதாரண கலைக்கே உந்தப் போட்டி எண்டால், உலகத்தில கின்னஸ் ரேஞ்சுக்கு ஒரு தமிழன் போனால் கொலையே நடக்கும் போல கிடக்கு. உதில பெரிய பகிடி என்னெண்டால், சும்மா தானும் தன்ரபாடுமாய் இருக்கிற பிள்ளைக்கு, ஏத்தி விடுறதும் அம்மா, அப்பா தானுங்கோ. "நீ எல்லாத்துக்கும் அலையாதை பிள்ளை, நீயும் இடைக்கிட விட்டுப்பிடி, அப்பத்தான் எல்லாருக்கும் உன்ர அருமை-பெருமை தெரியும்" எண்டு ஏத்திவிட, பிள்ளை படாரெண்டு பப்பாசி மரத்தின்ர உச்சில போய் நிக்கும். திடீரெண்டு முறிஞ்சு விழுந்தாலும், திருந்தாமல் திரியுறதுகளும் எக்கச்சக்கமாய் இருக்குக் கண்டியளோ. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில உண்டு எண்டு சும்மாவே சொன்னவை...!

உதைவிட இன்னொண்டும் பல இடங்களில நான் அவதானிச்சனான், தன்ர பிள்ளை, அல்லது தன்ர பிள்ளை சேர்ந்து செய்யுற குழு நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் பாஞ்சு பாஞ்சு கைதட்டுவினம், அதே வயசிலஉள்ள பக்கத்துவீட்டுக்காரப் பிள்ளையோ, இல்லாட்டில் வேற யாரும் தமிழ்ப்பிள்ளையளோ மேடையில நிண்டால், மூஞ்சைய மூண்டு அடி நீளத்துக்கு நீட்டிப்பிடிச்சுக்கொண்டும் கையைக் கட்டிக்கொண்டும் அப்பிடியே சிலைமாதிரி நிப்பினம். ஏனெண்டால் மற்றவன் ஏதாகிலும் விசயத்தில கொஞ்சம் கெட்டிக்காரனாய் வந்திட்டான் எண்டால் எங்கடசனத்துக்கு அவ்வளவு பாசம் கண்டியளோ...! எல்லாத்திலையும் என்ர பிள்ளை மட்டும்தான் கொடிகட்டிப்பறக்கவேணும் எண்டால், மற்றதுகள் மனுசரில்லையே..?, உறுதியாச் சொல்லுறன், தமிழன் திருந்தாமல், தமிழீழம் கிடையாது பாருங்கோ...!!!

இன்னும் சில இடங்களில நடக்கிற கூத்து, பெரிய அல்லோல கல்லோலம் பாருங்கோ. ஒரு இடத்தில ஒரு நிகழ்வு நடக்குதெண்டால், அந்த இடத்தில உள்ள ஒரு பெரிய பிரமுகரின்ர பிள்ளைதான் எல்லாம் செய்யவேணும் எண்டு நிப்பினம். அவதான் நடனம் ஆடுவா, அவதான் பாட்டுப்பாடுவா, அவதான் நாடகம் நடிப்பா, உதைவிட அவதான் நிகழ்ச்சியில அறிவிப்பும் செய்வா. ஆனால் பெரியகொடுமை என்னெண்டால், ஒண்டும் அவ ஒழுங்காச் செய்யமாட்டா. அவவுக்கே எல்லாத்தையும் அள்ளிக்குடுக்குறதுக்கெண்டு பிரமுகரின்ர எடுபிடியள் கொஞ்சப்பேர், பொறிக்குத் தப்பின எலி கணக்கில ஓடித்திரிவினம். சில இடங்களில முழுக்குடும்பமுமே மேடையில நிக்குற கூத்தையும் பார்த்திருக்கிறன் கண்டியளோ..! வேற யாரும் மேடையில ஏறவேணும் எண்டால், ஒண்டில் அவைக்கு வால் பிடிக்கவேணும், இல்லாட்டில் அவை மிதிக்க, மிதிக்க, அவையின்ர காலுக்க கிடக்கவேணும். ஏதாவது ஏறுமாறாய்க் கதைச்சியளோ, சிவனே ஏழு ஜென்மத்திற்கும் நீங்கள் மேடையில கால்வைக்க ஏலாத அளவிற்குப் பண்ணிப்போடுவினம். உதாலையே எத்தனையோ சனம், ஏன் வீண்வம்பெண்டு பேசாமத்திரியுதுகள். உதெல்லாம் படுகேவலமான வேலை கண்டியளோ.., எல்லாரும் வாழவேணும், எல்லாரும் சாதிக்கவேணும் பாருங்கோ..!

எல்லாரும் ஒண்டை உணரவேணும் பாருங்கோ, உங்கட வீரத்தையும், கெட்டித்தனத்தையும் ஒண்டாய்ச் சேர்ந்துநிண்டு காட்டவேணும் கண்டியளோ..!!! அப்பத்தான் சிங்களவன் கொஞ்சமாகிலும் யோசிப்பன். உதை விட்டுட்டு மற்றவன்ர கெட்டித்தனத்தை மடக்கிக்குத்துறதும், தன்ர பிள்ளை, தன்ர மாணவன் மட்டும்தான் முன்னேறவேணும் எண்டு யோசிக்கிறதும், தமிழன்ர பரம்பரைப் புத்தியெண்டு அடையாளம் வந்திடக்கூடாது பாருங்கோ. உப்பிடி எத்தனையோ கூத்துகளை, புலம்பெயர்ந்த மண்ணில கண்டிருக்கிறன். எல்லாத்தையும் எழுதுறது அவ்வளவு நல்லதில்லைப் பாருங்கோ. மற்றப்பிள்ளையளையும் மதிக்கவேணும் எண்டு உங்கட பிள்ளையளுக்குச் சொல்லிக்குடுங்கோ. அதுக்குமுதல் பெற்றோராய் இருக்கிற நீங்கள் மற்றப்பிள்ளையளை மதிக்கவேணும் கண்டியளோ..! இல்லாட்டில் பிரயோசனம் இல்லையுங்கோ. ம்..ம்..பார்ப்பம்....! அரபுக் குதிரையானாலும் பிறவிக்குணம் மாறாதெண்டு சொல்லுறவை...! எங்கடை ஆக்கள் என்னமாதிரி எண்டு இருந்துதான் பார்க்கவேணும்...!

அப்ப பாடுவமே ...!

யாதும் ஊரே யாவரும் கேளீர்
என்றான் சங்கத் தமிழனவன்
ஒருத்தனுக்கொருத்தன் அடிபட்டுச் சாவான்
அவன்தான் புலம்பெயர்த் தமிழனவன் ...!



# மரணத்தின் பின்பும் வாழ்வு!?

பூமிபுத்திரன்



சாலை விபத்தொன்றில் நண்பர் ஒருவரின் எட்டு வயது மகன் மரணத்தைத் தழுவிக் கொண்ட சேதி, இடியேறு கேட்ட நாகம் போல என்னை மட்டுமன்றி, இச்சேதியைக் கேட்ட அனைவரையும் பதைபதைக்கச் செய்துவிட்டது.

ஒரு சம்பவம், அந்தச் சம்பவத்தினால் பாதிக்கப்படும் அனைவரையுமே ஏதோவொரு வழியில் எதிர்வினையாற்றத் தூண்டுகிறது. அவ்வகையில் இச்சிறுவனின் மரணம் அனைவர் மனங்களிலும் துயரத்தை ஏற்படுத்தியதோடு, தத்தம் பிள்ளைகள் மீதான கரிசனையையும் அதிகரிக்கச் செய்திருந்தது.

சுவிஸ் நாட்டின் தலைநகரான பேர்ண் மாநகரை அண்டிய பிரதேசங்களில் ஒரேநாளில் மூன்று சாலைவிபத்து மரணங்கள் என்ற சேதி அக்டோபர் 2 ஆம் திகதி நகரவாசிகள் அனைவரையும் உலுக்கியது. காலை ஏழு மணியளவில் ஒரு தமிழ்ச் சிறுவன் பாடசாலை செல்கையில் பாதசாரிகள் கடவையில் மோதுண்டு இறந்தான். பிற்பகலில் சுவிஸ் பெண்மணி ஒருவரும் மாலையில் சுவிஸ் சிறுவன் ஒருவனும் சாலைவிபத்தில் பலியாகினர். இரண்டு விபத்துக்கள் நடைபெற்றமை பற்றி வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் அறிந்திருக்கவே இல்லை என்பதுவும், விபத்தில் சிக்கியவர்களுக்கு உடனடி மருத்துவ உதவிகளை வழங்க முயற்சிக்கவே இல்லை என்பதுவும் கூடுதல் துயரம்.

இந்த மரணங்கள் மஞ்சள் கடவைகளைக் கடக்கும் போது பாதசாரிகளுக்கு உள்ள பாதுகாப்பு பற்றிய விவாதங்களை மீளவும் ஆரம்பித்த அதேவேளை, வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் காவல்துறையினர் தமது நடைமுறைகளை மீளாய்வு செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்களையும் உருவாக்கியிருந்தன.

அண்மைக் காலமாக சுவிஸ் நாட்டைப் பொறுத்தவரை தமிழர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையான மரணங்கள் சம்பவித்து வருகின்றன. இயற்கை மரணங்கள், விபத்துக்கள், தற்கொலைகள் எனத் தொடர்ச்சியான மரணங்கள் நிகழ்ந்து வருகின்றன.

மனித வாழ்வில் மரணங்கள் இயல்பானவை. ஆனால், மரணத்தை வெல்லும் அளவிற்கு மருத்துவம் முன்னேறியுள்ள இன்றைய காலகட்டத்தில், மனிதர்களின் கவனக் குறைவும், அலட்சியமும், விழிப்புணர்வு இன்மையும் நோய்களை அடையாளம் காண்பதில் தாமதத்தை உருவாக்குவதுடன், பரிகாரம் செய்வதிலும் சிக்கல்களை உருவாக்கி மரணங்களைத் தள்ளிப் போட முடியாதவை ஆக்கி விடுகின்றன.

புலம்பெயர் வாழ்வில் ஒரு தலைமுறைக்கும் அதிகமான காலத்தைக் கழித்துவிட்ட தமிழினம், முதுமைநிலை மரணங்களை எதிர்கொள்வது இயல்பானதே எனினும் தற்கொலைகள் அதுவும் இளவயதினர் மத்தியில் நிகழும் தற்கொலைகள் மனதை உலுக்குபவையாக இருக்கின்றன. பெறுமதியான வாழ்வை அற்ப காரணங்களுக்காக முடித்துக் கொள்ளும் அறிவிலிகளாக அவர்கள் இருப்பதுவும் தூரநோக்கற்றவர்களாக விளங்குவதும் பேரவலம்.

வாழ்வதற்குத் தேவைப்படும் மனோதிடத்தை விடவும் வாழ்வை முடித்துக் கொள்வதற்காகத் தேவைப்படும் மனோதிடம் பலமடங்கு அதிகமானது. அத்தகைய வன்மமான மனோதிடத்தைக் கொண்டவர்கள் ஒரு தடவையல்ல, பல தடவை இந்த வாழ்வை வாழ்ந்து காட்ட முடியும். ஆனால், தூரதிர்ஷ்டவசமாக சரியான ஆலோசனை, வழிகாட்டல் இன்மையால் பலரின் வாழ்வு அவலமாக முடிகின்றது.

விபத்துக்கள் நிகழ்வதை உலகில் என்றுமே தடுத்துவிட முடியாது. எத்தனை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்ற போதிலும் ஒரு சிலரின் கவனக் குறைவும், அலட்சியமும், சட்டத்தை மதித்து நடக்காத மனோபாவமும் விபத்துக்களை உருவாக்கி விடுகின்றன. மனித வாழ்வில் விபத்துக்களைத் தடுப்பதற்காக எத்தனையோ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், புதுப்புதுக் கோணங்களில் விபத்துக்கள் சம்பவிக்கவே செய்கின்றன.

மரணங்கள் மனிதவாழ்வில் விருப்பத்துக்கு உரிய ஒன்றாக விளங்குபவையல்ல. ஆனாலும், அவற்றைத் தடுத்துவிட முடிவதில்லை. மரணம் உருவாக்கும் இழப்புக்கள் இலகுவில் ஜீரணிக்க முடியாதவை. பெறுமதிமிக்க மனித உயிர்கள் இழக்கப்படும்போது உறவுகளும், சுற்றமும் நிலைகுலைந்து போகின்றன. இழப்பின் துயரத்தில் இருந்து மீள்வதற்கு சிலருக்கு நீண்டகாலம் எடுக்கின்றது.

மரணங்களை வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு அம்சம் என நினைப்போர், மரணங்களை இட்டுக் கவலை கொண்டு வாழா இருப்பதைவிட அத்தகைய மரணங்களைக் கூட சமூக நலனுக்காக எவ்வாறு பயன்படுத்தலாம் எனச் சிந்துத்துச் செயற்படுவார்.


தமிழ் மக்களிடையே மரணத்தின் பின் "கல்வெட்டு" வெளியிடும் வழக்கம் உள்ளது. மரணித்த மனிதனின் அருமை பெருமைகளைக் கூறுவதற்கும், அவரின் இழப்பால் துயருறும் உறவுகள் தங்கள் மன ஆதங்கங்களைக் வெளிப்படுத்துவதற்கும் இதனை ஒரு சாதனமாகப் பயன்படுத்துவர். சம்பிரதாயபூர்வமான இந் நிகழ்வு அண்மைக் காலமாக புலம்பெயர் மண்ணில் ஒருசில மாற்றங்களுடன் சமூகத்துக்குச் சேதிசொல்லும் ஒன்றாக மாறி வெளிவருகின்றமையைக் காண முடிகின்றமை வரவேற்கத் தக்கதே. எனினும், அது ஒருவகையில் "காலங் கடந்த ஞானமாகவே" தென்படுகின்றது.

ஆனால், ஒரு மரணம் மற்றவருக்கும் பயனுள்ள ஒன்றாக மாற்றப்படக் கூடும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நண்பனின் மகனது மரணம் அமைந்திருந்தது. விபத்தில் அவர் இறந்த ஒரு சில நிமிடங்களிலேயே அவரது தந்தை எடுத்த முடிவு மரணத்தின் பின்னும் அவர் பெயர் பேசப்படும் விதமாக அமைந்தது. இறந்த சிறுவனின் உடலத்தில் இருந்த அங்கங்களை. அங்கங்கள் தேவைப்படும் வேறு நபர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு அந்தத் துயரமான வேளையிலும் அந்தத் தந்தை எடுத்த முடிவு நிலையற்ற வாழ்வு வாழும் அனைத்து மனிதர்களையும் ஒருகணம் சிந்திக்க வைத்தது. எதுவித பிரயோசனமும் இல்லை என்ற முடிவிற்கு வந்து தமது வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைப்பவர்கள் கூட, எம்மாலும் மற்றோருக்கு உதவ முடியும் எனச் சிந்திக்க வைக்கும் அளவிற்கு இந்தக் கொடை அமைந்திருந்தது.

அந்தக் கொடையோடு மாத்திரம் நின்றுவிடாமல் அது பற்றிய விழிப்புணர்வை ஏனையோருக்கும் ஏற்படுத்தும் வகையில் இறந்த சிறுவனின் அந்தியேட்டி நிகழ்வில் அங்கங்களைத் தானம் செய்வது பற்றிய பரப்புரையும் மேற்கொள்ளப் பட்டமை மனதை நெகிழச் செய்தது.

சில வேளைகளில் பல மனிதர்களின் வாழ்வு அர்த்தமற்றதொன்றாகவே முடிந்து போகின்றது. அத்தகைய மனிதர்கள் கூட மரணத்தின் போது தங்கள் அங்கங்களைத் தானம் செய்வதன் ஊடாக தமது வாழ்க்கையையும் அர்த்தமுடையதொன்றாக மாற்றிக் கொள்ளலாம் என்பதற்கு அந்த நிகழ்வு ஒரு எடுத்துக் காட்டு என்றே கூறிவிடலாம்.



# திருமண வீட்டில் நானே மணமகன், இழவு வீட்டில் நானே பிணம்!

- இலட்சுமணன் -

கிழக்கு மாகாண சபையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிள்ளையான் தலைமையிலான ஆளும் தரப்பினர் தமது எதிர்கால இருப்பு தொடர்பில் அச்சம் கொண்டுள்ளமை அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகளின் மூலம் வெளிப்பட்டு வருகின்றது. கடந்த தேர்தலில் எதிரிகள் இல்லாத களத்தில் போட்டியிட்டு வென்றதைப் போன்று அடுத்துவரும் தேர்தலில் இலகுவில் வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு தமது போட்டியாளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரங்கட்டும் செயற்பாடுகளிலும், அவர்கள் மீது வசைபாடும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். பொது அரங்குகளில் தமது குரல் மட்டுமே ஒலிக்க வேண்டும் என விரும்பும் அவர்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் என்பவற்றுக்குக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கக் கூடாது என உத்தியோகப் பற்றற்ற முறையில் உத்தரவுகளைப் பிறப்பித்து வருவதுடன் தமது உத்தரவுகளை மீறு-வோரை எச்சரித்தும் வருகின்றனர். கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் பொதுமக்களின் செல்வாக்கைப் பெறும் வழிவகைகளைத் தடுத்துவிட விரும்பும் அவர்கள், அனைத்து நிகழ்வுகளுக்கும் தம்மைத் தவிர வேறு எவரையும் அழைக்கக் கூடாது என வெட்கம்கெட்ட தனமாக வேண்டுகோள் விடுத்தும் வருகின்றனர்.

திருமண வீடாயின் மணமகனாகவும், இழவு வீடா-யின் பிணமாகவும் தானே இருக்க வேண்டும் என நினைப்பதற்கு ஒப்பானது இது.

எப்பாடுபட்டாவது தேர்தல்களில் வெற்றி பெறுவதனூடாக தாம் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளோம் என நிரூபிக்க விரும்பும் இவர்கள் தாம் மேடையேறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது போட்டியாளர்கள் எனக் கருதும் கூட்டமைப்பை விமர்சிப்பதிலும், வசை-பாடுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். மக்களுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்க வக்கற்ற இவர்கள் பொய்களையும், புரட்டுக்களையும் தமது பேச்சுக்களின் ஊடாக அவிழ்த்துவிட்டு வருகின்றனர்.

இலவசங்களையும், விளையாட்டு உபகரணங்களையும் வழங்குவதன் ஊடாக மக்களைத் தமது ஆதரவாளர்களாக வைத்துக் கொள்ள முடியும் என்ற வரட்டுத்தனமான சிந்தனையைக் கடைப்பிடிக்கும் இவர்கள், வடக்கிலே ஈ.பி.டி.பி. செய்வதைப் போன்ற காரியங்களில் கிழக்கில் ஈடுபட எத்தனிக்கின்றனர்.

வடக்கில் எவ்வாறு மாகாண ஆளுனர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரங்கட்டி வருகின்றாரோ அவ்வாறே கிழக்கிலும் செய்வதற்கு எத்தனிக்கின்றனர்.

இத்தகைய செயற்பாடுகள் யாவையுமே தமது எதிர்கால வெற்றி மீது இவர்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையின் வெளிப்பாடுகளே.


எதிர்க் கட்சியின் செயற்பாடென்பது ஆளும் கட்சி எடுக்கின்ற முடிவுகளில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தவும், செயற்பாடுகளில் மேம்பாடு சார்ந்து குறை நிறைகளைத் தெரிவிப்பதற்காகவுமே என்பதனை கிழக்கு மாகாண முதலமைச்சர் அடங்கிய ஆளும் தரப்பு உணரவில்லைப் போல் தெரிகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில், தமிழர்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளான தாயகம், தேசியம்,

தன்னாட்சி என்பவற்றுக்கு தமிழ் அரசியல்வாதிகள் முன்னுரிமை கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. மறுக்கப்படும் உரிமைகள் பற்றிப் பேசவும் போராடவும் வேண்டிய அவசியமும் இருக்கிறது. அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்து வருகின்றனர்.

ஆளும் தரப்பினரைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றித் தான்தோன்றித் தனமாகவும், தங்களுடைய அறிவுகளுக்கு எட்டிய வரையிலும், தங்களது அடிவருடிகள் சொல்பவற்றை வைத்துக் கொண்டும் தீர்மானங்களை எடுத்து வருகின்றனர். இதனால் அவர்களுடைய செயற்பாடுகள் மிகச் சின்னத்தனமாக இருக்கின்றன என்றே கூறவேண்டும்.

அரசியலுக்குள் பிரவேசித்து ஒரு சில வருடங்களிலேயே தமக்கு அரசியல் சாணக்கியம் வந்து விட்டதாக நினைக்கும் மாகாண சபையின் ஆளும் தரப்பினர் சிறுபிள்ளைத் தனமாக நெஞ்சில் அடித்து உரையாற்றுவதனைக் காண முடிகிறது.



கிழக்கின் முதலமைச்சர் பிள்ளையான் அண்மையில் மட்டக்களப்பில் ஒரு நிகழ்வில் பேசுகையில், "தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எமது சமூகத்தின் கடந்தகால வரலாறுகளைக் கற்றுக் கொள்ளாமை கவலையளிக்கிறது. ஒரு சமூகம் தனது கடந்த காலப் பின்னணி மற்றும் நடைமுறைகள், எதிர்காலத்தில் தனது சமூகம் பயணிக்க வேண்டிய முறைமைகள் என்பன பற்றித் திட்டமிடுவதற்குக் கட்டாயம் நாம் எமது கடந்த கால வரலாறுகளைக் கற்றே ஆக வேண்டும். இதனை தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கற்றுக் கொள்ளவில்லை என்பது வேதனையளிக்கின்றது" எனத் தெரிவித்திருந்தார்.

"1944 ஆம் ஆண்டு டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களினால் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வி மசோதாவை முதன்முதலில் எதிர்த்தவர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலம், மகாதேவா, சிறி. பத்மநாதன், இவர்களெல்லாம் யார்? தமிழர்களின் தலைவர்கள் இல்லையா? மகாதேவா என்பவர் தாங்கள் புகழ்ந்து கொண்டிருக்கும் சேர் பொன்னம்பலம் அருனாச்சலம் அவர்களின் புதல்வர் என்பது தங்களுக்கு தெரியாதோ என்னமோ? இவர்களெல்லாம் இந்து வேளாளர் உயர்குலத்தில் பிறந்த வடக்குத் தமிழர்கள் தான். இவர்களின் வழி வந்தவர்கள்தான் இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதை தன்னால் புரிந்து கொள்ளமுடியாமல் போனதற்காக நான் வருந்துகின்றேன்."

"எது எவ்வாறாக இருந்தாலும் இலவசக் கல்வி முறையினை எதிர்த்த தமிழ்த் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூதாதையர்கள் என்பதனை நான் ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த காலங்களில் கிழக்கு மாகாண மக்களை ஏமாற்றிய அந்த தலைமைகளுக்கு இன்றும் வக்காளத்து வாங்கும் அடிவருடிகள் இருக்கும்வரை எமது மாகாணம் உருப்படாது. அவ்வாறானவர்களை இனங்கண்டு எமது மக்கள் அவர்களைத் துரத்தி விரட்டும் காலம் வெகு விரைவில் வந்து விடும்" என்றும் அவர் மேலும் கூறியிருந்தார்.

அவருடைய மேற்படி கருத்துக்கள் அவரது அரசியல் அறிவின் வரட்டுத் தனத்தையே காட்டி நிற்கிறது. ஏனெனில் கடந்த கால அரசியல் தலைவர்கள் மீது குற்றம் சுமத்துவதாகக் கருதிக் கொண்டு அவர் ஒரு தரப்புக்கு ஆதரவாகவே பேசி வருகின்றார்.

இத்தகைய பாரதூரமான கருத்துக்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் பல இடங்களிலும் முன்வைக்கும் பிள்ளையான், பிரதேசவாதத்தினை வடக்கு கிழக்கு மக்களிடையே ஏற்படுத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். அதே நேரம் கடந்த மாதம் முதல் பாடசாலைகள், பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் போன்ற அனைத்துத் தரப்பினருடைய நிகழ்வுகளிலும் ஆளும் தரப்பினர் தவிர்ந்த வேறு எவரையும் அழைக்கக் கூடாது என எழுதப்படாத அறிவித்தல் ஒன்றையும் விடுத்துள்ளார். அதன் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிகழ்வுகள் எதற்கும் அழைக்கப்படுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட முடியாத சூழலை உருவாக்கிவிட்டு மாகாணசபைத் தேர்தலை நடாத்தியதுடன்,

பெருமளவான மக்கள் வாக்களிக்காத நிலையைப் பயன்படுத்தி அதிகளவான கள்ள வாக்குகளையும் போட்டு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட பிள்ளையான் அரசியல் சாணக்கியம் பற்றியும், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் பற்றியும், வரலாறு பற்றியும் பேசுவதைப் பார்க்கும் போது நகைப்பாக இருக்கிறது.

அபிவிருத்தி விடயத்தில் கூட, மக்களின் தேவைகளை அறிந்து உரிய விபரங்கள் திரட்டப்பட்டு, முறையான திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரியவில்ல. இருப்பினும் தினமும் ஏதாவது ஒரு இடத்தில் அடிக்கல் நாட்டுவிழா, வீதித் திறப்புவிழா, கட்டடத் திறப்புவிழா என விழாக்கள் நடைபெற்ற வண்ணமேயே உள்ளன. இதில் கூட குறிப்பிட்ட பிரதேசங்களே உள்ளடக்கப் படுகின்றன. குறிப்பாகச் சொல்வதானால் பிள்ளையானின் பிறந்த ஊரான வாழைச்சேனை - பேத்தாளை மற்றும் பிரசாந்தனின் ஊரான ஆரையம்பதி போன்ற பிரதேசங்களை அண்டியே இத்தகைய பணிகள் நடைபெற்று வருகின்றன.

அபிவிருத்தி என்ற போர்வையில் தனிப்பட்ட நலன் பேணலும், தமது சுயலாபத்துக்கானதும், வருமானம் ஈட்டும் வகையிலுமான செயற்பாடுகளுமே நடைபெற்று வருகின்றன.

"நீண்ட அரசியல் கலாசாரம் உடைய தமிழர்கள் வெறும் நூறு வருட அரசியல் வரலாறு கொண்டவர்கள், எல்லாளன் காலத்தில் கூட மட்டக்களப்பார்கள் போருக்குச் சென்றிருக்கிறார்கள். அப்போதும் வீரத்தை வெளிப்படுத்துபவர்களாக நம்மவர்கள் இருந்திருக்கிறார்கள். அரசியல் தெரியாத விடயமாக இருந்திருக்கிறது. வடக்குத் தமிழர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள்" என்றெல்லாம் கூறிவரும் பிள்ளையான் கிழக்குத் தமிழர்களுக்கென சரியான முறையில் தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை. தமிழ் மக்களின் பொருளாதாரக் கல்வி முன்னேற்றங்களைத் திட்டமிட்டு நடத்தவும் தயாரில்லை.

மக்களிடம் ஆதரவு இருந்ததாகச் சொல்லப்பட்ட பிரதேசவாதச் சிந்தனை உசுப்பிவிடப்பட்ட காலம் போன்று இப்போது மீண்டும் தேர்தல்கள் வரவிருக்கின்றன என்ற எண்ணத்தில் நேரடியாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை நிகழ்வுகளில் சந்தித்து கருத்துக்களை எதிர்கொள்ள முடியாத, குறைகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் நிகழ்வுத் தடைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கென உருவாக்கப்பட்ட தடையில் ஏனைய எதிர்க் கட்சியினரும் சிக்கியிருக்கின்றனர் என்பதே இதில் வேடிக்கை.

கிழக்கின் அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் ஒவ்வொருவரும் பிரதேசத்தின் அமைதியிலும், மக்களின் மகிழ்ச்சியிலும் அக்கறை செலுத்தியே ஆகவேண்டும். கிழக்கை அபிவிருத்தி செய்தல் என்பது ஒரு மிக நீண்ட காலத் திட்டமாகும். அது வடக்குடன் இணைந்ததாகவே கொண்டு செல்லப்பட வேண்டும். ஒழுங்கு படுத்தல்கள் மிகவும் சீராகவும், நேர்த்தியாகவும், திறமையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களின் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளை நன்கறிந்து கால ஓட்டம், உலகமயமாக்கலின் வேகம், தொழில்நுட்ப மாற்றங்கள், மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சி ஆகியவை உள்ளிட்ட பல விடயங்கள் நன்கு கவனத்தில் எடுத்து அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களின் உரிமைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அபிவிருத்தி என்ற போர்வையில் வெளியூர்க்காரர்கள் வந்து செல்வதற்கு மாத்திரம் வசதியாகப் பிரதான வீதிகளைத் திருத்திவிட்டுக் கண்துடைப்புக்காக ஒருசில பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்து விட்டுத் தமிழர் பிரதேசங்களில் சிறப்பாக அபிவிருத்திகள் நடைபெறுகின்றன என்று தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

அந்தவகையில் பொது நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்வதைத் தடுக்கும் முயற்சிகள் எதிர்வரும் தேர்தலிலும் அவர்கள் போட்டியிட முடியாத ஒரு சூழலைத் தோற்றுவிப்பதற்கான முன்னோட்டமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. கூட்டமைப்பினரின் குரலைத் தடுப்பதென்பது ஒட்டு மொத்தத் தமிழர்களின் கருத்துக்களையும் தடுப்பதற்குச் சமமாக ஆகிவிடாது என்பதனை ஆளும் தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

தமது பதவிகளையும் இடங்களையும் தக்கவைத்துக் கொள்வதற்காக அரசியல்வாதிகளின் கால்களைப் பிடிக்கும் அதிகாரிகள் ஆலோசனை சொல்வதை விடுத்து அரசியல்வாதிகளின் விருப்பத்துக்கு ஏற்ப ஜால்ரா போடுபவர்களாகவே உள்ளனர். இந்த நிலையில் மாற்றம் வர வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

வெளிநாடுகளைப் பொறுத்த வரையில் அபிவிருத்திப் பணிகள் யாவையும் மக்களின் தேவை, சனத்தொகை வளர்ச்சி, எதிர்கால மேம்பாடுகள் எனப் பல விடயங்களையும் கவனத்தில் எடுத்தே திட்டமிடப்படுகின்றன. அதனாலேயே அன்றாடச் சவால்ளை சிறந்த முறையில் அந்நாடுகளால் எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கின்றன.

தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் காலனித்துவ சக்திகள் மேற்கொண்ட இன்னமும் நல்லநிலையில் உள்ள வடிகாலமைப்பு, போக்குவரத்து, தொழில்துறைக் கட்டமைப்புகளைக் கொண்டே இன்றும் அனைத்துப் பிரதேசங்களும் செயற்பட்டு வருகின்றன என்பதே யதார்த்தம்.

மக்களின் அரசியல் உரிமைகளை மறுத்துவிட்டு வெறும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதால் மாத்திரம் மக்களை வளைத்துப் போட்டுவிட முடியாது என்பதைப் பிள்ளையான் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமது போட்டியாளர்களின் கருத்துக்கள் மக்களைச் சென்றடைவதைத் தடுப்பது என்ற வகையிலான போக்கை ஆளும் தரப்பினர் தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றமை எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும் ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் என்பதைப் புரிந்து கொண்டு நடப்பதே அனைவருக்கும் நல்லது.





முன்னாள் பிரித்தானிய வெளி உறவு அமைச்சர் லியாம் பொக்ஸ் (நரி) ஸின் இலங்கை விவகாரத்தில் அதிகார எல்லை மீறல் மற்றும் நிதி மோசடிகள் செய்த குற்றங்களை ஏற்று அமைச்சர் பதவியைத் துறந்தார்.

அந்தக் குற்றங்களுக்கு பொறுப்பானவர் என அடையாளம் காணப்பட்டவர் நரியின் ஆருயிர் நண்பரும் கைத்தடியுமாக விளங்கிய வெரிற்றி. இப்போது இவர் நீண்ட கால மௌனத்தின் பின் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படத் தானே உதவியதாகக் கூறுகிறார்.

பொக்ஸ் என்ற நரி கட்டிய பாலத்துக்கு மண்போட்டு பல இலட்சம் மக்களை உயிரோடு புதைகுழியில் தள்ளி மூடிய இந்த அணிலுக்கு முதுகில் குறி போடுவது யார்?






தமிழ் இனத்தின் தொன்மையை, பண்பை இன அடையாளத்தைக் குறிக்கும் விழா தமிழ் உழவர் திருநாளான தைப் பொங்கல் விழாவாகும். தமிழ் மொழியை, தமிழர் பண்பைப் பற்றிப் பேசும் போது தமிழ் மூதாட்டி ஔவையாரைக் குறிப்பிடாமல் நிறைவு பெறாது. அது போன்றே தமிழ் இனத்தை, அதன் வரலாற்றை, வாழ்வியலைப் பற்றிப் பேசும்போது தைப் பொங்கல் பற்றிக் குறிப்பிடாமல் நிறைவு பெறாது.

தமிழ் மக்கள் இந்து, கிருஸ்துவ, முஸ்லீம் எனப் பிளவு படும் காலத்துக்கு முன்பே இன அடையாளமாக உருவானதே இந்த உழவர் விழா. இன்று சிலர் இதனை ஒரு இந்துக்களின் விழாவாகப் பார்ப்பதில் சிலர் முற்படுவது தெரிகிறது. அத்தகைய நிலைக்கு அவர்கள் பின்பற்றும் மதக் கோட்பாடுகள் காரணமாக உள்ளன. சூரியனைக் கடவுளாக வணங்குவதை இஸ்லாம் ஏற்பதில்லை. அவ்வாறே கர்த்தரை, பரிசுத்த ஆவியை, ஏசுவை வணங்குவதைத் தவிர வேறு எவரையும் கிருஸ்தவம் ஏற்பதில்லை. எனவே இது இன்று இந்துக்களின் விழாவாகப் பார்க்கப்படும் அவலம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் இனத்தின் பிளவுகளில் மதங்களும் பங்கேற்று வந்துள்ளன. எனவே தமிழரின் அரசியல் உரிமைப் போருக்கும் இன அடையாளத்துக்கும் இடையே மதம் பெரும் இடைஞ்சலாக உள்ளது. ஆயினும் உண்மை உணர்ந்த சில மதத் தலைவர்கள் இந்த விடயத்தில் மௌனமாகவே உள்ளனர். வேறு சிலர் வெளிப் படையாகவே தமது விலகி நிற்கும் போக்கை மத நம்பிக்கை காரணம் காட்டி நியாயப் படுத்துகின்றனர்.

சில அரசியல்வாதிகள் மட்டும் பத்திரிகை அறிக்கைகள் மூலம் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வெள்ளத்தில் மக்களை மூழ்கடித்து மூளைச் சலவை செய்கின்றனர். ஆனால் ஒவ்வொரு தையிலும் தமிழன் வாயில் புதிது புதிதாக தையல் விழுந்து இன்று வாயே திறக்க முடியாத நிலைக்கு தமிழினம் வந்து விட்டது.

நாம் ஒவ்வொருவரும் வாய் திறந்து பேச வேண்டும், பேசுவது உண்மையாகவும் இருத்தல் வேண்டும். மக்கள் பேசுவதுதான் ஜனநாயகம். உண்மைகளை எல்லாம் உளறிக் கொட்டச் சொல்லவில்லை. ஆனால் பேசுவது எல்லாம் உண்மைகளாக இருக்க வேண்டும். பேச்சுக்கள் எல்லாம் செயலாக்கப்பட வேண்டும். அப்படி வாழ்வதுதான் அறம் அதுதான் வாய்மை என வள்ளுவரும் சொன்னார். இந்த அறத்தையே செய்ய விரும்பு என ஔவையும் அறம் செய்ய விரும்பு என்றார்.

நன்றி மறப்பது நன்றல்ல. நன்றி மறவேல். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு என்ற போதனைகளை வேத வாக்காக கொண்டு வாழ்ந்த இனம் தமிழ் இனம். கெட்டதை விட்டெறியும் விவேகமும் தெரிந்தவன் தமிழன். அதனால்தான் மார்கழிக் குளிரை அதன் கடைசி நாளான தைநாளின் முன்தினம் தேவை அற்றதைச் சுட்டெரித்துச் சூடேற்றிச் சுகம் கண்டான். சுத்தம் கண்டான்.

வருடம் எல்லாம் தன் கதிரால் இருள் போக்கி எமது உடல்வருடி விழித்தெழப் புது விடியலைத் தந்து பகலெல்லாம் பார்த்திருந்து பக்கம் இருக்கும் பகலவனுக்கு நன்றி கூற நினைத்தான் தமிழன். அதற்கு ஏற்ற நாளாக தை முதல் நாளில் தன்னருகே நெருங்கி வரும் ஆதவனை ஆண்டவனாக வழிபட தெரிவு செய்தான். தன் மனதில் பொங்கும் நன்றி உணர்வின் வெளிப்பாடாகப் பொங்கலிட்டு பூசை செய்ய நினைத்தான்.

மழையாகவும் வெயிலாகவும் வானத்தில் வந்து வாழ வைக்கும் சூரியனால் கிடைத்த செந்நெல்லும் செங்கரும்பும் செவ்வாழையும் இஞ்சியும் மஞ்சலும் மா பலா வாழை என்ற முக்கனியும் சூரியன் முன் அவனது உணர்வுப் பொங்கலாக உணவுப் பொங்கல் படைத்து உளம் மகிழ்ந்தான். உடன் உழைத்த எருதையும் பாலமுதம் சொரிந்த பசுவையும் நீராட்டிச் சீராட்டி அழகுசெய்து பொங்கலை அவற்றுக்கும் கொடுத்து பொங்கலோ பொங்கல் என உரக்கக் கூச்சலிட்டு ஏனைய உயிரினங்களும்சுவைக்கும் வகையில் வீசி எறிந்து விருந்து படைத்து தானும் உண்டான். நன்றியை வெளிப் படுத்துவதோடு அவனது விருந்தோம்பல் பண்பையும் இவ்விழா காட்டுகிறது.

எப்போது தொடங்கியது இந்த தை விழா? நிச்சயமாக ஆரியர் வந்ததாகக் கூறப்படும் கி.மு.1500 ஆண்டுகளுக்கு முன் எனக் கூற முடியும். இப்படியான ஒரு சிறந்த பண்பாட்டுக்குச் சொந்தக்காரர் என்ற பெருமை உலகில் வாழும் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. மதத்தால் இந்துவா? கிருஸ்துவமா? முஸ்லீமா? என்ற பேதங்கள் பின்னர் வந்து விட்டாலும் இனத்தால் தமிழன் என அடையாளப் படுத்தும் எவரும் தைப் பொங்கல் நாளை கொண்டாடுவதால் மிகப் பழமையான இன அடையாளம் தமக்கு இருக்கிறது எனப் பெருமைப்பட முடியும். எனவே அகரமும் உங்களோடு இணைந்து அந்தப் பெருமையில் திளைக்கிறது.




அண்மையில் வடபகுதி நகர்ப்புற மாணவரிடையே நடத்திய ஆய்வில் ஆண் பெண் என 28 மாணவர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள அதிர்ச்சி தரும் செய்தி வெளியாகி உள்ளது. விற்பனையில் இத்தனை பேர் என்றால் விபரீதம் எத்தனை பெரியது என உணரலாம்.

அடிமைப் படுத்த பட்ட மக்களின் மனதைச் சிதைப்பது ஆக்கிரமிப்பாளரின் நிரந்தர வெற்றிக்கான அடிப்படைத் தேவை. முன்னர் இந்திய அமைதிப் படையும் கஞ்சாச் செடி வளர்த்தல் போன்ற திட்டங்களில் ஈடுபட்டமை நாம் அறிந்ததே. அப்போது புலிகளின் எதிர்ப்பும் அர்ப்பணிப்பும் அந்தத் திட்டத்தைப் பெரிதும் செயலிழக்க வைத்தன.
பல பாலியல் குற்றங்களுக்கும் இள வயது மணமாகாத கர்ப்பமும் கருவழிப்பும் சிசுக் கொலைகளும் அதிகரிக்க இத்தகைய போதைப் பொருட்களே காரணம். ஆனால் யாழ் அரச அதிபர் இமெல்டாவும் நகர மாதாவும் புலம் பெயர் தமிழரைச் சாடுவதிலேயே ஆர்வமாக உள்ளனர். உண்மையில் இவற்றைத் தென் பகுதியில் உள்ள மேர்வின் சில்வா போன்ற சிங்கள அரசியல் வாதிகளின் ஆதரவில் இராணுவமும் அதனுடன் இயங்கும் தனியார் போதைப் பொருள் வியாபாரிகளும் காரணமாக உள்ளனர்.

இந்தக் கபடத்தைத் தெரிந்து கொண்ட வட பகுதி சமூக ஆர்வலர் மற்றும் யாழ் பல்கலைக் கழக கல்வியாளர்கள் தீவிரமான எதிர் நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளமை எமக்கு ஆறுதல் தருகிறது. தொடர்ந்தும் தீவிர செயற்பாடுகள் மூலம் இக்கொடிய பழக்கத்தை வேரோடு வெற்றிகரமாகக் களைய அகரம் இப்பெரு மக்களை நன்றி உணர்வோடு கேட்டு நிற்கிறது.





இலவசம் இலவசம்
Happy Pongal
A K M
!!! மலிவு மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம் A.K.M மில் மட்டும் தான் !!!
மாபெரும் மலிவு விற்பனை அனைத்து மீன் மரக்கறி வகைகளும்
தாயகத்தில் இருந்து மிக தரமாக நேரடியாக வருவிக்கப்பட்டது
உங்கள் தேவை அனைத்தும் ஒரே குடையின் கீழ்
SALE
NIDO
அனைத்து மரக்கறி வகைகளும்
அனைத்தும் தரம் மலிவு
அனைத்து மரக்கறி வகைகளும்
SALE
SALE
SALE
SALE
SALE
SALE



# இளநீர் குடிப்பது சிங்களம் கோம்பை தூக்குவது புலம் பெயர் தமிழரா?

அவர்கள் உங்களின் உறவுகள்... எனவே நீங்கள்தான்..! இப்படித் தமிழ் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் மகிந்த கூட்டமும் எது வித சுருதி பேதமும் இன்றி வார்த்தைகளால் புலம் பெயர் தமிழ் மக்களின் இதயத்தைக் குத்திக் குதறி எடுப்பதில் சுகம் காண்கின்றனர்.

இளநீர் குடிப்பது சிங்களம் கோம்பை தூக்குவது புலம் பெயர் தமிழரா? புலம் பெயர் தமிழரின் கண்களைக் குத்திக் கண்ணீர் வரச் செய்து அதன் மூலம் தமிழீழ மக்களுக்குக் கஞ்சி ஊற்றும் பணியில் சிங்களம் உறுதியாக உள்ளது. அதற்குத் தமிழர் தரப்பும் சிங்களத்துக்கான அரசியலை செய்து வருகிறது.

சிங்களத்தின் கபடத்தை அறியாமல் அதன் மனிதத்துக்கு எதிரான குற்றத்தை உலகறியச் செய்யாமல் புலத்தில் வாழும் தமிழரின் இரத்தத்தை அட்டை போல் உறுஞ்ச உதவுகிறதா தமிழரின் தேசிய அரசியல்? இப்படித்தான் இன்றைய தமிழரின் அரசியலை பார்க்க வேண்டி உள்ளது.

இத்தனை அழிவுகளையும் அவலத்தையும் ஏற்படுத்தக் காரணமான சிங்களம் சர்வதேச அரசுகள் மற்றும் இணைத் தலைமை நாடுகள் எல்லாம் எமது மக்களின் துயரைத் துடைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பேற்க மறுப்பதேன்? மீள் கட்டுமானப் பணிகளுக்கு எனச் சிங்களம் பெறும் பெருந்தொகை அந்நிய உதவிகளும் கடன்களும் அவற்றைப் பெறும் அனைத்துத் தகுதியும் கொண்டுள்ள எமது உறவுகளுக்கு ஏன் போய்ச் சேருவதில்லை எனக் கேட்க எம்மைக் கடிச்சுக் குதறும் எவருக்குமே உரிமை கிடையாதா?

சிங்களம் வெளிப்படையாகச் சொல்கிறது என்ன உதவி என்றாலும் அரசு மூலமாகவே செய்யப்பட வேண்டும் என்று. ஆனால் அனுமதி கேட்டுப் போனால் அவை அரசினால் சிங்களத்துக்கு மடை மாற்றப் படுகிறது. எனவே எமது மக்கள் நிலையில் எதுவித மாற்றமும் இல்லை.

இப்படிச் செய்வதன் மூலம் இந்தப் பயங்கரவாதப் போரை முன்னெடுத்தது புலம் பெயர் தமிழரும் தமிழர் தரப்புமே என்ற வக்கிரமான வாதத்துக்கு வலுத் தேடுகிறது. தமிழரின் ஜனநாயக முகமாக உருவாக்கப் பெற்று வந்த தமிழர் தேசியக் கூட்டமைப்பு கிடைத்த பதவியைத் தக்க வைக்க எடுப்பார் கைப்பிள்ளையாக நடந்து கொண்டு புலிக்கும் தனக்கும் பந்த பாசம் இல்லை எனக் காட்ட முற்படுகிறது.

இவர்கள் இப்பொழுது தமிழ் மக்களால் தேர்ந்து எடுக்கப் பட்ட பின்னரும் மக்கள் பிரச்சினை எதற்கும் தீர்வு கண்டது கிடையாது. இவர்கள் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதை விடுத்து மக்களின் மீள் குடியேற்றம் பாதுகாப்பு சிவில் நிர்வாகம் பற்றியோ கைதிகள் பற்றியோ, காணாமல் போனோர் பற்றியோ மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்காது என்ன அரசியல் செய்ய வேண்டி இருக்கிறது?

இந்தப் பகற் கொள்ளையை உலகறியச் செய்யும் தார்மீக உணர்வோ அறிவோ இல்லாது தமிழர் தேசியக் கூட்டமைப்பும் யாழ் அரச அதிபர் யாழ் நகர மாதா தமக்குக் கிடைத்துள்ள ஊடகப் பிரச்சாரப் பீரங்கி மூலம் வாய்க்கு வந்த படி புலம் பெயர் தமிழர் மீது பழியை உளறிக் கொட்டுகிறார்கள். அரச அதிபர் கார்களுக்கும்

இலட்சம் சம்பளத்துக்கும் ஆற்றும் பணியை அவர் அரசுக்கு விசுவாசமாகப் பேசுவதை தவறு எனக் கூறமுடியாது. ஆனால் மக்களின் வாக்குப் பரிசில் பதவி பெறும் நகர மாதாவோ த.தே.கூட்டமைப்போ. அவ்வாறு பேசுவது மக்கள் குரலாக அமையாமல் அரசின் குரலாகவே அமையும்.

புலம் பெயர் நாடுகளில் தமிழர் காசு காய்க்கும் மரங்களைத் தமது வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கிறார்கள் என்கிற நினைப்பு இவர்களுக்கு. அதைப் பறித்து சிங்களத்தின் தேவைக்காக இவர்கள் நடத்தும் அரசியலுக்கும் வகிக்கும் பதவிகளுக்கும் கொட்டிக் கொடுத்துப் புண்ணியம் தேடவேண்டும் என எமக்குத் தலையணை மந்திரம் போல் திரும்பத் திரும்ப உபதேசம் செய்கிறார்கள்.

அங்குள்ள மக்கள் இவர்களுக்கும் சொந்தம் இல்லையா? அவர்களின் கண்ணீரைத் துடைக்கும் பணியும் பாசமும் பரிவும் இவர்களுக்குக் கிடையாதா? இவர்கள் யாருக்கும் பிச்சை போட்டுப் புண்ணியம் தேட வேண்டாம். புலம் பெயர் மக்களுக்கு மந்திரமும் ஓத வேண்டாம். உண்மைகளை உலகறிச் சொல்லி அங்குள்ள மக்களுக்கான நியாயமான நிவாரணத்தை வாழ்வுக்கான ஆதாரத்தை பாதுகாப்பான வாழ்வும் குடிசார் வாழ்வியல் கட்டுமானமும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் செய்தால் போதும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பல கோடிக்கணக்கான சொத்துகளை பறித்தும் கிளிநொச்சி முல்லைத் தீவுப் பகுதி தமிழீழ வைப்பகங்களில் இருந்தும் இராணுவத்தால் எடுத்துச் செல்லப் பட்ட பொது மக்களின் பல நூறு கிலோ எடை தங்க நகைகளின் கதி என்னவாயிற்று? அவற்றை அதே மக்களின் மறுவாழ்வுக்கு அரசைச் செலவிடக் கேட்காமல் புலம் பெயர் தமிழரை வசை பாடுவதில் என்ன நியாயம் இருக்கு ?

பல வெளிநாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயற்படும் நிலையை உருவாக்குங்கள். அரச அதிபருக்கும் அதுதான் அழகு அவர் மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெறுபவர். அங்குள்ள மக்களுக்கான குறிப்பாக பெண்களுக்கு மானத்துடன் வாழும் நிலையை அவரே உருவாக்க வேண்டும். வெறும் செய்தி அறிக்கைகள் அந்த மக்களுக்குச் சோறும் போடாது.

அங்கு புலம் பெயர் தமிழரின் விபச்சார விடுதிகள் இயங்குகின்றன என்ற வெட்கக் கேடான செய்தியை நீங்களே ஊடகங்களுக்குக் கூறுவதை விடுத்து அவற்றின் தொழிற்பாட்டைத் தடை செய்யுங்கள். யாழ் நகர மாதாவுக்கும் நாம் சொல்ல விரும்புவது இதுதான். பெண் குலத்தின் பெருமையாக விளங்க வேண்டும் என்றால் பெண்மை பெருமையடையும் வகையில் அரசியல் செய்யுங்கள். மற்றப்படி எது செய்தாலும் அது விபச்சாரம்தான்.

எமது கடுமையான சொற்கள் நாம் விருப்பத்தோடு பயன்படுத்துவன அல்ல. இனமாக நாம் தண்டிக்கப்படும் பொழுது தனிமனித உணர்வுகளுக்கோ விருப்பு வெறுப்புகளுக்கோ நாம் இடமளிக்க முடியாது. சிங்களம் தமிழரை இனமாகக் கூட்டுத் தண்டனை கொடுத்து வஞ்சம் தீர்க்கிறது. எமக்கு ஏற்படும் வலியில் தமிழ் இனத்தைச் சேர்ந்த உங்களுக்கும் பங்குண்டு.

தமிழ் மக்களின் தன் மானத்தை! தேசியத்தை! தாயகத்தை! தன்னாட்சி உரிமையை! விலையாகக் கேட்பதும் கொடுப்பதும் விபச்சாரத்துக்கு சமம். இந்த உண்மையை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து அதற்கு எதிராகப் போராட வேண்டும். இந்த உரிமைகள் எல்லாம் எக்காலத்திலும் எவராலும் விட்டுக் கொடுக்க முடியாதவை.

இவை எமது முன்னோர் மூலம் எமக்குக் கிடைத்த எமது முதுசம், அதனை நாம் அனுபவித்து விட்டு அடுத்த தலைமுறைக்கு கொடுக்லாமே அல்லாது எவருக்கும் விற்கவோ அடமானம் வைக்கவோ வேறு வகையில் விட்டுக் கொடுக்கவோ முடியாது. இதனைச் சட்டவாளர் நிறைந்த த.தே.கூ. நன்கு தெரிந்து கொண்டிருக்கும்.

இந்த உரிமைகள் எமக்கு இல்லை எனச் சிங்களம் கூறுமானால் அதே உரிமைகள் சிங்களத்துக்கும் இருக்கமுடியாது என வாதிடும் உரிமை எமக்கும் உண்டு. த.தே.கூ. தனி நபர்கள் அல்ல! அவர்கள் எமது இனத்தின் பிரதிநிதிகள்! புலிகளால் வெளிப்படையாகக் காண்பிக்க முடியாது இருந்த மக்களின் ஆணை த.தே.கூ. இருக்கிறது. எனவே ஜனநாயக மொழியில் அவர்கள் புலிகளை விடப் பலம் நிறைந்தவர்கள். மத்திய கிழக்குப் போன்ற நாடுகளில் மக்கள் குரல் காட்டும் பலம் இவர்களுக்கும் வழி காட்டட்டும்.


Orient Textiles and Jewellery
2011 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958

# 2012இல் KOLLYWOOD

வி. சபேசன்

*2011 ஆண்டு ஓடிப் போய் விட்டது. 2011இல் தமிழ் சினிமா எப்படி இருந்தது என்பது பற்றி பலர் எழுதி விட்டார்கள். ஒரு மாறுதலுக்கு 2012இல் எதிர்பார்க்கப்படுகின்ற சில படங்கள் பற்றி பார்க்கலாம்.*



கொச்சடையான்

ரஜினிகாந்த் நடிப்பில் வெளிவர இருக்கின்ற படம். ஏற்கனவே ரஜினிகாந்த் "ரணா" என்கின்ற படத்தில் நடிப்பதாக அறிவித்து கடைசியில் அவருடைய உடல் நிலை காரணமாக கைவிடப்பட்டது. இதை அடுத்து "கொச்சடையான்" என்கின்ற "3டி" படத்தில் ரஜினிகாந்த் நடிப்பதாக அறிவித்துள்ளார்கள். இது 2012க்குள் வெளிவருமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆயினும் ரஜினிகாந்தின் மகளான ஐஸ்வர்யா 2012இன் இறுதிக்குள் படத்தை முடித்து விடுவோம் என்று கூறியிருக்கிறார்.



விஸ்வரூபம்

கமல்ஹாசன் இயக்கி நடிக்கின்ற படம் இது. 2010இல் கமல்ஹாசன் நடிப்பில் வெளிவந்த மன்மதன் அம்பு படம் சரியாகப் போகவில்லை. 2011இல் கமலுடைய படம் ஒன்றும் வெளிவரவில்லை. இந்த நிலையில் கமல் வித்தியாசமான வேடத்தில் நடித்து இயக்குகின்ற "விஸ்வரூபம்" ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்து விட்டதால் படம் 2012 இறுதிக்குள் வந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




எந்திரன் படத்திற்குப் பின்பு ஷங்கர் இயக்குகின்ற படம் இது. விஜய், ஜீவா, சிறிகாந்த் ஆகியோர் நடிக்கின்றார்கள். அமீர்கான் நடிப்பில் வெளிவந்து மிகப் பெரும் வெற்றியைப் பெற்ற "திரி இடியட்ஸ்" என்கின்ற இந்திப் படத்தின் தழுவல் இது. இந்தியாவின் கல்வி முறையையும் அதன் பாதிப்புக்களையும் ஆழமான உணர்வுகளையும் பேசுகின்ற படம் இது. இதுவரை ஷங்கர் இயக்கிய படங்களில் இருந்து மிகவும் மாறுபட்ட படம். பொங்கல் அன்று வெளியாகின்றது.

## -மாற்றான்-

சூர்யா நடிக்க கேவி ஆனந்த் இயக்கும் "மாற்றான்" திரைப்படம் 2012இல் எதிர்பார்க்கப்படும் ஒரு முக்கிய திரைப்படமாகும். 2011இன் வெற்றிப் படங்களில் கேவி ஆனந்தின் இயக்கத்தில் வெளிவந்த "கோ" திரைப்படமும் ஒன்றாகும். கேவி ஆனந்தின் இயக்கத்தில் 2009இல் சூர்யா நடித்திருந்த "அயன்" திரைப்படமும் ஒரு வெற்றிப்படமாக அமைந்திருந்தது. இந்த நிலையில் வெளிவரவிருக்கின்ற மாற்றான் பலரால் ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படத்தில் சூர்யா இரட்டை தோற்றத்தில் நடிப்பதோடு ஒரு வித்தியாசமான பாத்திரமாகவும் தோன்றுவதாக சொல்லப்படுகிறது. ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் இந்தப் படம் வெளிவர இருக்கிறது.

**'3'** இந்தப் படம் ஆரம்பத்தில் பெரிதாகக் கண்டு கொள்ளப்படவில்லை. ஆனால் "வை திஸ் கொலவெறி" பாடலோடு பலருடைய எதிர்பார்ப்புக்கு உரியதாக இந்தப் படம் மாறி விட்டது. தனுஸ் கதாநாயகனாக நடிக்கிறார். நாயகியாக சுருதி கமல்ஹாசன் நடிக்கின்றார். ஐஸ்வர்யா இயக்குகின்றார். படம் வெளிவருவதற்குள் கமலும் ரஜினியும் ஏதாவது ஒரு காட்சியில் வருவது போன்ற கதைகளும் பரப்பப்பட்டு மேலும் எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்து விடுவார்கள். படம் வெளிவரும் திகதி இன்னும் உறுதி செய்யப்படவில்லை. என்றாலும் ஓரிரு மாதங்களுக்குள் படம் வெளிவந்து விடும்



## பில்லா II

சென்ற ஆண்டின் பெரும் வெற்றிப்படமாக அஜித்தின் மாங்காத்தா படத்தை பலரும் சொல்கிறார்கள். அத்தோடு ஏற்கனவே அஜித் நடித்த பில்லா திரைப்படமும் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது. பில்லா திரைப்படம் "டான்" என்கின்ற இந்திப் படத்தின் தழுவல்தான். 2011இன் கடைசியில் இந்தியில் வெளிவந்த "டான் 2 " திரைப்படம் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது. இதனால் பில்லா 2 பற்றிய எதிர்பார்ப்பும் அதிகமாக உள்ளது. சித்திரைப் புத்தாண்டு அன்று வெளிவரும் என நம்பப்படுகிறது.




"வெய்யில்", "அங்காடித் தெரு" போன்ற சிறப்பான படங்களைத் தந்த வசந்தபாலன் இயக்குகின்ற படம் இது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழர்களைப் பற்றிய படம் என்று சொல்லப்படுகிறது. வசந்தபாலன் இது வரை இயக்கிய படங்களில் இருந்து மிகவும் மாறுபட்ட களம் இது. மிருகம், ஈரம் போன்ற படங்களில் நடித்த ஆதி கதாநாயகனாக நடிக்கின்றார். வசந்தபாலனின் வெய்யில் படத்தில் நடித்த பசுபதியும் முக்கிய பாத்திரத்தில் வருகிறார். பரத்தும் ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடிக்கிறார். படம் பெப்ரவரி மாதம் அளவில் வெளிவரும் என்று கூறப்படுகிறது.

## அன்னக் கொடியும் கொடி வீரனும்...

இயக்குனர் இமயம் பாரதிராஜா இயக்குகின்றார். முதலில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்க இருந்து பின்பு கருத்து வேறுபாட்டால் அது சரி வராமல் போக, தற்பொழுது இயக்குனர் அமீர் நடித்துக் கொண்டிருக்கிறார். பாரதிராஜா வெற்றிப்படம் ஒன்றைக் கொடுத்து நீண்ட நாட்கள் ஆகி விட்டது. கிழக்குச் சீமையிலே படத்திற்கு பின்பு இன்று வரை ஒரு பெரும் வெற்றியை அவரால் தர முடியவில்லை. சில படங்கள் தோல்வி அடைய சில படங்கள் சுமாராக ஓடின. இந்த நிலையில் மீண்டும் களம் இறங்கியிருக்கும் பாரதிராஜா எப்படியான ஒரு படத்தை தரப் போகிறார் என்கின்ற எதிர்பார்ப்பு பரவலாக இருக்கிறது.

இவைகளை விட இயக்குனர் பாலாவின் "எரியும் தணல்", பசங்க படத்தை இயக்கிய பாண்டிராஜின் "மெரினா", மைனா படத்தை தந்த சாலமன் பிரபுவின் "கும்கி", ஆடுகளம் வெற்றிமாறனின் "வட சென்னை" போன்ற படங்களும் எதிர்பார்ப்புப் பட்டியலில் இருக்கின்றன.

சிறந்த இயக்குனர்களாக கருதப்படுகின்ற பாலா, மிஸ்கின், செல்வராகவன் போன்றவர்களால் 2011இல் குறிப்பிடத்தக்க வெற்றியை தர முடியவில்லை. ஆயினும் இவர்கள் 2012இல் இயக்குகின்ற படங்கள் குறித்த எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது.

2011இல் எதிர்பார்க்கப்பட்ட பெரும்பாலான படங்கள் ஏமாற்றத்தை தந்தன. 2012இல் எதிர்பார்க்கப்படும் படங்கள் வெற்றி பெற்று சினிமா ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கட்டும்.

## அவளைத் தொடுவானேன் கவலைப் படுவானேன்?

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் ஆழக் காலூன்றி அவதியில் தவித்த அமெரிக்க அரசு இப்பொழுது ஆளில்லா விமானத் தாக்குதல்கள் செய்தும் ஆயுத உதவிகளை வழங்கியும் தனது இராணுவப் பிராந்திய ஆசைகளை மத்திய கிழக்கு நாடுகளில் நிறைவேற்றி வருகிறது.

தனது நட்பு நாடு எனப் பேசியே பாக்கிஸ்தானுக்குள் ஆளில்லா விமானத் தாக்குதல்களைச் செய்து பகைமையை தேடியது. எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் மக்கள் புரட்சிக்கு உதவியது. அதே சமயம் பாரெயினில் மக்கள் புரட்சியை அடக்க அந்நாட்டு அரசுக்கு உதவுகிறது. ஒரே நேரத்தில் அங்கும் இங்கும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் உள்ளிட்ட அமெரிக்க ஆயுதங்கள் தாராளமாகப் பயன் படுத்தப் படுகின்றன.

ரஷியாவில் தேர்தல் எதிர்பாளருக்கு அமெரிக்காவின் பணமே பின்புலமாக உள்ளது என்ற குற்றச்சாட்டை புட்டின் வைக்கிறார். கடைசியாகக் கையும் மெய்யுமாக அமெரிக்க ஆளில்லா வேவு விமானம் ஒன்றை ஈரான் எதுவித சேதமும் இன்றித் தனது வான்பரப்பில் வைத்து கைப்பற்றி உள்ளது.

இதனை மீளத் தருமாறு ஒபாமா அழாத குறையாகக் கேட்கிறார். அவளைத் தொடுவானேன் கவலைப் படுவானேன்?

## தமிழில் ஸ்ரீலங்காவின் தேசிய கீதம்!

தமிழரின் ஏகத் தலைமையாக விளங்கும் த.தே.கூ. ஸ்ரீலங்காவின் தேசிய கீதத்தைத் தமிழில் பாட சிங்கள அரசிடம் அனுமதி கேட்கிறது. இப்படிக் கேட்கிற தலைவர்களுக்கும் அவர்களைத் தலைவர்கள் எனத் தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடுவோருக்கும் அது இருக்கிறதா? எனக் கேட்க வேண்டும் போல் இருக்கிறது.

சிங்களத்தைப் படிக்காதே, தேசியக் கொடியை ஏற்காதே அரசமைப்பு சட்ட நகலை எரி என எரித்தவர்களும் எரிக்க வைத்தவர்களும் தமிழரின் ஏகத் தலைமையான தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் என்பது ஒரு சுகமான வரலாறு. இன்று அவர்களின் அரசியல் வாரிசான த.தே.கூ. தமிழில் தேசிய கீதம் படிக்க அரசின் அனுமதி கேட்கிறது.

இப்படியான அரசியல் தலைமைகளே எமது இனத்தின் இன்றைய அழிவுக்கு காரணம் என்பதும் வரலாற்றின் நியாய பூர்வமான தர்க்க ரீதியான முடிவு. இந்த உண்மைய நாம் ஏற்கும் வரை எமது இனத்தின் விடுதலை வெறும் கனவே.

எமது இனத்திற்க்கோ இனத்தின் அரசியல் தலைமைக்கோ அல்லது அதன் தொண்டர்களுக்கோ அது இருக்கா? எது? பகுத்தறிவு!




மாதாந்தம் 300 MB இணையம் இலவசம்

பிரான்ஸ்

# Lycamobile

Appelez le monde pour moins cher

# 60 க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான இலவச அழைப்புகள்..!

இணைப்புக் கட்டணம் இல்லை.!

**0** ct/நிமிடம்*

- இந்தியா
- இலங்கை
- மலேசியா
- ஐரோப்பா
- கனடா
- அமெரிக்கா
- சிங்கப்பூர்
- குவைத்
- சவூதி அரேபியா

*30€ வுக்கு மீள் நிரப்பும் பொழுது 600 நிமிடம் அல்லது குறுந்தகவல் (SMS) இலவசம்

## பிரான்ஸ்

| வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி | உள்நாட்டு குறுந்தகவல் |
|---|---|---|
| 0 Ct/நிமிடம்* | 12 Ct/நிமிடம்** | 9 Ct/(SMS) |

Lycamobile லில் இருந்து Lycamobile 0* Ct

*அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புகள் பிரான்ஸிலிருந்து அல்ஜீரியா, சவூதி அரேபியா, பஹ்ரைன், வங்காளதேசம், கனடா, சீனா, கொலம்பியா, கோட் டிவோர், எகிப்து, அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், ஹாங்கொங், இந்தியா, இந்தொனேசியா, ஈரான், ஈராக், ஜோர்டான், குவைத், லாவோஸ், லெபனான், மலேசியா, மொராக்கோ, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், போலாந்து, றொமேனியா, ரஸ்யா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, துருக்கி, வியட்நாம் வீட்டுத்தொலைபேசிக்கும் மற்றும் எல்லா நாடுகளிலுள்ள லைக்காமொபைல்களுக்கும் பொருந்தும். இச்சலுகை மீள்நிரப்பிய நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புகளும், குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால் லைக்காமொபைலில் வழமையான கட்டணம் அறவிடப்படும். இக்கட்டணங்கள் 24.12.2011ல் பதிப்பாகும் பொழுது சரியானவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.fr, 01 77 72 23 22 *சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. Lycamobile SARL 47 boulevard de Courcelles, 75008 Paris; 528 332 505 RCS Paris. **ஒவ்வொரு சலுகையல்லாத அழைப்புக்களுக்கும் இணைப்புக்கட்டணமாக €0.09 அறவிடப்படும்.

**01 77 72 23 22**

**www.lycamobile.fr**

Lycamobile மீள் நிரப்பக்கூடிய இடங்கள்

SPF · phoneo · extenso · RELAY · PRESSE · dape Distribution · PANINI

# ஈழத் தமிழராலும் முடியும் எனச் சாதித்துக் காட்டுவோம்!



முள்ளிவாய்க்காலில் மே 2009ல் நடந்தது தமிழ் இனப் படுகொலையே என உலகைப் பேச வைக்க ஈழத் தமிழராலும் முடியும். முதலாம் உலகப் போரின் போது 1915-1916ல் துருக்கியின் ஒட்டோமான் படைகள் 15 இலட்சம் ஆர்மீனிய மக்களை கொன்று அழித்தது. அதனை ஒரு இன அழிப்புக் கொலை எனவும் அதற்குத் துருக்கி அரசு பொறுப்பு ஏற்று மன்னிப்புக் கோர வேண்டும் என்று ஆர்மீனியப் புலம் பெயர் மக்கள் இன்றும் வலியுறுத்தி வருகின்றனர்

ஆனால் துருக்கி அரசு அது ஒரு போர் மட்டுமே அல்லாது இனப் படுகொலை அல்ல என மிக வன்மையாக எதிர்த்து மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்கிறது. இந்நிலையில் பிரென்சு அரசு ஆர்மீனிய இனப் படுகொலையை மறுதலிக்கும் எவருக்கும் சிறைத் தண்டனையும் அபராதமா-கத் தண்டப் பணமும் எனற சட்டத்தை இப்போது இயற்றி உள்ளது.

இதனால் கோபம் கொண்ட துருக்கி அரசு பிரான்சு தேசத்துடன் கொண்டிருந்த இராஜதந்திர உறவுகள் உட்படத் தனது சகல தொடர்புகளையும் துண்டித்துத் தனது கோபத்தைக் காட்டி உள்ளது. மேலும் வருகின்ற தேர்தலில் பிரான்சில் அகதிகளாய் வாழும் ஆர்மீனிய மக்களின் வாக்குகளைப் பெறவே பிரென்சு அரசு இந்தச் சட்டத்தை நிறைவேற்றியது என்று ஸ்ரீலங்கா போலத் தனது மனக் கடுப்பைக் காட்டி உள்ளது. ஆனால் இதனால் பிரெஞ்சு அரசு பின்வாங்கப் போவதில்லை.

இலங்கையும் உலக நாடுகளும் முள்ளி வாய்க்கால் படுகொலைகளை தமிழ் இனப் படுகொலை எனப் பேசக் கூடாது என எமக்கு இன்று தடை போட்டு வருகின்றன. ஈழத் தமிழர் நாமும் மனம் தளராது ஆர்மீனிய மக்கள் போன்று, யூத மக்கள் போன்று தொடர்ந்து பிடிவாதமாக வாதாடி இங்கு நடந்தது இனப் படுகொலையே என வலியுறுத்தி வந்தால் மட்டுமே என்றேனும் ஒரு நாள் முள்ளி வாய்க்காலில் மே 2009ல் நடந்தது தமிழ் இனப் படுகொலையே என உலகைப் பேச வைக்க முடியும். எனவே த.தே. கூட்டமைப்பும் தமிழ் மக்களும் இது விடயத்தில் மிகக் கறாராக செயற்பட வேண்டும்.

நூறு வருடங்களைக் காணும் நிலையிலும் ஆர்மீனிய மக்கள் தமது மக்கள் மீது துருக்கிப் படைகள் நடத்திய படுகொலைகளை இனப் படுகொலை என உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் நாட்டை ஏற்றுச் சட்டம் இயற்ற வைக்க முடியும் என்றால் நம்மாலும் ஈழத் தமிழராலும் முடியும் எனச் சாதித்துக் காட்டுவோம்!

ஜேர்மனியில் தரம், உத்தரவாதத்துடன்
நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழர் ஸ்தாபனம்
SUN TVயின் நீண்ட கால வீடியோ கிஸ்தர்
TJB BROTHERS
ASIAN SUPERMARKET
எமது வாடிக்கையாளர்களுக்கு மனம் நிறைந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
R. Ragunathan
Parkhofstr. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81
Deutsche Bank
Konto Nr: 474 11 53
BLZ: 390 700 24

## சாதனைச் செல்வியா? சாதாரணச் செல்வியா?



தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிறந்துள்ள புத்தாண்டுச் செய்தியாகப் பலவற்றைச் சாதிக்கத் தமது சாதனைப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டின் செலவாக தனது தோழி சசி-கலாவையும் அவரது ஆதரவாளர்களையும் தமது வீட்டில் இருந்தும் கூட்டில் இருந்தும் கைகழுவி விட்டிருக்கிறார். ஆனாலும் அவர் கலைஞர் குறிப்பிட்டது போன்ற ஒரு கூடா நட்பாக இருந்த ஒன்றை அடையாளம் கண்டு மிகத் துணிச்சலாக அதிரடி நடவடிக்கைகள் மூலம் தமது சுபாவத்தைக் காட்டி விட்டார். பல தற்காப்பு ராஜதந்திர வியூகமாக அவரது பட்டியலில் ஈழத் தமிழர் பற்றி எதுவும் குறிப்பாக இல்லை என்பது பலரின் கண்டனத்தை அவருக்குக் கொடுக்கலாம். ஆனால் அவரது இன்னொரு செய்தியாக அடுத்த ஆட்சியை அ.இ.அ.தி.மு.கவே தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என வெளிவந்து பின்னர் இணையத்தில் இருந்து நீக்கப்பட்டு விட்டது போல் தெரிகிறது.

எது எப்படியோ அவர் இப்போ அடுத்த கட்டம் நோக்கிய நடவடிக்கையில் தீவிரமாகி உள்ளார் என்பது தெளிவாகிறது. அவர் சாதாரண நாயகி அல்ல சாதனை நாயகி என்பதை நிரூபிக்க ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அருள்வாராக.

ஈழத் தமிழருக்கு விடியலை ஏற்படுத்த வல்லவராக இருக்கும் ஒருவராக அகரம் அவரைத் தொலை நோக்கோடு பார்க்கிறது. ஆழிக் கடலில் தத்தளிக்கும் எமக்கு கண்ணுக்கும் கைக்கும் எட்டிய தூரத்தில் அவர் மட்டுமே தெரிகிறார்.

வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்க நினைப்பவர் நாம். பனை மரங்களாக நம்பி இருந்தவர்களை எல்லாம் பறி கொடுத்த நிலையில் நாம் வடலியைத்தானே நம்ப வேண்டும்?






# வடக்கே போகும்! ஆனால் போகாது! ஏன்?

இவை உடல் உறுப்பு ஊனமுற்றோர் பாவனைக்கான உருளி இருக்கை வண்டிகள். இருபத்தோராம் நூற்றாண்டில் ஊனமுற்றோர் நோயாளிகளை அனுதாபத்தோடு பார்ப்பதைத் தவிர்த்து அவர்கள் எவருக்கும் சமம். சம உரிமைகள் அவர்களுக்கும் உண்டு. வாழ்வைத் தன்மானத்தோடு அனுபவிக்கத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கும் தார்மீகக் கடப்பாடு சமுதாயத்துக்கும் குறிப்பாக அரசுகளுக்கும் இருக்க வேண்டும் என்ற சிந்தனை வலுப் பெற்றுள்ள நூற்றாண்டு. அத்தகைய பண்பு இன மத தேச எல்லைகளைக் கடந்தது.

அத்தகைய உயரிய மனித நேயப் பண்பின் வடிவமாக இலங்கையில் போரினால் உறுப்புகளை இழந்த தமிழ் மக்களின் பாவனைக்கு என பிரித்தானியாவில் இயங்கும் றோமன் கத்தோலிக்கத் தமிழர் அமைப்புடன் இணைந்து பிசியோநெற் (PhysioNet) நிறுவனம் 322 இவ்வகை வண்டிகளை அனுப்பியிருந்தது. ஆனால் சிங்கள இனவெறி ஆட்சி உள்ள இலங்கையில் இந்த உயர் பண்புகளுக்கு இடம் கிடையாது என்பதற்கு இந்தச் செய்தி சாட்சி.

முன்னர் தமிழர் அனுப்பிய வணங்கா மண் கப்பல் நிறைந்த மருந்துகளும் குழந்தைகள் பால் மா என்ன கதி அடைந்ததோ அதனைப் போன்றே இந்த உதவியும் 3 மாதங்களுக்கு மேலாகத் துறைமுகச் சுங்கப் பகுதியில் தூக்கத்தில் வைத்த பின் 8000 அமெரிக்க டொலர் சுங்க வரியாக இலங்கை ரூபாயில் 10 இலட்சம் விதிக்கப்பட்டிருக்கிறது.

இது விடயமாக யோக்ஸயரில் இயங்கும் பிபிசியோ நெற் நிறுவனத்தின் பீற்றர் தோம்சன் இந்த ஏற்றுமதி தொடர்பான ஆவணங்கள் சரியான வகையில் இல்லாத காரணத்தால் இப்படியான தாமதம் நேர்ந்தது என்றும், எல்லா இறக்குமதிகளுக்கும் சுங்க வரி உண்டு எனவும் தமக்கு இலங்கை அரச அதிகாரிகளால் தெரிவிக்கப் பட்டதாயும், அதனைக் கொடுத்து எண்ணற்ற ஆவணத் தயாரிப்பின் பின்னரே அவை வட பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப் பட்டதாகவும் பி.பி.சிக்குச் தெரிவித்துள்ளார்.

வடக்கே அவை போகும்! ஆனால் போகாது! ஏன்? படைத் தளபதி விட மாட்டாரே!


Baby Baloon Decoration



உங்கள் மங்களகரமான அனைத்து விழாக்களையும் ஒழுங்கமைத்து தருகின்றார்கள்!







கேக், மணவறை, வீடியோ, போட்டோ, அகன்ற திரை, உணவுவகைகள், மண்டப ஒழுங்குகள் அனைத்திற்கும்

Baby Baloon Decoration

தொடர்புகளுக்கு:
0033 613 06 20 29
0033 1 39 80 85 23



பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
அனைத்தும் தங்கத்தின் பெருமதி!
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14




இந்தியாவுக்கு உலகின் மிகப் பெரிய சனநாயக நாடு என்ற பெருமை உண்டு அதே போல அரசின் தலைவராக ஒரு பெண்மணியே இருக்கிறார். புது தில்லி முதல்வர் ஷீலா திக்சிற், லோக் சபை சபா நாயகி மீரா குமார், எதிர்க் கட்சித் தலைவி சுஸ்மா சுவராஜ், உத்தர பிரதேஷ் முதலமைச்சர் மாயாவதி, இந்திய ரெயில்வே மத்திய அமைச்சராக இருந்து திறமையுடன் செயற்பட்டவரும் இப்போது மேற்கு வங்க மாநில முதலமைச்சராக உள்ள மம்தா பானர்ஜி மற்றும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா போன்ற ஒரு சில பெண்களே மெச்சும் படியாக வாழ முடிகிறது. ஆனாலும் இவர்களின் வாழ்விலும் சோதனைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

பாராளுமன்றத்தில் 33 சத வீத ஆசனங்களை பெண்களுக்கு ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பல வருடங்களாக வலியுறுத்தப் பட்டு வந்தாலும் எந்த ஒரு அரசியல் கட்சியும் பெண்களுக்கான வாய்ப்பு வழங்கத் தயாராக இல்லை. முக்கியமாக மிக வயதான தொண்டுக் கிழங்களே கட்சிகளை ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். சோனியா காந்தி தலைவியாக உள்ள காங்கிரஸ் கட்சியே குறிப்பிடத் தக்க அளவுக்குப் பெண்களுக்கு மதிப்பு அளிப்பதில்லை.

இந்தியச் சமுதாயக் கட்டமைப்பு சாதி மற்றும் பிரபுத்துவ மத ஆதிக்கம் செல்வாக்கு செலுத்தும் ஒன்றாக இருப்பதால் பரம்பரை அரசியல் சாதி அரசியல் போன்ற அடக்கு முறை அரசியல் அதிகம் தலை விரித்தாடும் கட்சிகளே வெற்றி பெற முடிகிறது.

இப்படியான சூழலில் அங்கு பெண்களின் நிலையோ நினைத்துப் பார்க்க முடியாத துன்ப துயரம் நிறைந்த ஒன்றாக உள்ளது. வெளிநாட்டு கலாச்சாரம் மத்திய வகுப்பில் குறிப்பிடத் தக்க அளவு ஊடறுத்துக் காணப்பட்டாலும் மணவாழ்க்கை குடும்பம் என வரும் பொழுது அவை முற்றாக மறைந்து பழைய கட்டுப்பெட்டித் தனமே மேலோங்குவதைக் காணலாம். பெரிய புரட்சிப் பெண்கள் போல் சினிமாவில் குத்தாட்டம் போடும் பெண்களும் தனி வாழ்வு என வரும் பொழுது சின்ன வீடாகவோ அல்லது தனியாகவோ வாழும் வாழ்வுதான் பொதுவான ஒன்றாகக் காண முடிகிறது. அரிதாக கௌரவமாக மணம் முடிக்கும் நடிகைகளும் விரைவில் விவாகரத்தை நாடும் நிலையே உள்ளது.

இத்தகைய சூழலில் ஏழைகள் தினக் கூலி செய்து பிழைக்கும் பெண்கள் அன்றாடம் நரக வாழ்வு வாழும் நிலையே இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் உள்ளது. மேல் சாதிக் காரரின் அடக்கு முறை பாலியல் தேவைகளுக்கு பலியாகும் கதையாகவே அங்குள்ள பெண்கின் வாழ்வு உள்ளது.

அண்மையில், காட்டு வாசிப் பெண்களைக் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, துன்புறுத்திய வனத் துறை அதிகாரிகளும் காவல் துறை அதிகாரிகளும் 21 ஆண்டு கால நீதிமன்றப் போராட்டத்தின் பின்னர் சிறைக்கு அனுப்பப் பட்டனர். இந்த நீதி கூட ஒரு மக்கள் இயக்க அமைப்பு எடுத்த அயரா முயற்சியால் கிடைத்ததே.

கொடுமைகள் செய்யவும் செய்த கொடுமைகளுக்கு வழக்கு விசாரணை இல்லாமல் உயர் சாதியினருக்குத் துணை போகும் காவல் துறையே பெண்களுக்கு எதிரான மிகப் பெரும் கொடுமை செய்பவர்களாக உள்ளனர். பாலியல் வன்முறையை காவல் துறையினரே அதிகம் தமது கையில் எடுக்கின்றனர்.
அரசியல்வாதிகளின் அடியாட்களாக காவல் துறை செயற்படுவது சர்வ சாதாரணமான விடயம். அரசே காணி சுவீகரிப்புகளைச் செய்யும் பொழுது தனியார் காணிகளுக்கான சந்தைவிலையில் நட்ட ஈடு வழங்குவதில்லை. நாடு நகர மற்றும் வீதி சீரமைப்பு என வந்து விட்டால் மக்கள் வீதியில் விரட்டப்பட்டு அவர்களின் நிலங்கள் கையகப் படுத்தப்படும்.

தமிழகத்தில் அரசியல்வாதிகள் தொடக்கம் மாவட்டச் செயலாளர் அவர்களின் எடுபிடிகள் உறவினர் என அனைவருமே காவல் துறையின் துணையுடன் ஆக்கிரமித்த நிலங்கள் இப்போ பெரும் புயலை எழுப்பி வருவதை காணலாம். இது போல் மத்திய மாநில அரசுகள் பெரிய வெளிநாட்டுக் நிறுவனங்களின் தேவைக்கும் பொது மக்களின் காணிகள் ஆக்கிரமிப்புத எல்லா மாநிலங்களிலும் இடும் பேறும் சாதாரண நிகழ்வுகளாகும்.

தோம்ஸன் றொய்ற்றர் ஆய்வு நிறுவனம் 213 பாலின நிபுணர்களிடையே நடத்திய வாக்கெடுப்பின் மூலம் இந்தியா உலகிலேயே பெண்களுக்கு 4 வது ஆபத்தான நாடு என உலக அளவில் நடத்திய ஆய்வு மூலம் தரப் படுத்தி உள்ளது. இந்த நிபுணர்களை மிகவும் கவனத்தை ஈர்த்த விடயங்களாக பெண் கருக் கலைப்பு, பெண் சிசுக் கொலை, பெண்களைக் கடத்திப் பாலியல் தொழிலுக்கும் அடிமைகளாகவும் பயன் படுத்தும் கொடுமைகள் உள்ளன.

தினம் தினம் புத்தம் புதிய
பொலிவுடன் உடன்
மரக்கறி வகைகள்.

இல்லை என்று சொல்லா
வண்ணம் அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும்.

வாரம் தோறும் உடன்
உப்புகடல் மீன்வகைகள்.

இவை அனைத்துக்கும்

நாடுங்கள்

நிஷான் சுப்பர் மார்சே

*பாரிஸ் மாநகரில்*

# நிஷான்

## சுப்பர் மார்சே

**பண்டிகை
காலத்தில் விசேட
மளிகைப் பொருட்கள்
நாள் தோறும்
அதிரடி மலிவு
விற்பனை
அனைத்திற்கும்
நாடுங்கள்
நிஷான் சுப்பர் மார்சே**




உங்களை இன்முகத்துடன்
வரவேற்று உங்கள் தேவையை
உடனடியாக நிறைவேற்ற
காத்திருக்கின்றார்கள்
வாடிக்கையாளரின் சிகரமான
நிஷான் சுப்பர் மார்சே!


ADRES NISAN CASH AND CARRY

64 RUE LOUIS BLANC
75010 PARIS

TEL .0033(0)144720603
FAX .0033(0)142093084



# அச்சுவேலி

வண்ணை தெய்வம்

அச்சுவேலி என்னும் ஊர்ப் பெயருக்குரிய காரணமே பலராலும் விசித்திரமாகக் கூறப்படுகின்றது. கலாநிதி இ.பாலசிங்கம் அவர்கள் தனது "ஈழத்து இடப்பெயர் ஆய்வு" என்னும் நூலில் அச்சு என்பது தேரச்சு, அடையாள முத்திரை, அச்சுப்பதிப்பு என பல அடையாளங்களைக் குறிப்பதாலும். வேலி என்பதற்கு அரண் , காவல், பாதுகாப்பு என கூறப்படுவதாலும், மேலும் அச்சுக்கட்டு என்பதற்கு நெல் பயிரிடத்தக்க நிலம் என பொருள் வருவதாலும் நெல் விளைச்சலுக்குப் பெயர் பெற்ற அந்த மண்ணிற்கு அச்சுவேலி எனப் பெயர் வந்திருக்க வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

இதே நேரம் அச்சுவேலியைச் சேர்ந்த ஒரு நண்பர் சொல்கின்றார் "யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பெருந்தெரு அச்சுவேலியை மையமாகக் கொண்டே செல்கின்றது. இதனால் யாழ்ப்பாணத்தையும் பருத்தித்துறையையும் இணைக்கும் வண்டிச்சக்கர அச்சுப்போல இக் கிராமம் இருப்பதனால் அச்சுவேலி எனப் பெயர் வந்ததாகக".

அச்சுவேலியின் பிரதான சந்தியில் இருந்து ஒன்று புத்தூர் நீர்வேலி, கோப்பாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் செல்கின்றது. இன்னொன்று தோப்பு ஊடாகச் சென்று யாழ்ப்பாணத்தை அடை-யும் இராசவீதி. மற்றும் வல்வெட்டித்துறைக்குச் செல்வதற்கும், பருத்தித்துறைக்குச் செல்வதற்குமான






இணைப்பை ஏற்படுத்தும் பிரதான சந்தியாக அது விளங்குகின்றது. இதில் வல்வெட்டித்துறை வழியாக பருத்தித்துறை செல்லும் வீதிக்கு தனிச் சிறப்பு உண்டு! இவ் வீதியால் செல்லும்போது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தையும், அழகான கடற்கரையையும் அதனை அண்டியுள்ள தென்னந்தோப்புக்களையும் ரசித்துக்கொண்டே செல்லலாம்.

அச்சுவேலியைச் சுற்றியுள்ள அயற்கிராமங்களாக கிழக்குத் திசையில் பரந்த வல்லை வெளியும் ஊர்மனைகளும் அடங்கியிருக்கின்றன. வடக்குத் திசையில் தம்பாலை, இடைக்காடு, வளலாய் என்பனவும். மேற்கே ஒட்டகப்புலம், வசாவிளான், தோலைகட்டி, பலாலி ஆகியனவும். தெற்கே தோப்பு, நவக்கிரி, ஆவரங்கால் ஆகிய ஊர்களும் அமைந்திருக்கின்றன.

அச்சுவேலியில் இருந்து ஒட்டகப்புலம் நோக்கிச் செல்லும் பெருவீதியில்த்தான் அன்பில்லம் என அழைக்கப்படும் "அன்பகம்" அமைந்திருக்கின்றது. இது கல்வியில் பின் தங்கிய பெண்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் போன்று விளங்கியது. பலவிதமான பயிற்சிகளையும் பெற்ற பெண்கள் ஒவ்வொரு வருடமும் சான்றிதழ்களுடன் வெளியேறும் போதும் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டதாரி மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் காட்சியைப்போலவே இருக்கும். இந்த அன்பகத்திற்கு முன்னால் பார்ப்பவர்களை மயங்கவைக்கும் அழகிய மலர்த்தோட்டம் ஒன்று இருக்கின்றது. அதனை உருவாக்கியவர் செல்லர் என்னும் ஓவசியர் ஆவார். இந்த அன்பகத்திற்கு அருகினிலேயே சிறுவர் நன்நடத்தைப் பாடசாலையும் இருக்கின்றது. நாட்டின் பலபாகங்களிலும் இருந்தும் சிறு வயதில் குற்றம் இழைத்த சிறுவர்கள் இங்கு கொண்டுவரப்பட்டு இப் பாடசாலையில் சமூக சீர்திருத்தக் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

அச்சுவேலிச் சந்தியில் இருந்து யாழ்நகர் செல்லும் பெரு வீதியில் வைத்தியசாலை ஒன்று உண்டு. 1947ம் ஆண்டு இதை அமைத்துக் கொடுத்தவர் சேர்.சிற்றம்பலம் காடினர் அவர்கள். அது மாத்திரமல்ல தனக்குச் சொந்தமான பனைமரங்கள் நிறைந்த பெரும் தேசப்பரப்பு ஒன்றை தோலகட்டி ஆச்சிரமத்திற்கு நன்கொடையாக வழங்கியிருந்தார். பனைமரங்களின் தோப்பாக விளங்கிய அந்த நிலம் அங்கிருந்த துறவிகளால் விளைநிலமாகி அருதோன்றிச் செடிகள் அரணமைத்து மலர்ச்செடிகளும், கனிமரங்களும் பயிர் செய்யப்பட்டு பின்னர் அது பெண் துறவிகளின் இடமாக மாறியதெல்லாம் தனிக் கதை! அமரர்சிற்றம்பலம் காடினர் அவர்களின் அரிய தொண்டை மறவாத அம் மக்கள் அவரின் உருவப்படத்தை அங்கு வைத்திருப்பதுடன் ஆண்டுதோறும் அவரின் நினைவு நாளை கொண்டாடி வருகின்றார்கள்.

அடுத்த இதழில் தொடரும்...

குறிப்பு:- அகரம் 6வது 7வது இதழ்களில் தொடராக பிரசுரமான அளவெட்டி பற்றிய மண் வாசனையில் மகாஜனாக் கல்லூரியின் அதிபராக இருந்த திரு.கனகசபாபதி அவர்கள் அளவெட்டியில் பிறந்தாக குறிப்பிட்டிருந்தேன். அவர் அளவெட்டியில் பிறக்கவில்லை என்ற தகவலையும், இறைகுமாரன் உமைகுமாரன் ஆகிய இரண்டு இளைஞர்கள் இராணுவத்தால் கொல்லப்படவில்லை என்றும் அவர்கள் ஒரு இயக்கத்தினரால் கொல்லப்பட்டார் என்றும் அளவெட்டி மண்ணின் மைந்தரான ஓசை மனோ அவர்கள் எமக்கு சுட்டிக்காட்டியுள்ளார். எமக்கு கிடைத்த தவறான தரவுகளினால் ஏற்பட்ட அந்த தவறிற்கு வருந்துகின்றேன்.

*வண்ணை தெய்வம்*

HMH
குறைந்த விலையில் தரமான பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்
Asianshop & Trinkhalle
Heinrich Gustav Str. 82
Bochum Werne
Germany
Tel.: 0234 52 84 783






இன்று ஈழத் தமிழரின் தாயகம், தன்னாட்சி சுயநிர்ணயம் என்ற எதுவுமே இருப்பதாக மனதாலும் நம்பாத அரசியல் தலைமை ஒன்று வரலாற்றைத் தெரியாது "தமிழர் தாயகம் பற்றிப் பேசும் தகுதி தமிழினத்துக்குக் கிடையாது" என்று மக்கள் முன் பேசும் சூடு சுரணையற்ற அரசியல் தலைமையால் தமிழினம் படு பாதாளத்துக்குத் தள்ளப்பட்டு வருகிறது.

அண்மையில் ஈழத் தமிழரின் குடிசார் அறிஞர் பெருமக்கள் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செல்நெறி பற்றி வைத்த காத்திரமான பொறுப்பு வாய்ந்த விமர்சனங்களையும் வேண்டுகோளையும் தூக்கி எறியும் பொறுப்பற்ற பேச்சும் போக்கும் சிலரிடையே காண முடிகிறது. இத்தகைய திமிரான போக்கினால் அன்று தமிழரசுக் கட்சியும் 1970 ல் பல நேர்மையான அரசியல் தலைவர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் வெளியேற்றியது.


அதன் பலனாக 1972ல் ஸ்ரீமாவின் புதிய அரசியல் அமைப்பின் மூலம் தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளைப் பெறத் தவறியதோடு தமிழருக்கு இருந்த தமிழரின் தாயகம் தேசியம் தன்னாட்சி அதிகாரத்தையும் சோல்பரி அரசமைப்பை நீக்க அனுமதித்த காரணத்தால் முற்றாக இழக்கவும் நேர்ந்தது. ஸ்ரீமாவின் அரசமைப்பு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருக்கவில்லை, மாறாக அரசு இரண்டு தமிழ் உறுப்பினர்களான குமாரசூரியர் எம்.சீ.சுப்பிரமணியம் ஆகியோரை நியமன உறுப்பினராக்கி தமிழர் சார்பான ஆதரவைப் பெற்று அரசமைப்பை மாற்றிக் கொண்டது.

1972 அரசமைப்பு சோல்பரி அரசமைப்புத் திட்டத்தின் உப விதிகள் 29-2க்கு முரணானதாக இருந்த போதும் அதனைச் சட்ட ரீதியாக எதிர் கொள்ளச் சட்டத் தரணிகள் நிறைந்த தமிழரசுக் கட்சி தவறியது. தவறியது மட்டும் அல்லாது அதே அரசமைப்புக்குப் பின்னர் சத்தியப் பிரமாணம் எடுத்து அதன் மூலம் அங்கீகாரத்தை தமிழர் . தரப்பு வழங்கியது.

1972 ல் மீண்டும் மிகப் பாரதூமான அரசமைப்பு மாற்றத்தை மக்களின் ஆணையைப் பெறாமலே சிங்களம் செய்தது. ஆனால் எமது தலைவர்களுக்கு அவர்களது பாராளுமன்ற ஆசனங்களைத் தவிர வேறு எதுவுமே முக்கியமானதாக இல்லாத காரணத்தால் அடங்கிப் போனது.

இன்றும் த.தே.கூ. அதே மன நிலையில்தான் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டு வருகிறது. சுதந்திர உணர்வு என்பது அவரவர் இரத்தத்தில் காணப்பட வேண்டிய ஒன்று. வாக்குக்காக வாதாடிப் பணம் பதவி தேடி அலையும் இவர்களிடம் உண்மையான சுதந்திர உணர்வு எப்படி இருக்க முடியும்?



இன்று வரலாறு மீண்டும் திரும்பி உள்ளது. கடந்த அறுபதாண்டுப் போராட்டம் தமிழரின் வாழ்வையும் வளத்தையும் நிலத்தையும் பறித்து வளமோடு வாழ்ந்த இனத்தை பஞ்சைப் பராரிகளாய் சிங்களத்தின் கொத்தடிமைகளாய் ஆக்கி விட்டுள்ளது. இருக்கும் ஒரே ஒரு இறுதிச் சந்தர்ப்பமாக இலட்சக்கணக்கான தமிழரின் அழிவுக்குக் காரணமான முள்ளிவாய்க்கால் அவலம் சர்வதேசத்தின் பார்வையை இன்று எம் பக்கம் திருப்பி விட்டுள்ளது.

தமிழர் தரப்புத் தலைமை எனக் கூற முனையும் த.தே.கூ. தமிழரின் அவலத்துக்குத் தீர்வைத் தேடும் முயற்சியில் இறங்காமல் தமிழ் இன அழிப்பைச் செய்த சிங்களத்துக்கும் இந்தியாவுக்கும் ஆதரவான செயற் பாடுகளில் இறங்கி இருப்பது எவராலும் மன்னிக்க முடியாத குற்றம்.

எனவேதான் வணக்கத்துக்கு உரிய மதத் தலைவர்கள், பல்கலைக் கலாநிதிகள், பேராசிரியர்கள், வைத்தியக் கலாநிதிகள் மற்றும் கல்வியாளர்கள் உட்பட பல குடிசார் சான்றோர் விடுத்துள்ள கோரிக்கையை நாம் வரவேற்பது கட்டாயமானது. ஆனால் சிலர் அற்பத்தனமான கட்சி பேத அரசியல் பேசி அவர்களின் நல்மனதை நோகடிக்கும் செயல் கண்டிக்கப்பட வேண்டும். ஈழத் தமிழரின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை உரிமைகள் இல்லாத எந்த ஒரு அரசியல் தீர்வுக்கும் த.தே.கூ. ஒப்புதல் வழங்கக் கூடாது.

இதுவரை காலமும் வாக்கு வேட்டை அரசியல் நடத்தியவர்களால் எமது இனம் அழிவைச் சந்தித்தது போதும். மக்கள் நலனை, மக்களின் தேவையை, விருப்பை மதிக்காத அரசியல் தலைமையை இனிமேலும் அனுமதிக்க முடியாது. அரசியல் வாதிகளைக் கனவான்கள் என நினைத்து புத்தி சார் சமுதாயம் இனியும் ஏமாற முடியாது.

மக்கள் ஆட்சியில் மக்கள் அரசியலில் நேரடியாக ஈடுபட்டுத் தலைவர்களை உருவாக்குவதுதான் ஜனநாயகம். வாக்களிப்பது மட்டும் ஜனநாயகம் அல்ல. அந்த வாக்கைப் போடுபவர்களும் அவற்றைப் பெற்றுப் பதவிக்கு வருகிறவர்களும் சமநோக்கோடு செயலாற்ற வேண்டும். அத்தகைய பொறுப்பு இல்லாதபோது உரிய வகையில் தட்டிக் கேட்கவும் வாக்களித்த மக்களுக்கு உரிமை உண்டு.


இன்று அந்த உரிமையை எடுத்துள்ள சிவில் சமூகத்தைப் பாராட்டுவது ஒவ்வொரு பொறுப்பு வாய்ந்த தமிழனுக்கும் உண்டு. இதுவரை காலமும் அரசியல் பேசுவதைக் கேவலமாகக் கருதிய காரணத்தால் முழு இனமுமே பரிதாபமான அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

எனவே தொடர்ந்தும் சிவில் சமூகம் அரசியல் பேசும் அனைத்துத் தரப்பையும் ஒரு நிலைப்படுத்தி எமது வருங்கால அரசியலை ஒழுங்கு படுத்த வேண்டும். காட்டிக் கொடுத்து அரசியல் நடத்தும் பேர்வழிகளையும் கட்டுப்படுத்தும் வகையில் எமது சமூகம் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் இந்த சிவில் சமூகம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

சிவில் சமூகம் விடுத்திருக்கும் வேண்டுகோளைத் த.தே.கூ. ஏற்றுச் செயலாற்ற முடியவில்லை. சிங்களம் தருவதைப் பெற்று அதனால் வருகின்ற எமது தலைமுறையின் போராடிப் பெறும் உரிமையை மூடிவிடும் நிலையை உருவாக்கக் கூடாது.

தமிழ் மக்களை மீளா அடிமைகளாக சிங்களத்திடம் கையளிக்கும் கபட அரசியல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இந்த வகையில் குடிசார் சான்றோரைப் பாராட்டுவதோடு அவர்களின் தொடர்ச்சியான செயற்பாடும் தொடர வேண்டும் என அகரம் கேட்டுக் கொள்கிறது.




ETR
எட்டாவது ஆண்டில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
24மணி நேர
வானொலிச் சேவை
நிகழ்ச்சிகளுக்கான
தொலைபேசி இலக்கங்கள்:
Germany: 02381 97 25 560
Swiss: 032 510 38 25
France: 01 70 90 10 44
England: 020 70 43 10 55
Ca, Toronto: 416 900 36 53
Ca, Montreal: 514 228 37 52
Hotbird 13° - Freq: 11.200 (V) - S/R: 27500 - Fec: 5/6
www.etr.fm
Tel.: 00 49 (0) 23 81 95 66 09 - Fax: 00 49 (0) 23 81 97 25 556 - eMail: info@etr.fm


பிரமாண்டமான... மூன்று காட்சி அறைகள்
P.S.
தங்க நகைகளின் சமுத்திரம்
உயர்தர பட்டு ஆடைகளின் ஆலயம்
ரெடிமேட் ஆடைகளின் சிகரம்
உங்கள் முல்கைம் P.S. பவான் அண்ணாச்சி
Indische Textilien & Schmuck
Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388
142
P.S.50 Parkplätze
P.S.50 தரிப்பிடம்
Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.30
உங்கள் வீட்டு அனைத்து மங்களகரமான
நிகழ்வுகளுக்கும் 24 மணி நேரத்தில் வரும்
அனைத்து உயர்தர ஆடைகளை வாங்கிட!
அத்துடன் அனைத்து எடைகளில் தாலிக் கொடிகள்
உட்பட தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்,
அத்தனையும் இறக்குமதி செய்யப்பட்டவை
உங்கள் முல்கைம்
P.S. பவான்
அண்ணாச்சி கடை
Eppinghoferstr. 142,
45468 Mülheim an der Ruhr
Tel : 0208 4448958 Fax : 0208 4447943 H.P : 01722607388

புதிய லைக்காமொபைல் ப்ள்ஸ் சிம்முடன்!

# Lycamobile

சுவிட்சர்லாந்து

CHF 100.- வரை இலவசம்!

## சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

இந்தியா
கனடா
அமெரிக்கா

CHF 0.01 /min
வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

Lycamobile ப்ள்ஸ் இல் இருந்து Lycamobile ப்ள்ஸ் க்கு
CHF 0* /min

சிங்கப்பூர்
மலேசியா

CHF 0 /min
வீட்டுத் தொலைபேசி



| | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | CHF 0.09 /min | CHF 0.12 /min |
| ஐரோப்பா | CHF 0.01 /min | வீட்டுத் தொலைபேசி |

*அனைத்து அழைப்புக்களும் நிமிடக்கணக்கீட்டில் கட்டணம் அறவிடப்படும். லைக்காமொபைல் ப்ளஸ்ஸில் இருந்து லைக்காமொபைல் ப்ளஸ்க்கு ஒரு இணைப்புக்கு 19Rpனில் 30 நிமிடம் வரை உரையாடலாம். மேலதிகமாக வரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 19Rp என்கிற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை. *உள் நாடு மற்றும் வெளி நாடு இணைப்புக்கட்டணம் CHF 0.19

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.ch** 077 900 01 22 / 044 555 23 23

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

SBB CFF FFS, Media Markt, Inter Discount, k kiosk, SWISS POST, COOP, Fust, TELEFONCORNER, NAVILLE, Press & web, RELAY